மனிஜாதிக்கன்பர்




... செந்தமிழ் நூல் நிலையம்,
... நாயக்கரத் தெரு.
கும்பகோணம்.


ஆல்பர்ட் சுவைட்சர்

# 1. இளமை - பள்ளிக்கூட வாழ்க்கை

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த பெரும்புலவர் ஒருவர். அவர் பெயர் கணியன் பூங்குன்றனார் என்பது. ஒரு நாட்டின்-கண் உள்ள ஊர்களில் எந்த ஊரும் தமது ஊர் போன்றது என்று அவர் கருதினார். அவ்வாறு கருதியதற்குக் காரணம் எந்த ஊரிற் சென்றாலும், அந்த ஊர்மக்களோடு உறவுபூண்டு தம்மால் வாழ முடியும் என்று அவர் கருதினார் என்பது. தமது ஊரிற் புலவர்க்குச் செய்யப்படும் சிறப்பினைப் போலவே பிற ஊர்களிலும் சிறப்புச் செய்யப்படும் என்று அவர் நம்பினார். எனவே, பிற ஊர்களில் உள்ள மக்களும் தம்மொடு ஒத்து உறவாடி வாழ்வார்கள் என்று அவர் கருதினார் என்பது அறியப் படும். அவ்வாறே, ஒருவர் பிறந்த நாடு எதுவாயினும், பிற நாடுகளையும் தம் நாடுபோல் எண்ணி வாழ்தல் வேண்டும் என்ற விரிந்த மனப்பான்மை இக்காலத்தில் வற்புறுத்தப்படுகிறது. ஒவ்வொரு-வரும் தத்தமது நாட்டின் குடிமகார் என இருந்தாலும், உலகக் குடிமகார் என்ற நிலையில் வாழ்தற்குக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பது இக்காலத்திற் சொல்லப்படுகிறது. கற்றவர்க்கு எந்த ஊரும் சொந்த ஊர் ஆம் என்றும், எந்த நாடும் சொந்த நாடு ஆம் என்றும் திருவள்ளுவர்

கருதினர். கற்றவரை உலகத்தில் எந்தத் தேசத்து மக்களும் வரவேற்பர் என்பது அவர் கருத்து. அதனால்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்று மொழிந்தார்.

(ஒருவர் பிறந்தது ஒரு நாட்டில் ஆயினும், அவர் பிற நாட்டினருக்குப் பயன்படுமாறு வாழ்க்கை நடத்துவாரானால், அவரை வாழ்வாருட் சிறந்தவர் என மதித்தல் வேண்டும். அவ்வாறு மதிக்கத் தக்கவர் உலகத்தில் ஒரோவொருகால் ஒவ்வொரு நாட்டில் தோன்றியுள்ளனர். அவர் தம்முள் செர்மானிய குடிமகாராய்ப் பிறந்து, ஆப்பிரிக்கா தேசத்து மக்களுக்கு அரும்பணி ஆற்றிய ஒருவரது வரலாறு இங்கே சொல்லப்படுகிறது.) காந்தியடிகள் கடவுளிடத்து ஒருவர் அன்பு கொண்டுள்ளார் என்றால், அவர் மக்களிடத்துக் காட்டும் அன்பினால் அது புலப்படவேண்டும் என்றார். பிற உயிர்களுக்குத் தொண்டு ஆற்றுகின்றவர் யாவர் என்று தேடி ஆராய்ந்து, அவர் உள்ளத்தை உறைவிடமாகக் கொள்கிறார் கடவுள் என்பது காந்தியடிகளின் நம்பிக்கை. ஏழை எளியவர்கட்கும், சமூகத்தால் அழுத்தப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு இருக்கிற மக்கட்கும் யாவர் உள்ளத்தாலும் உடலாலும் உயிராலும் உழைக்கிறார்களோ அவரே சிறந்த அன்பினர் என்பது காந்தியடிகளின் நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு ஏற்ற வழியில் வாழ்க்கையை நடத்திய பெரியவர்

ஒருவரது வரலாறு இங்கே உரைக்கப்படுகிறது. அவர் பெயர் ஆல்பர்டு சுவைட்சர்) (Albert Schweitzer),

(சுவைட்சர், கய்சர்பர்கு (Gayserburg) என்னும் கிராமத்தில் 1875 சனவரி பதினுன்காம் தேதி பிறந்தவர். அந்தக் கிராமம் பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த கய்சர் பெருமகனுர் (Gayser) ஒருவருடைய பெயரையொட்டிப் பெயரிடப்பட்டிருந்தது. அந்தக் கிராமம் அல்சாஸ் (Alsace) என்ற ஊரை அடுத்தது. அல்சாஸ் என்பதோ அவர் பிறந்த காலத்திற் செர்மனிக்கு (Germany) உரிய ஊராக இருந்தது. 1918 நவம்பர் 11-இல் உலகப்போர் முடிவுற்றபொழுது செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி அல்சாஸ் பிரஞ்சு (French) தேசத்தோடு இணைக்கப்பட்டது. எனவே, சுவைட்சர் செர்மன் குடிமகனுராகப் பிறந்தவர் 1918-இல் பிரஞ்சுக் குடிமகனுர் ஆயினர். அவருடைய தகப்பனுர் கோயிலில் கிராமப் போதகராக வேலை பார்த்தவர். சுவைட்சருடைய பாட்டன்மார்கள் சிலர் சமய போதனைத் தொண்டு ஆற்றியவர்கள். அதனுல், அவர் பிறப்பு முதலே பிறர்க்கு அறிவுறுத்தும் பெற்றி பெற்றிருந்தார்.

(சுவைட்சர் தோன்றி ஆறு மாதம் ஆன பிற்பாடு, அவருடைய தகப்பனுர் கன்ஸ்பாக் (Gunsbach) என்ற பக்கத்துக் கிராமப் பிரசாரகராக மாற்றப்பட்டார். புது இடத்தில் மிக்க மகிழ்ச்சியொடு சுவைட்சரின் பெற்றேர்கள்

வாழ்ந்து வந்தார்கள். சிறு வயதில் சுவைட்சர் பலமற்றவராகவும் மெல்லியவராகவும் காணப் பட்டார். பிறந்து ஓராண்டு முடியும் வரையிலா வது அவர் உயிருடன் வாழ்வாரா என்றுகூட ஐயப் படக்கூடிய நிலையில் அவர் உருவம் இருந்தது. ஏனினும், நாளடைவில் உரம்பெற்று, அவர் வளர்வா ராயினர்.) சிறு வயதில், மூன்று அல்லது நான்கு வயது முதல், கன்ஸ்பாக் கிராமக் கோயிலில் நடை பெறும் வழிபாட்டிற்கு அவரை அவருடைய பெற்ருேர் எடுத்துச் செல்லுதல் உண்டு. மேடை மீது ஏதோ ஒரு பேய்வடிவம் உண்டு என்று அப்பொழுதெல்லாம் சுவைட்சர் அஞ்சியது உண்டு. அதற்குக் காரணம், அந்த மேடையில் உள்ள ஒரு கண்ணுடியில் தோன்றி மறைந்துகொண்டிருந்த ஓர் உருவம் ஆகும். அந்த உருவம் இசைக் கருவியை இயக்குபவர் ஒருவருடைய உருவம் என்பதை முதலில் சுவைட்சர் அறியவில்லை. போதகர் வழிபாடு செய்கிறபொழுதும் சொற் பொழிவு ஆற்றுகிறபொழுதும் அவ்வுருவம் மறைந்துவிட்டது என்றும், பிற நேரங்களில் அப் பேயின் உரு மேடைமீது தோற்றிற்று என்றும் அவர் கருதிக்கொண்டிருந்தார். போதகர் போவ தையும் வருவதையும் அறிந்துகொண்டு, அதற்கு ஏற்றவாறு இசை இசைப்பதற்காக அவருடைய இயக்கங்களைக் காணுதற்கென ஒரு கண்ணுடியைத் தம் எதிரே இசைஞர் வைத்திருந்தார். அந்தக் கண் ணுடியில் இசைஞருடைய தாடித்தலை வடிவம் சில நேரம் தென்படுதல் கண்டு, சுவைட்சர் அவ்வுரு

பேயுருப்போலும் என்று கருதி, சிறு வயதில் அஞ்சியதுண்டு என்று அவரே தம் வாழ்நாட் குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.

கன்ஸ்பாக் பள்ளியில் ஒரு சிறப்பு உண்டு. அஃதாவது, கத்தோலிக்கர்களும் பிராடெஸ்டெண்டர்களும் மாறி மாறி அதே இடத்தில் வழிபாடு செய்தார்கள் என்பது. இன்றுகூட சில கிராமங்களிலும், அறிவு நிரம்பிய பல்கலைக்கழகக் கல்லூரிகளிலும் இவ்வாறு வழிபாடு மாறி மாறி நடக்கின்றது. மேடைமீது மிக்க தொலையிற் செய்யப்படும் வழிபாட்டைக் கண்டு, கண்கள் எட்டிப்பார்க்க, மனம் வழிபாட்டில் ஆழ்ந்து விடுதற்குத் துணையாக மேடையமைப்பு இருப்பதாகச் சுவைட்சர் கருதினர். (சிறு வயது முதல் சுவைட்சருக்கு எளிய மக்களோடு உறவுகொள்வதில் ஆர்வம் உண்டாயிற்று. பள்ளிக்கூடத்திற்கு அவர் போகத் தலைப்பட்ட பொழுது, கிராம மாணவர் போலவே ஏனைய மாணவரொடு உறவுகொள்ள விரும்பினர். பெற்றோர்கள் நகர மனிதரைப்போல இருப்பதற்காக ஆடை வசதி செய்து தந்ததைக் கூடாதென ஒதுக்கியதோடு, எளிய உடைகளை வாங்கி உடுத்திக்கொண்டு அவர் பள்ளிக்கும் பிற இடங்களுக்கும் சென்றார். தாழ்த்தப்பட்டவர்களிடத்தும் ஒதுக்கப்பட்டவர்களிடத்தும் அவர்க்குச் சிறு வயதுமுதல் இரக்கம் தோற்றிற்று. எவராவது ஒரு மாணவரை வேறு சமய மாணவர் என்று கருதி மற்ற மாணவர்கள் துன்புறுத்தினல், துன்புறும் மாணவருக்கு அவர் துணையாகும் பழக்கம் உடைய

வர் ஆயினர். உயிருள்ள எல்லா மக்களிடத்திலும், உயிருள்ள பொருள்கள் அனைத்திடத்திலும் அன்பு காட்டவேண்டும் என்ற எண்ணம் உடையவர் ஆயினர் சுவைட்சர். ஏழு அல்லது எட்டு வயதில் ஒரு நாள் அவர் தம்முடைய நண்பன் ஒருவனோடு விளையாட வெளியே சென்றபொழுது, இருவரும் கவண்கல்லாற் பறவைகளைக் கொல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. நண்பனோ அவ்வாறு கொன்று கொன்று அப்பழக்கத்தில் ஊறியவன். சுவைட்சர் விளையாடுதற்கு எனச் சென்றாரே ஒழிய, பறவை களைக் கொல்லும் நோக்கத்தோடு செல்லவில்லை. விளையாடச் சென்ற இடத்தில், நண்பன் கவண் கல்லைக் கொடுத்து, அவனைப்போல எறிக என்று சொன்னமை, சுவைட்சர் கவண்கல்லை எறிவது போல எறிந்துவிட்டு ஓடிவிட்டார். நன்றாகக் குறி வைக்காத காரணத்தால், பறவை கொல்லப்பட வில்லை என்ற எண்ணம் நண்பனுக்கு உண்டாகும் படி செய்துவிட்டு அவர் ஓடிவிட்டார். அவ்வாறு அவர் செய்தமைக்குக் காரணம் பறவைகளிடத்தும் விலங்குகளிடத்தும் மனிதன் அன்பும் இரக்கமும் காட்டவேண்டும் என்று எண்ணியதே ஆகும். குறி தப்பிக் கவண்கல் விட்டெறியப்பட்ட பொழுது, பறவைகள் எல்லாம் அவருடைய தோழனின் கைக்கு அகப்படாமல் அஞ்சிப் பறந்து போய் விட்டன. எனவே, மிக்க மகிழ்ச்சியோடு சுவைட்சர் வீட்டிற்கு வேகமாய் ஓடிப் போய்விட்டார்.

மன்பதைகளிடத்தில் சுவைட்சர் அன்புள்ள வர் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு இது.

வழக்கமாக வீட்டிற் சொல்லப்படும் வழிபாட்டுரைகளோடு அவர் புதுவதாக ஒன்று புகுத்திக்கொண்டார். நாடொறும் உறங்கச் செல்லும் பொழுது தாயார் முன்னிலையில் குடும்ப வழிபாட்டுரைகளைச் சுவைட்சர் சொல்லிய பிற்பாடு, உறங்குமுன் மற்றொரு சிறு வழிபாட்டினையும் அவர் தமக்கே உரிய தாக்கிக் கொண்டார். "மூச்சுவிடுகின்ற எல்லாப் பொருள்களையும், ஆண்டவனே, காப்பாற்றி அருள்க; தீமையினின்று அவற்றைக் காப்பாற்றுக; அவை அமைதியொடு உறங்கட்டும்" என்பதே அவர் புதுவதாக உண்டாக்கிக்கொண்டு, நாடொறும் தமக்குள் சொல்லிக்கொண்ட கடைசி வழிபாட்டுரை. இதிலிருந்து அவருடைய உள்ளம் புலப்படும்.

சிறு வயதில், அவருடைய சுருட்டைத் தலைமயிர் எவ்வளவு சீவினாலும் நிமிர்ந்து நிமிர்ந்து நின்றுவிடும். வயது முதிர்ந்த காலத்திலும், அவரது தலைமயிர் கட்டிற்கு அடங்கி ஒழுங்காக அமைவதில்லை. சிறு வயதில் அவருடைய தலைமயிரைச் சீவி வகிடு எடுத்துவிட்ட பணிப்பெண் ஒருத்தி அடிக்கடி எண்ணெயை அப்பி, கோதி, வாரி முடித்து வந்தாளாயினும், மணிக்குமணி அந்தத் தலைமயிர் நிமிர்ந்து நின்று விடுவதைக்கண்ட அவள் அவரைப் பார்த்து, "நீ கட்டுக்கு அடங்காமல் இருப்பது போலவே உன் தலைமயிரும் கட்டுக்கு அடங்காமல் இருக்கிறது" என்று அடிக்கடி கூறினாள். யாது சொல்வது எனத் தெரியாமல் சுவைட்சர் திகைத்து நின்ற நேரங்கள் பல. ஒரு

நாள் சுவைட்சர் அருட்டிரு. ஜான் (St. John) என்பாருடைய ஓவியம் ஒன்றைக் கண்டார். அந்த ஓவியத்தில் அருட்டிரு. ஜானினுடைய தலைமயிர் புடைத்துக்கொண்டு நிற்பதாகவே காட்சி அளித்தது. அக்காட்சி அவருக்குப் பேருவகையை விளைத்தது. "அவருடைய வளையாத தலைமயிர் அவர் கருணை நெஞ்சினர் ஆவதற்குத் தடையாக இருந்ததில்லையே! ஆனால் ஒருவருடைய இயல்பினை ஒருவருடைய தலைமயிர் காட்டும் என்று கூறுவது ஒரு வேளை பொருந்தாததுபோலும்!" என்று சுவைட்சர் கருதினார்.

இளமையில், அவர் ஒரு பக்கம் செழிப்பினையும், மறுபக்கம் மக்கள் கண்ணீர் விடுவதையும் கண்டார்; தம் குடும்பத்தாருடைய வாழ்வின் நலன்களையும், உடன் படிக்கும் மாணவர்களுடைய வறுமைத் துயரங்களையும் ஒப்பிட்டு நோக்கினார். மற்ற மாணவர்களிற் பலர் விரல் இல்லாத கையுறைகளை விரல்போல் அமைத்துத் தைக்கப்பட்ட தோல்களை உடைய கையுறைகள் (gloves) என அணிந்திருந்தமையால், தாமும் விரல் இல்லாக் கையுறைகளையே அணிந்துகொள்வதாகத் தாயாரிடம் தெரிவித்துவிட்டார். தாயாரோ அவர் அவ்வாறு செய்வது தமது உயரிய வாழ்க்கைநிலைக்கு ஒவ்வாது என்று கருதினார். எனினும், சுவைட்சர் ஏழை மாணவர்களுடைய உடையைப் போன்ற உடையையே அணிவதில் விருப்பம் கொண்டார். ஒரு நாள், அவருடைய தாயார் நல்ல மேலங்கி செய்து தந்தார். மற்ற மாணவர்கள் மேலங்கி அணிவதில்லை

ஆதலால், சுவைட்சர் அதனை அணிந்துகொள்ள மறுத்துவிட்டார். இவ்வாறு, சிறு வயதில் எளியார்பொருட்டுச் சுவைட்சர் எண்ணிய எண்ணங்கள் வயது ஏற ஏற, வலியுடையனவாகி, நல்ல பயன் விளைத்தன என்பது பின்னர் விளங்கும்.)

(கிராமப் பள்ளிக்கூடத்திலிருந்து அவர் ஒன்பதாவது வயதில் மல்ஹாசன் (Mulhausen) என்னும் ஊரில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்.) அவ்வூரில் லூயிஸ் (Louis) என்ற அவருடைய மாமனும், சோபி (Sophie) என்ற அவருடைய மாமியும் மகவின்றி வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய இல்லத்திலிருந்து பள்ளிக்கூடத்திற் படிக்கும் வாய்ப்பினைச் சுவைட்சர் பெற்றார். அந்த வீட்டில் ஆற்றப்பட்ட செயல்கள் எல்லாம் கடுமை உடையனவாகவும் நெறி உடையனவாகவும் இருந்தன. எனினும், அவ்விருவரும் சுவைட்சரை மிக்க அன்புடன் பேணினார்கள். (மல்ஹாசன் பள்ளிக்கூடத்திற் சுவைட்சர் எட்டு ஆண்டுகள் கற்றார். சில நேரங்களில், அவருடைய ஆசிரியர்கள் அவரைக் கனவுலகத்தில் வாழும் அரைப் பித்தன் என்று கருதினார்கள். ஒருவேளை அவர் சம்பளவுதவி பெறுதற்குத் தகுதியற்றவர் என்று தலைமை ஆசிரியர் நினைத்தற்கு இவ்வாறு ஆசிரியர்கள் கருதியது ஒரு காரணம். எனினும், நாளடைவில் ஆசிரியர்கள் அவரை நன்கு அறிந்துகொண்டார்கள். நாளடைவில், மற்ற மாணவர்களைக் காட்டிலும் ஒளி உடையவராக அவர் திகழலுற்றார். முதலில், இசைப் பாடங்களில் அவர்

தோல்வியே உற்ருர். முதலில், அச்சம் காரணமாகவும் வெட்கம் காரணமாகவும் சுவைட்சர் பாட முடியாமல் இடர்ப்பட்டார். அவரை இசை வகுப்பில் வைத்துக்கொண்டிருப்பது வீண் என்று ஆசிரியர் கருதியதற்கு மாருக, சில வாரங்களில் ஆசிரியர் வியக்கும்வண்ணம் சுவைட்சர் முன்னேற்றம் அடைந்தார். நாளடைவிற் கோயிலுக்கு அழைத்துப் போய், அங்குள்ள இசைக்கருவிகளை வாசிப்பதற்குக்கூட ஆசிரியர் வசதி செய்து தந்தார். இசையாசிரியர் மஞ்சு (Munch) என்பார் கோயிலில் இசை இசைக்க முடியாத நேரங்களில், சுவைட்சரைத் தமக்குப் பதிலாக இசைப்பதற்கெனத் தேர்ந்தெடுத்து அனுப்பினுர். சுவைட்சருக்கு உள்ள இசை ஆர்வமும் இசை ஆற்றலும் வெளிப்படத் தொடங்கின. வரலாறும் இலக்கியமும் சுவைட்சருக்கு உகந்த பாடங்கள். உயிர் நூலிலும் அவருக்கு ஆர்வம் உண்டு. கணக்கு ஒன்றுதான் அவருக்குக் கடுமையான பாடம்.)

(பதினெட்டாது வயதில் சுவைட்சர் மல்ஹாசன் பள்ளிக்கூடத்திலிருந்து விடை பெற்ருர். தேர்வில் வெற்றிபெற்ருர். ஆயினும், எதிர்பார்த்தபடி நிரம்பிய மதிப்பெண்களோடு அவர் வெற்றி பெறவில்லை. தம்முடைய மாமன் மாமியருக்கு உளமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அவர் தாய் தந்தையர் இருக்கும் இடஞ் சென்ருர். அவர் தேர்ச்சியில் வெற்றியோடு திரும்பியது குறித்துப் பெற்ருேர்கள் மகிழ்ந்தார்கள். எனினும், சுவைட்சர் மனத்தில் ஏதோ ஒரு துயரம்

உறுத்திக்கொண்டு இருந்தது. தம்மை வாழ்க்கை நலங்களொடு இருக்குமாறு செய்திருப்பதற்காகப் பெற்றோர்களுக்கு அவர் நன்றி மிக்குடையவராக இருந்தார். எனினும், தம்மைச் சுற்றியுள்ள ஏழை மக்கட்கு ஏதாவது நல்லதொன்று தாம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தைப் பற்றிக்கொண்டுவிட்டது. ஒருவர் வாழ்க்கை நலங்களொடு இருக்கிறார் என்றால், அதற்குப் பதிலாகத் துயருறுபவர்களுக்கு அவர் செய்யவேண்டிய கடமை ஒன்று உண்டு என்ற அருங்கருத்து அவரிடம் தோன்றிற்று. ஒருவர் தமக்காக வாழ்வதைக் காட்டிலும், பிறருக்காக வாழ்தல் நல்லது என்ற கருத்து அவர் உள்ளத்தில் நன்றாக வேரூன்றிவிட்டது. இதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பதை அவர் இன்னும் முடிவு செய்யவில்லையாயினும், வாழ்நாளில் ஒரு நாளாவது அது தக்க வகையில் உருவாகி வெளிப்படும் என்பது மட்டும் உறுதி. எவ்வாறு அது வெளிப்பட்டது என்பதைப் பிறகு காணுதல் இயலும்.

## 2. பல்கலைக் கழகம்

(ஸ்டிராஸ்பர்கு (Strasburg) பல்கலைக் கழகத்திற் சுவைட்சர் சமயக் கல்வியும் மெய்ந்நூற் கல்வியும் கற்பதற்காகப் புகுந்தார். சமயக் கல்வி கற்பதென்பது அவருடைய பெற்றோர் வழியாக அவருக்கு உண்டான ஆர்வம். பல்கலைக் கழகத்தில் அவர் படிக்கத் தொடங்கி ஓராண்டு ஆனபிற்பாடு, கட்டாயப் படைக்கலப் பயிற்சிக்காக அவர் பல்கலைக் கழகப் படிப்பை விடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஓராண்டு பயிற்சிக்குப் பிறகு, அவர் பல்கலைக் கழகத்திற்குத் திரும்பி வந்து, சமயக் கல்வியைத் தொடர்ந்து கற்ருர். சிறப்பாக, ஏசுநாதருடைய வரலாறுகளையும் வாக்குகளையும் பேராராய்ச்சியொடு கற்ருர்.)

(பல்கலைக் கழகத்திற்குச் செல்லுமுன் விடுமுறையில் பாரீஸ் (Paris) நகரத்திற்கு ஒரு நாள் சென்ருர். அக்காலை விடார் (Widor) என்பார் ஒருவருடைய நட்பு அவருக்குக் கிட்டிற்று. விடார் சுவைட்சரைவிட வயதில் முப்பது ஆண்டுகள் மூத்தவர். எனினும், அந்நட்பு நவில்தொறும் நூல்நயம்போலப் பயில்தொறும் பெருகுவதாயிற்று. விடார் என்பவரோ சமய இசைப் பாடல்கள் அமைத்து, அர்ச். சல்பிஸ் (St. Sulpice) கோயிலில் இசைப்பவர். இவ்விருவருடைய நட்பும் இருநிலம் பிளக்கும் அளவு வேரூன்றிய பெருநட்பு ஆயிற்று.)

(மாணவராய் இருந்தபொழுது, அவருக்கு உகந்த கொள்கைகள் அமைந்ததொரு பாட்டை அவர் பரவுவது வழக்கம்.) அதனை அட்டையில் எழுதித் தமது அறையில் தொங்கவிட்டிருந்தார்.

" மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக!
மனக்கினிய கனுக்களொடும் விருப்புக்களொடும்
மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக!
நீ விரும்பி மனக்கொளும் குறிக்கோள் எல்லாம்
மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக!
இடிவரினும் முகில்சூழினும் உயர்வன ஆகுக!
நம்பிக்கை என்னும் இன்னொளி யினாலே
மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக!"

என்ற கருத்துடைய பாட்டை அவர்முன் எழுதி வைத்துக்கொண்டு அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு இருந்தார். (எவ்வாறுவது, பிறர்க்கு உதவியாக இருக்கவேண்டும் என்பதே மீண்டும் மீண்டும் அவர்பால் எழுந்துகொண்டிருந்த எண்ணம். ஒருவர் செல்வத்தையும் உடல் நலத்தையும் பிற வசதிகளையும் பெற்றிருக்கிறார் என்றால், அவைதம்மிலிருந்து பிறருக்காகத் தரும்படி நிறையக் கேட்கப்படுவார் என்று எதிர்பார்ப்பது பொருத்தமானதே என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர் சுவைட்சர். அந்த நம்பிக்கையிலேயே அவர் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து படித்து வந்தார். சமயக் கல்வி, மெய்ந்நூற் கல்வி, இசைக் கல்வி ஆகியவற்றிற்காகப் பல்கலைக் கழகத்தில் அவர் ஒன்பது ஆண்டுகள் கழித்தார்.

முப்பதாவது வயதுமுதல் வாழ்நாளில் எஞ்சும் பகுதி யெல்லாம் தம்மைவிடத் தாழ்ந்தவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உழைப்பது என்று முடிவு செய்துகொண்டார். அது எந்தவிதமான பணி என்பது மாத்திரம் அவருக்குப் புலப்படவில்லை. வீடு அற்றவர்கள், தாய்தந்தை அற்றவர்கள் ஆகிய குழந்தைகளுக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவி செய்தல் கூடாதா என்று முதலில் அவர் எண்ணினார்; சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுடைய உள்ளத்தைச் சீர்ப்படுத்துதற்குச் சில வேளைகளில் முயன்றார்.)

(சுவைட்சர் ஒன்பது ஆண்டுகள் பல்கலைக் கழகப் படிப்பிற் கழித்தார் எனினும், அவை எல்லாம் ஓர் இடத்திலேயே படிக்கப்பட்ட படிப்புக்கள் அல்ல. பல்கலைக் கழகத்திற் சேர்ந்து நான்கு ஆண்டுகள் ஆனவுடன் சமயத்துறையில் ஒரு பெருங்கட்டுரை எழுதினார். அப்பெருங் கட்டுரையைப் பாராட்டி ஓர் உதவித்தொகை கொடுக்கப்பட்டது. அவ்வுதவித்தொகையைக் கொண்டு அவர் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். அவர் செய்யவேண்டுவதெல்லாம் ஆறு ஆண்டுகளுக்குள் அப்பல்கலைக் கழகத்திற்குத் திரும்பி வந்து, சமயக் கல்வி போதிப்பதற்கு உரியவர் (Licentiate in Theology) என்ற பட்டம் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும் என்பது தான். சுவைட்சர் ஆறு ஆண்டுகளையும் பல தேசங்களிற் சுற்றிக் கழித்திருந்தால்கூடத் தடை செய்வார் இல்லை. அவ்வாறு செய்ய அவர்க்கு

உரிமை உண்டு. எனினும், ஆறு ஆண்டுகள் முழுதும் அவர் சுற்ருமல், முன்னரே தமது உதவித் தொகையை வேறு ஒருவர்க்கு அளிப்பதற் காக விட்டுக் கொடுத்தார். அவரைக் காட்டிலும் எளிய மாணவர் ஒருவர் அத்தொகையை நாடும் அளவிற்கு எளிமை உடையவராய் இருந்தமையா லும், அவர் விட்டுக்கொடுத்தால் அத்தொகை அம் மாணவர்க்கு கிடைத்தல் கூடும் என்று தெரிந்த மையாலும், சுவைட்சர் அதனை ஆறு ஆண்டுகட் கும் தமக்கு உரியதாக்கிக்கொள்ளாமல், முன்னரே விட்டுக்கொடுத்தார். அந்த உதவித்தொகையைக் கொண்டு முதலிற் பாரிசிற்குப் போய் நல்ல உழைப் பொடு மெய்ந்நூல் கற்றுக்கொண்டார்; காண்ட் (Kant) என்ற மெய்ஞ்ஞானியைப்பற்றிப் பெரிய தொரு கட்டுரை எழுத எண்ணிஞர். மறுபடியும், விடார் என்ற நண்பரைக் காணுதற்கு வாய்ப்புக்கள் இப்பொழுது ஏற்பட்டன. அவரிடம் இசைக் கல்வியை மேலும் பெற்ருர். வேறு இரண்டு ஆசிரி யர்களிடமிருந்து பியானே பாடம் பயின்ருர். அவ்விரண்டு ஆசிரியர்களும் பியானேவில் இரு வேறு விதமாக வாசிக்கவேண்டும் என்று கருதி இருந்தார்கள்! இருவரும் இரு வேறு விதமாகவே கற்பித்தார்கள். எனினும், அந்தந்த ஆசிரியர் முன்னிலையில் வாசிக்கும்பொழுது அவரவர் கற் பித்த வண்ணம் தவருமல் வாசிக்கும் ஆற்றலைச் சுவைட்சர் பெற்றிருந்தார். விடார் சுவைட்சருக் குப் பாடம் கற்பித்த வேளைகளில், செர்மன் மொழியி லுள்ள பாக் (Bach) இசைப்பாடல்களைப்பற்றிச்

சுவைட்சர் நாளடைவில் ஒரு புத்தகம் எழுதுதல் வேண்டுமென்று குறிப்பிட்டார். அதற்குக் காரணம் விடார் என்னும் பேராசிரியர்க்குப் பாக் பாடல்களின் பண்கள் தெரியாமை அன்று; அப் பாடல்களில் அமைந்த சொற்களின் பொருள் நன்கு விளங்காமை. அப்பாடல்கள் செர்மன் மொழியில் இயன்றவை. விடாரோ பிரஞ்சு மொழியில் வல்லவர். பிரஞ்சு மொழியும் செர்மன் மொழியும் ஒருங்கே அறிந்திருந்த சுவைட்சர் பாக் பாடல்களை நன்ருகச் சுவைத்தார். சொல்லின் பொருளை நன்ருக அறிந்ததால் அன்ருே பண்ணும் பயன்பட்டது என்பதை விடார் ஆகிய தம் ஆசிரியர்க்குச் சுவைட்சர் ஒரு நாள் விளக்கினுர். அப்பொழுதுதான், பாக் என்பாரின் செர்மன் இசைப்பாடல்களைப்பற்றி ஆராய்ந்து சுவைட்சர் ஒரு நூல் எழுதுதல் வேண்டுமென்று விடார் கூறினுர்.)

(பாரீசில் இருந்த பொழுது, மெய்ந்நூலிலும் நல்ல ஆராய்ச்சி செய்து, காண்ட் என்ற மெய்ந் நூற் பேராசிரியரைப் பற்றி விரிவான ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி ஸ்டிராஸ்பர்கு பல்கலைக் கழகத் திற்குச் சுவைட்சர் தந்தார். அதனை ஏற்றுக் கொண்டபின், அவருக்கு டாக்டர் பட்டம் கொடுக் கப்பட்டது. இப்பட்டம் அவருடைய இருபத்து நான்காவது வயதிற் கிடைத்தது என்பது குறிப் பிடத் தக்கது. அவ்வாண்டில்தானே ஸ்டிராஸ்பர் கில் உள்ள அர்ச். நிக்கலஸ் கோயிலிற் போதக ராக அவர் நியமிக்கப்பட்டார்; அடுத்த ஆண்டு

பல்கலைக் கழகத்தில் மெய்ந்நூல் போதிப்பதற்குரிய பயிற்சிப் பட்டத்தைப் பெற்றார். பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளராக அவர் நியமிக்கப் பட்டார். இருபத்தெட்டாவது வயதில், ஒரு சமயக் கல்லூரிக்கு அவர் முதல்வர் ஆயினார். பாக் என்பாரைப் பற்றி அவர் பிரெஞ்சு மொழியில் எழுதிய புத்தகம் 1905-இல் வெளியாயிற்று. புத்தகப் பிரதிகள் பல விரைவில் விலைபோயின. அவ்வாண்டில் விடார் என்னும் ஆசிரியரோடும் வேறு சில இசைஞர்களோடும் கூடி, சுவைட்சர் பாரீஸ் நகரத்தில் ஒரு சங்கம் அமைத்தார். அந்தச் சங்கத்தின் வாயிலாகப் பாக் இசைப்பாடல்களைத் தக்க முறையிற் பரப்புவதே நோக்கம். சுவைட்சர் அடிக்கடி ஸ்டிராஸ்பர்கிலிருந்து பாரீஸ் நகரத்திற்குப் போய், இசையரங்குகளில் தாமே இசைக் கருவியை இயக்கினார். அவர் எழுப்பும் இசையைக் கேட்க மக்களுக்குப் பேரார்வம் உண்டாயிற்று.)

(இவ்வாறு சமய நூற்கல்வி, மெய்ந்நூற் கல்வி, இசைக்கல்வி ஆகிய கலைகள் வழியாகச் சுவைட்சர் புகழ் பெற்றவராக இருந்ததால், இத்துறைகளுள் ஒன்றிலோ பலவற்றிலோ மேன்மேலும் உழைத்து அவர் உலகத்திற் பெரும்புகழை நிறுவி இருத்தல் கூடும். ஆயினும், அத்துறைகளுள் ஒன்றனில் அவர் எண்ணம் செல்லாமல், வேறொரு துறையில் செல்வதாயிற்று. அதற்குக் காரணம் அவர் முன்னரே பிறர்க்காக உழைக்கவேண்டுமென்று செய்திருந்த முடிவும், ஆப்பிரிக்காவில் நீக்ரோ மக்கள் உறங்கும் நோயால் (Sleeping Sickness)

இடர்ப்பட்டு நூற்றுக் கணக்காக இறக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட செய்தியும் ஆகும். அந்நோய் உற்றவர்கள் தலைவலியினாலும், பெரு மயக்கத்தினாலும், பெருஞ் சோர்வினாலும் இடருற்று இறந்துபடுகிறார்கள் என்பதைக் கேள்வியுற்றார். உடன், பல்கலைக் கழகத்தில் மறுபடியும் மாணவராகச் சேர்ந்து, மருத்துவத் தேர்வு பெற்று, ஆப்பிரிக்க மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று அவர் கங்கணம் கட்டிக்கொண்டார். பிறர்க்கு உதவி செய்யவேண்டுமென்று மனத்தினால் எண்ணியதைச் செயற்படுத்துதற்கு உரிய காலம் அணுகிக்கொண்டிருந்தது. இவ்வாறு, தாம் முடிவு செய்ததைத் தெரிவித்து, தம்முடைய பெற்றோர்களுக்கும் நண்பர்களுக்கும் உடனே கடிதம் எழுதிவிட்டார் சுவைட்சர். பலர் அவருடைய முடிவினின்று அவரை அசைக்கப் பார்த்தனர். ஆப்பிரிக்க மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றால், நல்லாசானாகச் சென்று, போதகராகச் சென்று, தொண்டு ஆற்றக் கூடாதா என்று பலர் கேட்டனர். மருத்துவத்தைப் பற்றி ஒன்றும் அறியாத அவர் மருந்தினைப் பற்றிப் புதுவதாகக் கற்றுத் தேர்ந்துதான் தொண்டு ஆற்றப் போக வேண்டுமா என்று கேட்டனர் சிலர். ஆசிரியர் விடார் என்பார்கூட அவரை மருத்துவத்தினின்று தடுத்து இசையில் திருப்புதற்கு முயன்றார். சுவைட்சர் அப்பணியில் இறங்காது போனால், பிறர் ஒன்றையும் இழக்காமல் அப்பணியில் ஈடுபடுதல் கூடுமே என்று சிலர் சொன்னார்கள். சுவைட்சரோ

மலை அசைந்தாலும் நிலை குலையாத வீரர். அவர் கருமத்தை எண்ணித் துணியும் இயல்பினர்; துணிந்தபின் அதனை மீண்டும் எண்ணிப் பார்த்து இழுக்குறும் இயல்பினர் அல்லர்.)

(அந்த எண்ணம் உருவாவதற்கு உரிய வழி அவருக்கு 1896-இல் தோற்றிற்று. தோற்றுதற்குக் காரணம் அவர் சிறு வயதில் ஓர் உருவச் சிலையைப் பார்த்தமை. அந்த உருவம் ஆப்பிரிக்க நீக்ரோவர் ஒருவர் துயரம் தேக்கிய முகத்தொடும் கரு நிறத்தொடும் காணப்பட்ட வடிவம். அந்த நீக்ரோவர் உருவத்தைப் பார்த்தவுடன் சுவைட்சருக்குக் கழி பேர் இரக்கம் உண்டாயிற்று. அந்த உருவச் சிலையை அவர் முதல்முதல் கண்டது கால்மர் (Colmar) என்ற இடத்தில் அமைந்திருந்த உருவத் தொகுப்பில் என்பார்கள்.

அவ்வுருவத்தினைச் சுவைட்சர் காண நேர்ந்தமை ஒரு வியப்பான செய்தியாகும். சுவைட்சருடைய வளர்ப்புத் தாயார் ஒரு நாள் சிறுவன் ஒருவனுடன் அவரை விளையாடப் போகவிட்டார். ஆற்றிற்குப் போகக்கூடாது என்றும், சிறப்பாகப் படகிற் செல்லக்கூடாது என்றும் பணித்து அனுப்பினார் அவர். அவ்வாறு இருந்தும், பல குறுந் தெருக்களின் வழியே அச்சிறுவன் சுவைட்சரை அழைத்துக் கொண்டுபோய், கடைசியில் ஆற்றுப் பக்கம் போய்ச் சேர்ந்தான். படகோட்டியின் ஓவியத்தைக் கண்டு முன்னர் மகிழ்ந்திருந்த சுவைட்சருக்கு, படகோட்டி ஆகவேண்டும் என்ற எண்ணம் முன்னரே பெற்றிருந்த சுவைட்சருக்கு,

ஆற்றிற் படகு செல்லுங் காட்சி இனிமை தந்தது பொருத்தமே. சுவைட்சரின் தாயார் படகோட்டியின் வேலை எவ்வளவு கடினமானது என்பதை எடுத்துக் காட்டி, அவரை அவ்வெண்ணங் கொள்ளாமல் தடுப்பதற்கு முன்னர்ப் பல முறை முயன்றுள்ளார். இப்பொழுதோ, உடன் வந்த தோழன் ஒரு படகினை அவிழ்த்துக்கொண்டு அதனிற் செல்லலாம் என்று சொல்லியபொழுது, முதலிற் சுவைட்சர் மறுத்தார் ஆயினும், முடிவில் அத் தோழனொடு புறப்பட்டுவிட்டார். அவன் துடுப்பை இயக்கி அப்படகினைச் செலுத்தத் தலைப்பட்டான். இருமருங்கிலும் வளர்ந்து கிடந்த மரங்களின் கீழ்ப் படகு இனிமையாகச் செல்லத் தலைப்பட்டது. அந்தப் படகிற் சென்றதால்தான் \ஆப்பிரிக்க நீக்ரோவருடைய அவ்வுருவச் சிலையைச்சுவைட்சர் பார்க்க நேரிட்டது. அதைக் கண்ட காரணத்தால் தான் நீக்ரோ மக்களுக்குத் தாம் எவ்விதத்திலாவது உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்க்கு உண்டாக, அவர் தமது முப்பதாவது வயதில் ஆப்பிரிக்காவிற்குச்சென்று நீக்ரோ மக்களிடையே வாழத் தொடங்கி, அவர்களுக்காக உழைக்க முன் வந்தார். \

1905-இல் நீக்ரோ மக்கள் பெருநோய்களினால் இறந்துபடுகிறார்கள் என்ற செய்தியை ஒரு பத்திரிகை வாயிலாக அவர் அறிந்துகொண்டார். அதனால், 1906-ஆம் ஆண்டில் ஸ்டிராஸ்பர்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் ஒரு மாணவனாக அவர் சேர்ந்துவிட்டார். அவ்வுலகமே

அவர்க்கு வேறொரு உலகமாகத் தோற்றிற்று. மருத்துவக் கல்லூரியிற் சில வகுப்புக்களிலிருந்து அவர் திரும்பும்பொழுது களைத்து அலுத்துச் சோர்வுற்றுத் திரும்பியதுண்டு. எனினும், தம் சோர்வினை ஒதுக்கி வைத்துக்கொண்டு, இடையிடையே இசைப் பயிற்சியால் அதனை அகற்றிக் கொண்டார். மருத்துவத் துறையில் ஏழாண்டு அவர் பயின்றார். இடையிடையே, இசையும் சமயக் கல்வியும் பயிலுதற்கு வாய்ப்புக்களை அவர் எவ்வாறோ அமைத்துக்கொண்டார். இடையில், 1912-இல், அர்ச். நிக்கலஸ் கோயிலிற் போதகராக வும் ஆசிரியராகவும் குறைநேரம் வேலை செய்வார் ஆயினார்.

இடையில், அவர் எழுதிய சில புத்தகங்கள் விற்கத் தொடங்கின. அவர் ஏறிய இசையரங்கு களில் வெற்றி உண்டாயிற்று. புத்தகங்கள் வாயி லாகவும், இசையரங்குகள் வாயிலாகவும், விரிவுரை கள் வாயிலாகவும் மருத்துவச்சாலை நடத்துதற்கு இரண்டு ஆண்டிற்குரிய பணம் கிட்டிற்று. சுவைட் சர் ஆப்பிரிக்காவிற்கு மருந்துகளைப் பெட்டியிலும், தங்கத்தைக் கையிலும் கொண்டுபோகக் கருதினார். ஒருவேளை, போர் மூண்டால் வங்கிப் பத்திரங்கள் செல்லாது போய்விடும் எனக் கருதி, உடன் தங்க மும் கொண்டுபோக ஏற்பாடு செய்துகொண்டார். பிரஞ்சு தேசத்துப் பாரீசிலும், ஸ்பெயின் தேசத்து மாட்ரிட்டிலும் (Madrid) அவர் நிகழ்த்திய இசை யரங்குகள் வழியாக வருவாய் உண்டாயிற்று. அவ் வூர்களில் அவருக்கு அமைந்த நண்பர்கள்

வாயிலாகவும் மருந்துச் செலவிற்கு வேண்டிய பணம் உதவித்தொகையாகக் கிட்டிற்று. ஏசுநாத ரைப்பற்றியும், அருட்டிரு. பால் (St. Paul) என்பாரைப் பற்றியும், பாக் என்பாரைப் பற்றியும் அவர் எழுதிய நூல்கள் விலைபோயின. 1912-இல் நிக்கலஸ் கோயில் வேலையை அவர் விட்டுவிட்டார். அவருடைய முப்பத்தேழாவது வயதில் (1912 ஜூன் 18-ஆம் தேதி) அவர் ஹெலன் பிரஸ்லௌ (Helene Bresslau) என்ற அம்மையாரை மணந்து கொண்டார். அவ்வம்மையார் வரலாற்றுப் பேரா சிரியர் ஒருவருடைய மகளார். இருவரும் கருத்து ஒருமித்த காதலராய் இருந்தனர். ஆப்பிரிக்காவிற் போய் உழைக்கவேண்டும் என்ற சுவைட்சர் எண்ணத்திற்குத் துணைசெய்ய ஹெலன் காத் திருந்தார். சுவைட்சர் பாரீசிற்கு மறுபடியும் போய், வெப்ப நாடுகளில் உண்டாகுஞ் சிறப்பு நோய்களுக்கு மருந்து காண்பதிற் சிறப்புப் பயிற்சி பெற்றார். இவ்வாறு, மேலே செய்ய வேண்டிய பணிகளுக்குத் தம்மைச் செம்மைப் படுத்திக்கொண்டார்.)

# 3. காட்டோரம்

பாரிசிலிருந்து மூன்று வாரப் பிரயாணத்திற்குப் பிறகு. லாம்பரீன் (Lambarene) என்ற இடத்தை அடைதல்கூடும். அது ஒரு காட்டுப் பிரதேசம். அதனை அடைதற்கு ஒகோவே (Ogowe) என்னும் ஆற்றின் வழியாகச்செல்லுதல்வேண்டும். ஆற்றின் இருமருங்கும் பெருங்காடு உண்டு. மரங்களிலிருந்து குரங்குகள் தொங்கிக்கொண்டிருக்கும். புலிக்குட்டிகள் தாய்ப்புலியைத் தேடிக்கொண்டு திரியும். மரங்களின் தாள்களிலும் அடி வேர்களிலும் எத்துணையோ கொடிய விலங்குகள் மறைந்து கொண்டு இருப்பதுண்டு. அக்காட்டில் எங்கணும் முட்புதர்கள் மொய்த்த தரையும், கருங்கற்கள் நெருங்கிய இடமும் உண்டு. வானிடை ஒரு வானம் அடர்ந்திருப்பதைப்போலப் பெரிய வண் கிளை மரங்கள் வீறுகொண்டு நிற்றலுண்டு. ஒகோவே ஆறு ஒரு சிற்றாறு அன்று; பல காட்டாறுகள் வந்துகூடும் ஒரு பேரியாறு. சில காட்டாறுகள் பெரிய ஏரி அளவு பரந்துபட்டவை. அந்தக் காட்டாறு வழியாகப் படகினை ஓட்டிச் செல்லுவோர் திறமை உடையவராய் இருத்தல் வேண்டும். அதன் ஆழத்தையும் அகலத்தையும் நன்கு அறிந்தவர்கள் படகினை இயக்க, டாக்டர் சுவைட்சரும் அவர் மனைவியும் அலெம்பெ (Alembe) என்ற படகினில் போய்க்கொண்டு இருந்தனர்.

ஒகோவே ஆற்றினைக் கடப்பதற்கு முன்னர், அட்லாண்டிக் (Atlantic) கடலில் யூரோப் (Europe) என்ற கப்பலிற் சுவைட்சர் பாரீசி லிருந்து புறப்பட்டார். அப்பொழுது புயல் மூன்று நாள் வீசிற்று. அந்த மூன்று நாட்களும் பிர யாணிகளுக்கு ஓர் ஊழிக்காலம் போன்று இருந் தன. அவர்கள் வைத்திருந்த சாமான்களும் பெட்டிகளும் முன்னும் பின்னும் உருண்டு ஓடி மேல் விழுந்து அல்லல் விளைத்தன. அக்கடும் புயலில் உணவமைப்போர் நின்று பணியாற்ற முடியாது இடருற்றார் ஆகலின், சுட்ட பண்டங் கள் கிடைப்பதே அரிதாகிவிட்டது. புயல் நின்று அமைதி ஏற்பட்டபிறகுதான், பிரயாணிகள் ஒரு வரை ஒருவர் அறிந்துகொள்ள முற்பட்டனர். ஆப்பிரிக்காவிற் பன்னிரண்டு ஆண்டுகள் முன் னரே உழைத்திருந்தவர் ஆகிய இராணுவ மருத் துவர் ஒருவருடைய நட்பு சுவைட்சருக்குக் கிடைத்தது. அவரிடமிருந்து பல செய்திகளைச் சுவைட்சர் அறிந்துகொண்டார்.

ஆப்பிரிக்க மண்ணில் அமைந்த தக்கார் (Dakar) என்னும் துறைமுகத்திற் சில நாட்கள் கழித்து இறங்கியவுடன், ஆப்பிரிக்க மக்கள் மிருகங் களை எவ்வளவு கொடுமைப்பட நடத்திக்கொண் டிருந்தார்கள் என்பதை அவர் கண்டார். கோவேறு கழுதைகளும் குதிரைகளும் பட்டபாடு சொல்லில் அடங்காது. எலும்புக்கூடுகளொடு காணப்பட்ட குதிரைகள் பல சேணங்களின் இரு பக்கத்திலும் குருதி தோயும்படி அடிக்கப்பட்ட சாட்டையடி

யினுல் வருந்தி, அசைந்து அசைந்து சென்று கொண்டிருந்த காட்சியைக் கண்டவுடன் சுவைட்சர் உள்ளம் உருகினுர். குதிரைகளுக்கு அள்ளி யிடும் புல்லிற்காக அவற்றின் ஆவியைக் கொள்வது அழகாமோ என்று நினைத்தார். குதிரைகள் பேசுவதாய் இருந்தால்,

" பற்றி முதுகினில் ஏறிக்கொள்வீர்—எம்மைப்
பட்சிகள் போலப் பறக்கச் செய்வீர்
சற்றும் இரக்கம் இலாதவரோ—நீங்கள்
சாத்திரம் கற்ற பயன் இதுவோ?"

என்றும்,

" மேடு பள்ளங்களில் ஓடவேண்டும்—வெய்ய
வேனில் மழைகளில் ஓட வேண்டும்
காடு செடிகளில் ஓட வேண்டும்—இந்தக்
கட்டங்கள் யாரிடம் சொல்வோம் ஐயா!"

என்றும் கூறியிருக்கும்.

சுமைக் குதிரைக்கும் இரக்கம் காட்டவேண்டு மென்று சொல்லி, வண்டியில் உட்கார்ந்திருந்தவர் களைக் கீழே இறக்குவித்து, வண்டியைத் தள்ளும் படி சுவைட்சர் சிலருக்குக் கற்பித்தார்; கற்பித்த தொடு அமையாது தாமும் உடன் நின்று கைகொடுத்து உதவினுர். தக்காரிலிருந்து மேலும் ஆப்பிரிக்கன் கரையோரம், மிளகுக் கரையோரம், தந்தக் கரையோரம், என்றவாறு பெயர் பெற் றிருந்த பல கரையோரங்களைத் தாண்டி லோபஸ் முனையைக் (Cape Lopez) கப்பல் அடைந்தது. அங்கிருந்து ஒகோவே ஆற்று வழியே செல்லுதல் வேண்டும். பிரஞ்சு எல்லையிலிருந்து புறப்பட்டு

மூன்று வாரங்கள் கழித்து, ஒகோவே ஆற்றங் கரைக்குச் சுவைட்சரும் அவர் மனைவியும் சென்றுர்கள்.

ஒகோவே ஆற்றின் வழியாக லாம்பரீன் செல்லுதற்கெனத் தனியாக ஆற்று நீராவிப் படகு உண்டு. தாம் கொண்டுவந்துள்ள எழுபது பெட்டிகளை அப்படகினில் ஏற்றுதற்குச் சுங்கச் சாவடியில் தடை இருக்கும் என்று கேள்வியுற்றுச் சிறிது நேரம் சுவைட்சர் வருந்திஞர். எனினும், சுங்க அலுவலர்களுக்குத் தம்முடைய நிலையைத் தெரிவித்தவுடன், அவர்களும் இரக்கம் காட்டிச் சுங்கம் நிறைய விதிக்காது விட்டனர். நூற்றைம்பது மைல் தொலை ஆற்றில் எதிரேறி, ஆப்பிரிக்கா செல்லுதல் வேண்டும். ஒருநாட் காலை ஒன்பது மணிக்குப் புறப்பட்டவர்கள் மறுநாள் முற்பகல் பத்து மணிக்கு லாம்பரீன் அடைந்தார்கள். எனினும், லாம்பரீன் குன்றுகள் தோன்றினவே அன்றி, மருத்துவச்சாலை உள்ள இடம் இன்னுந் தொலைவில் இருந்தது. பக்கத்து ஓடை வழியாக வேருெரு சிறு படகினில் அவண் செல்லுதல் வேண்டும். அவர்களுடைய வருகையை எதிர் நோக்கிப் பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் பலர் வந்து காத்து நின்றனர். இரண்டு தோணிகள் போட்டி போட்டுக்கொண்டு அங்கு வந்து காத்திருந்தன. ஒரு தோணியில் சிறுவர்கள் சிலர் இருந்தார்கள். மறு தோணியில் அவரினும் வயதுடைய மாணவர்கள் சிலர் இருந்தார்கள். இவ்விரு தோணியரும் தமக்குள் போட்டியிட்டுக்

கொண்டு அங்கே வந்திருந்தவர்கள். போட்டியில் வென்று முதலில் வந்தவர்கள் சுவைட்சரை அழைத்துப்போகும் உரிமை உடையவர்கள். வய தான மாணவர்கள் பிறகு வந்தவர்கள் ஆதலால், சுவைட்சரின் சாமான்களையே எடுத்துக்கொண்டு போதல் வேண்டும். சுவைட்சரையும் அவர் மனைவியையும் சிறுவர்கள் மகிழ்ச்சியோடு தம் தோணியில் ஏற்றி உரிய இடத்திற் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார்கள்.

கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பரந்த மனப்பான்மையைச் சுட்டி ஒரு பாட்டிற் பாடினர். பழைய இந்தியாவில் ஒரு பகுதியாய் இருந்த சிந்து நதியிலே, நிலா நேரத்தில், சேரநாட்டு இளம் பெண்களுடன் அழகுத் தெலுங்கிற் பாட்டினை இசைத்துக்கொண்டு, படகுகள் ஓட்டி விளையாடி வரவேண்டும் என்று அவர் எண்ணினர். தமிழ் நாட்டில் உள்ளவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஆறு ஒன்றனில் அல்லாமல், தம் இனிய தமிழ் மொழியில் அல்லாமல், தம்முடைய எழில் நிரம்பிய இளமங்கையருடன் அல்லாமல், பிறநாட்டு ஆற்றில் பிறிதொரு மொழியிற் பாட்டு இசைத்துக்கொண்டு பிறநாட்டு மகளிரொடு இனிமையாகச் செல்ல வேண்டும் என்று கனக்கண்டார். சுவைட்சரோ பிறிதொரு நாட்டின்கண் உள்ள ஆற்றில், பிறிதொரு நாட்டு இளைஞர்களுடன், பிறருக்கு உழைக்கும் நோக்கத்துடன் வினைமேற் சென்றார். சுவைட்சர் அப்படகிற் சென்ற செய்தியை நினைக்கும்பொழுது, பாரதியார் 'பாடலிற் கூறப்பட்ட

தற்குமேல் சில படிகள் அடியெடுத்து வைத்து விட்டார் சுவைட்சர் என்பது புலப்படும். சுவைட்சரை வரவேற்பதற்காக ஆப்பிரிக்க நகரத்கிறித்துவரும் பிறரும் அங்கே காத்திருந்தார்கள். லாம்பரீன் குன்றுகள் மூன்றனுள் இடையே உள்ளதொரு குன்றில் ஒரு மரக் கட்டிடம் உள்ளது. அதுதான் சுவைட்சரின் வீடு. நான்கு அறைகள் உள்ள அந்த வீட்டில் ஓர் அறையிற் புகுந்து சில சாமான் பெட்டிகளைத் திறந்துகொண்டு, சுவைட்சரும் அவர் மனைவியும் உண்ண உட்கார்ந்து விட்டனர். அன்றிரவு, அவர் உறங்குவதற்குச் சென்றபொழுது, அறையில் இருந்த சிலந்திகள் கறப்பான்கள் பலவற்றைத் துரத்தவேண்டிய நிலையில் சுவைட்சர் இருந்தார்.

வெப்பம் நிரம்பிய பெருங்காட்டில், ஒகோவே ஆற்றங்கரையில், லாம்பரீன் என்ற சிறு குன்றில், ஒரு மருத்துவ நிலையம் முன்னரே அமைக்கப்பட்டிருப்பதில்தான் பணியாற்றுதற்கெனச் சுவைட்சர் வந்துள்ளார். நல்லுள்ளம் படைத்த அமெரிக்கர் சிலர் 1876-இல் அங்கே ஒரு சபையை நிறுவினர். 1892-இல் அது பாரீசிலுள்ள ஒரு சபையினருக்கு உரியதாகிவிட்டது. சட்டப்படி சுவைட்சர் செர்மானிய குடிமகன். அவருடைய பட்டங்கள் அக்காலத்திற் செர்மானிய நகரமாக இருந்த ஸ்டிராஸ்பர்கு பல்கலைக் கழகத்திற் பெறப்பட்டவை. அதனால், பிரஞ்சு மக்களுடைய செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டு அமைந்திருந்த லாம்பரீன் சங்க மருத்துவ மனையில் வேலை

பார்த்தற்குச் சுவைட்சர் தக்க செல்வாக்கு நாட வேண்டியவர் ஆயினர். பாரீஸ் நகரத்தில் இருந்த அவருடைய நண்பர்கள் உதவியினுல் ஓரளவு திருப்தியாகச் சுவைட்சருடைய நிலை முடிவு செய்யப்பட்டது. எனினும், சமயம்பற்றிய அவருடைய சீர்திருந்திய நோக்கங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த சங்க அதிகாரிகள் சிலர் லாம்பரீன் மருத்துவசாலையில் அவர் வேலை பார்ப்பதற்குத் தடையாக இருப்பார்கள் போலக் காணப்பட்டார்கள். சுவைட்சரோ துயருறும் மக்களைப் பாதுகாக்கச் செல்வதே தமது நோக்கம் என்பதாகவும், தம்முடைய பணிகளை மருத்துவ அளவொடு நிறுத்திக்கொள்வதாகவும் உறுதி அளித்தார்.

இவ்வாறு, அவர் அக்காட்டோரத்தின்கண் பேரியாற்றங்கரையில் அமைந்துநின்ற குன்றிலிருந்து குன்றுத தொண்டாற்றத் தொடங்கினுர். பக்கத்தில் உள்ள இரண்டு குன்றுகளில் ஒன்றின் மீது ஆண்கள் பள்ளிக்கூடமும், மற்றொன்றின் மீது பெண்கள் பள்ளிக்கூடமும் உண்டு. அந்த இடத்தின் அண்மையிற் காரினும் இருண்ட காடு உண்டு. ஏறத்தாழ நூறு அடி உயரம் சுவர்போல வளர்ந்து எழுந்த காடாக அஃது இருந்ததால், காற்றுக்கூட உள்ளே நுழைவது கடினம் என்றவாறு இருந்தது. அந்தக் காட்டகத்தே எத்தகைய கொடிய விலங்குகள் இருந்தன என்பது சொல்லுதல் இயலாது. கொடிய விலங்குகள் பல உண்டு என்று மட்டும் கருதினுர் ஐரோப்பியர். பழங்குடி

ஆப்பிரிக்கரோ அந்தக் காட்டிற் பேயும் பைசாச மும் உண்டு என்று கருதி, அஞ்சி அஞ்சிச் செத் துக்கொண்டிருந்தார்கள். அங்கே ஆப்பிரிக்கரை அடிமையாக விலைக்கு வாங்கிக்கொண்டு போகும் பழக்கம் இருந்தமையால், எட்டுவிதக் குடியினராய் இருந்த ஆப்பிரிக்கர்கள் இரண்டே விதமான குடி யினராய்க் குன்றிக்கொண்டிருந்தனர். கலோ (Galoas) என்றும், பஹூய்ன் (Pahouin) என்றும் உள்ள இருவிதமான திசைமொழிகள் பேசும் பெருங்குடி மக்கள் ஆகி அவர்கள் வாழ்ந்து வந்தார் கள்; மண்வீடுகளிற் சிலரும் மரவீடுகளிற் சிலரும் ஆக வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத் தார்க்கும் உரிய நிலப்பரப்பில் வாழையையே அவர் கள் பயிரிட்டனர். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த வாழைத்தோட்டம் புதுப்பிக்கப்படும். மரங்களை வைத்தல் ஆடவர் கடமையாகவும், வாழைக் கன்றுகளை நட்ட பிற்பாடு அவற்றை ஓம்புதல் மகளிர் கடமையாகவும் மதிக்கப்பட்டன. அந்தக் காட்டோரத்தில் உள்ள வெப்பநிலை மிகவும் கடுமையானது. வியர்த்து விறுவிறுக்க, அங்கே உழைப்பதற்கு முன்வந்தார் சுவைட்சர்.

## 4. துயர்ப்படுவோர் நடுவே

சுவைட்சர் லாம்பரீனில் முதற்கண் நான்கு ஆண்டுகள் தங்கித் துயருற்ற நீக்ரோக்களின் இடுக்கண் களையத் தலைப்பட்டார். லாம்பரீனில் முன்னரே அமைக்கப்பட்டிருந்த மருத்துவ நிலையம் ஒரு சிறு கோழிச்சாவடியில் இருந்தது. இரண்டு வாரங்களில், ஒன்றன்பின் ஒன்ருகச் சில அறைகள் கட்டப்பட்டன. நாடோறும் சுவைட்சர் ஏதாவது ஒரு விதத்தில் மருத்துவ மனையின் வளர்ச்சிக் காக உழைத்துக்கொண்டே இருந்தார். அவரே பல நேரங்களில் மரங்களை வெட்டியும் கற்களை அகழ்ந்தும் வேலை செய்தார். கற்பிளந்து மலை பிளந்து கனிகள்வெட்டி அவர் கைகள் காழ்த்தன. ஆப்பிரிக்காவில் உள்ள வேலைக்காரர்கள் மருத்துவ மனைபோன்ற மனைகளின் வேலைக்குக் கிடைப்பது அருமையாய் இருந்தது. காரணம், உயர்ந்த கூலி கொடுத்து, மர வணிகர்கள் அவர்களை வேலைக்கு இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்பது. அதனுல், பல குடிசைகள் சுவைட்சர் கையாலேயே கட்டப்பட்டன. நீக்ரோ மக்கள் பிறர் நலத்திற் காகத் தாம் எதற்காக உழைப்பது என்று கேட்கக் கூடிய நிலையில் இருந்தனர்; தமக்காகவோ தம் குடும்பத்தார்க்காகவோ என்ருல், மருத்துவ நிலைய வேலைகளில் ஈடுபடுதற்கு இணங் கினர்; அல்லாத பிறர்க்காக உழைப்பதற்குக் கூசினர். மேலும், இயற்கையொடு வேறு சுவைட்

சர் போராட வேண்டியவராய் இருந்தார். தாவர இயற்கைப்பொருள்கள் விலங்கின் இயற்கைப் பொருள்கள், புழு பூச்சி ஆகிய இயற்கைப்பொருள் கள் முதலியவற்ளுேடு போராடவேண்டிய நிலையில் அவர் இருந்தார். இந்தத் தொல்லைகளின் நடுவே டாக்டர் சுவைட்சர் மாலை நேரத்தை இசையிற் போக்குதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொண்டார். அவர் பாரீசிலிருந்து புறப்பட்டு வருவதற்கு முன் ளுல், பாரீஸ் பாக் சங்கத்தினர் பியாஞே ஒன்று அமைத்து நன்கொடையாகத் தந்திருந்தனர். காலி ளுல் இயக்கி வாசிக்கக்கூடிய வகையில் அது அமைந்திருந்தது. அதுதான் லாம்பரீனில் அவ ருக்கு ஓய்வுநேரப் பொழுதுபோக்காக அமைந்தது.

முதல் ஒன்பது மாதங்களுக்குள்ளாக, ஏறத் தாழ இரண்டாயிரம் பேர்கள் அம் மருத்துவ மனை யிற் சிகிச்சை பெற்றனர் என்ருல், நோய்வாய்ப் பட்டோர் பலர் உண்டு என்பதையும், அவர்களுக்கு மருந்து நிரம்ப வேண்டியிருந்தது என்பதையும் எளிதில் அறிதல் இயலும். தம்முடைய மனைவி துணைசெய்ய, திறந்த வெளியிலே சுவைட்சர் சிலரைச் சுட்டறுத்தார். இந்த இரண சிகிச்சை கள் வெற்றியுடையனவாக இருந்தமையின், அவ ருடைய புகழ் விரைவில் அங்குப் பரவியது. நீக்ரோ மக்களோ மனிதனுடைய மாய வித்தைகளை நம்பு பவர்கள் ஆகையால், இறந்துபோனவர்போற் கிடந்த நோயாளர்கள் பலர் எழுந்து நலம் எய்தி யதைக் கண்டவுடன், டாக்டர் சுவைட்சரை மாய வித்தைக்காரர் என்று சொல்லத் தலைப்பட்டனர்.

மயக்க மருந்தினைக் கொடுத்து, இரண சிகிச்சை செய்து, பிறகு நோயாளர்களை எழும்படி சுவைட்சர் செய்ததைக் கண்ட பலர், அவர் முதலில் நோயாளர்களைச் சாகவைக்கிறார் என்றும், பிறகு மந்திரத்தினால் உயிர்தந்து எழுப்புகிறார் என்றும் சொல்லத் தலைப்பட்டனர்.

நாளடைவில், அவருக்குத் துணைவனாக ஓர் ஆப்பிரிக்க இளைஞன் கிட்டினான். அவன் ஒரு நோயாளி; நோய் தீர்ந்த பிற்பாடு, சுவைட்சருக்கு உறுதுணையாளன் ஆகிவிட்டான். அவன் ஓரளவு பிரஞ்சு பேச அறிந்திருந்தான். அவனது மொழி பெயர்ப்பு வேலையாற் சுவைட்சரின் மருத்துவ மனையின் வேலைகள் எளிதாகிக்கொண்டிருந்தன. நாளடைவிற் சோசப் (Joseph) என்ற அந்த இளைஞன் கட்டுக்கட்டவும், மருந்தினைப் பெயர் அறிந்து எடுத்துக்கொடுக்கவும் வல்லவன் ஆகி விட்டான். நாடோறும் காலையில், மருத்துவ மனை யின் விதிகள் கலோவா மொழிவகை வழியாகவும், பஹூயின் மொழிவகை வழியாகவும் நோயாளர்கள் நடுவிலே படிக்கப்பட்டன. அவற்றிற் சில மருத் துவ மனைக்குப் பக்கத்தில் எச்சில் துப்பக்கூடாது என்பதும், உரத்த குரலிற் பேசக்கூடாது என்ப தும் ஆகும். நோயாளர்களுடைய பெயர்கள், நோய், கொடுக்கப்பட்ட மருந்து இவற்றையெல் லாம் மருத்துவர் பதிவு செய்து வைத்துக்கொண் டார்; நோயாளர்களுக்குப் பதிவு எண் கொடுத்து, அவ்வவ்வெண் பொருந்திய வில்லையை ஒவ்வொரு நோயாளியின் கழுத்திலும் தொங்கவிட்டார்.

சோசப் மாத்திரையும் தண்ணீர் மருந்தும் எடுத்து எடுத்துக் கொடுக்கப் பழகிவிட்டார். எனினும், சில வேளைகளில் நோயாளர்கள் மூன்று வேளை மருந்தை ஒரே வேளையில் வீட்டிற் குடித்துவிடுவார்களோ என்று சுவைட்சர் அஞ்சினர். சில வேளைகளில் மேலே பூசுதற்குக் கொடுத்த தைலத்தைத் தவறிக் குடித்துவிடுவார்களோ என்றும் அஞ்சினர்.

ஒரு நாள் முப்பது கல் தொலையில் உள்ள ஓர் ஊரில் மாநாடு ஒன்று நடைபெறுவதாகவும், அங்குச் சென்ருல் மருத்துவ மனைக்காக உதவி கிட்டலாம் என்றும் சிலர் கூறினர்கள். அதற்கு ஏற்ப, சுவைட்சர் பத்துப்பேர் படகினைத் தள்ள, பன்னிரண்டு மணி நேரம் பயணம் செய்து அங்கே போய்ச்சேர்ந்தார்; கட்டிடம் எழுப்புதற்கு உதவியாக எண்பது பவுன் கிடைக்கப்பெற்ருர். அந்தக் கட்டிடத்தில் நான்கு அறைகள் அமைக்கப்பட்டன. ஒன்று மருத்துவர் நோயாளர்களைப் பார்க்கும் இடம்; ஒன்று இரண சிகிச்சை செய்யும் இடம்; ஒன்று மருந்து வைத்திருக்கும் இடம்; ஒன்று வெப்ப நீரிற் சுத்தம் செய்யும் இடம். ஆயினும், நோயாளிகள் தங்குதற்கு உரிய இடம் இன்னும் உண்டாகவில்லை. இதனையும் அமைப்பதற்காகச் சுவைட்சர் முயல்வாராயினர். சுவைட்சர் ஓரிடத்தில் நின்றுகொண்டு, பதினறு அடி நீளமான இடங்களை நிலத்திற் கோடிட்டுக் காட்டினர். ஒவ்வொரு நோயாளியையும் அந்த நிலப்பகுதி ஒவ்வொன்றிலும் அமர்த்தினர். ஒவ்வொரு நோயாளியின் நண்பர்கள் அந்த நோயாளிக்குரிய படுக்கை

யிடத்தைச் செப்பனிட வேண்டியவர் ஆயினர்கள். அந்த அந்த நிலப்பகுதியின் அளவு நான்கு மூலை யிலும் குச்சிகள் நடப்பட்டு, மரத்தைக்கொண்டு படுக்கைகள் அமைக்கப்பட்டன. மரக்கட்டையின் மீது காய்ந்த புல்லைப் பரப்பியதும், படுக்கையின் மேல் மெத்தை விரித்ததுபோன்ற காட்சி தோற் றிற்று. இவ்வாறு, அதிக காசு பணச் செலவின்றி விரைவில் நோயாளர்களுக்கு உரிய படுக்கையிடங் கள் செம்மையாயின. நோயாளர்களைக் கீழே படுக்கவைத்துவிட்டு, பார்க்க வந்த நண்பர்கள் அல்லது உறவினர்கள் படுக்கையிற் படுத்து விடாமற் பார்த்துக் கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு சுவைட்சருடையது ஆயிற்று.

அங்கே வந்துசேர்ந்த நோயாளிகளிற் சிலர் மலேரியா காய்ச்சலால் அல்லது குட்ட நோயால் வருந்தினர். வேறு சிலர் வயிற்றுக்கடுப்பு நோய் உடையவராய் இருந்தனர். குடல் வாதத்தினாலும், யானைக்காலினாலும், மகோதரத்தினாலும் பலர் வருந்திக்கொண்டிருந்தனர். நச்சுப் பண்டங்களைத் தின்பதாலும், புகையிலைச் சாற்றைக் குடித்து விடுவதாலும் சிலர் பைத்தியம் பிடித்து வருந்திக் கொண்டிருந்தனர். எனினும், அங்கே புற்று நோயினாலும் குடல் அநுபந்தத்தினாலும் வருந்திய நோயாளர்கள் மாத்திரம் இல்லை. உறங்கும் நோயி னாலும் வருந்தியவர் பலர். அந்நோய் ஒரு தொத்து நோய் ஆனதால், அந்நோயினாற் பீடிக்கப்பட்ட வரைப் பிரித்து, தனியாக வைத்துப் பாதுகாப் பதற்கு உரிய இடவசதி உண்டாகவில்லை.

எனினும், சுவைட்சரும் அவர் மனைவியும் தம்மால் இயன்றதைச் செய்து வந்தனர். நோயாளிகளிற் சிலர் நோயினின்று விடுபட்டவுடன் "நோய் தீர்ந்தது, நோய் தீர்ந்தது. மகிழ்ச்சி, மகிழ்ச்சி" என்று சொல்லி மருத்துவ மனையினின்று வெளி யேறியதைக் கண்ட சுவைட்சருக்கு உள்ளம் குளிர்ந்தது. ஐரோப்பா கண்டத்திற் பிறந்த வெள்ளைச்சாதியார் ஆகிய அவர் ஆப்பிரிக்கா கண்டத்திற் பிறந்த கறுப்புச் சாதியார் பக்கத்தில் நின்று, பின்னவர்களுடைய இடுக்கண்களைப் பொடியாக்கிய திறத்தை எண்ணும்பொழுது, "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற தமிழ்ப் புலவர் பூங்குன்றனாருடைய பொன்னுரை நினை விற்கு வருதல் இயல்பு.

# 5. போர்க்காலம்

1914-இல் வல்லரசுகளுக்கு இடையே மூண்ட ஒரு போர் சுவைட்சருக்குப் பெருந் தொல்லையைத் தந்தது. பிரஞ்சுநாடும் செர்மானிய நாடும் ஒன்றுக் கொன்று எதிராக இருந்த காரணத்தால், அமைதி யாக மருத்துவ வேலை பார்த்துவந்த சுவைட்சரைக் கூட இந்தப் போர் தொட்டது. சுவைட்சர் செர்மா னிய குடிமகனுர் என்பதே காரணம். பிரஞ்சுக் காரர்கள் ஆப்பிரிக்காவிலிருந்த செர்மானியர்களை யும் கொடுமைப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். ஆகஸ்டு ஐந்தாம் தேதி சுவைட்சரும் அவர் மனைவியும் சிறைப்படுத்தப்பட்டார்கள். அச்சிறை அவர் தம் வீட்டிற்குள்ளேயே தங்கி இருக்க வேண்டிய சிறை ஆயிற்று. தம் வீட்டினுள்ளேயே இருந்து பிறர் எவரோடும் பேசாமல் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுப் பாதுகாப்பில் அவர்கள் வைக்கப்பட்டார்கள். உள்ளிருந்த படியே சமயம், தத்துவம், இசை ஆகியவற்றிற் சுவைட்சர் ஈடுபடுவாராயினுர். மருத்துவ மனைக் குக்கூட அவர்கள் செல்லுதல் கூடாது எனத் தடைப்படுத்தப்பட்டிருந்தனர். அதனுல், சுவைட் சர் அர்ச். பால் என்பவரைப்பற்றிய புத்தகத்தை எழுதத் தொடங்கினுர்.

லாம்பரீனைச் சுற்றிப் பல நாழிகை வழிக்கு அவர் ஒருவரே மருத்துவர். அவர் மருத்துவ வேலை யைச் செய்ய முடியாமல் தடைப்படுத்தப்பட்டதை

உன்னியுன்னி, அம்மலையில் உள்ள வெள்ளையரும் நீக்ரோவரும் மிகவும் வருந்தினர். பண்பு நிரம்பிய வராகச் சொல்லிக்கொள்ளும் வெள்ளையர்கள் ஒருவர் ஒருவரோடு போரினால் இகலுவார்கள் என்பதை நீக்ரோவரால் நம்ப முடியவில்லை. போரிலே பலர் கொல்லப்பட்டார்கள் என்பதை அவர்கள் முதல் நாள் கேள்வியுற்றதும், அவர்கள் கூறியதை நினைத்தால், ஒருவகையில் அவர்களது கருத்து நல்ல கருத்து என்பது போலத் தோற்றும். பொதுவாக, கொல்லப்படும் ஒவ்வொரு மனிதனுக் காகவும் நட்ட ஈடு செய்யவேண்டும் என்பது அவர் களுடைய இனப் போர் மரபு. பலர் கொல்லப் பட்டார் என்றால், எவ்வளவு பெரிய நட்ட ஈட்டினைச் செய்தல் வேண்டுமே என அவர்கள் கருதினார்கள். இக் கருத்து பொதுவாக, போரினை மேற்கொள்ளுதற்குத் தடையாக உதவக்கூடிய கருத்து ஒன்றன்றோ?

மூன்று மாத காலத்திற்குள் இசை ஆசிரியர் விடார் என்பாரின் பரிவுரையால், சுவைட்சரும் அவர் மனைவியும் வீட்டைவிட்டு வெளியே சென்று, மருத்துவ மனையில் வேலை பார்க்கலாம் என்ற நிலை வந்து எய்தியது.

1915-இல் லோபஸ் முனையின்கண் தமது மனைவியின் உடல்நலம் கருதித் தங்கியிருந்த பொழுது, ஒருநாள், ஆற்றிற் படகுப் பிரயாணம் செய்யவேண்டியவர் ஆயினர் சுவைட்சர். ஆற் றின்கண் படகில் எதிரேறிப் பிரயாணம் நெடு நேரம் செய்துகொண்டிருந்தபொழுது, துடுமென

ஓர் எண்ணம் அவர் மனத்தில் தோன்றிற்று. "உயிரின் தொழுதகைமை" (Reverence for Life) என்பதே அவ்வெண்ணம். நாகரீகம் என்பது ஒருவர் உயிரிடத்து வைக்கும் மதிப்பை ஒட்டியது என்று சுவைட்சர் கருதினர். அஃதாவது, ஒவ்வோர் உயிரும் தொழத்தக்கது, மதிக்கத் தக்கது என்பது அவர் கருத்து. (மக்களை மதித்தல் வேண்டும் என்பதோடன்றி, பிற உயிர்கள் எல்லாவற்றையும் மதிக்கவேண்டும் என்பதே அவருடைய நோக்கம். சிறிய பிராணிகளும் உயிர்வாழ எத்துணை ஆசைப்படுகின்றன என அவர் உன்னினர். நமக்கு எவ்வளவு உயிர் வாழ்தலின்கண் பற்று உண்டோ அவ்வளவு உயிருடைய மன்பதைகள் எல்லாவற்றிற்கும் உண்டு என்ற நம்பிக்கை முன்னரே அவர்க்கு மூண்டுவிட்டதொன்ருகும். அதனுல்தானே முன்னர்ப் பறவைகளின்மீது கவண்கல்லை எறிய அவர் கூசினர்? அதனுல்தானே முன்னர் மீன் பிடிப்பதற்குத் தூண்டில் போட மறுத்தார்? அதனுல்தானே தாய் தந்தையர் கற்றுத்தந்த இரவு வழிபாட்டுரையில், கடவுள் உயிருள்ள பிற பொருள்களையும் பாதுகாக்கவேண்டும் என்ற வேண்டுகோளைச் சேர்த்துக்கொண்டார்? இவற்றை இராமலிங்க அடிகளார் அருள் வாக்கினெடு ஒப்பிடலாம். கொடியவர்கள் பிறவுயிர்களைக் கொல்ல முற்பட்ட பொழுதெல்லாம் அடிகளார் துடிதுடித்தார்; பிறவுயிர்கள் பதைத்தைக் கண்ட பொழுதெல்லாம் உளம்பதைத்தார்; மீன்களைப் பிடிக்கத் தூண்டிலைப் பிறர் எடுத்துப்

போன பொழுதும், உயிரினங்களை அகப்படுத்து தற்கு வலைகளைப் பிறர் வீசிய பொழுதும், பறவை களைச் சிக்க வைப்பதற்குக் கண்ணிகளைப் பிறர் வைத்த பொழுதும் அஞ்சியஞ்சி நெஞ்சு புண்ணுயி ஞர். இறைவனை நோக்கிப் பாடப்பட்ட பாட்டு ஒன்றனுள் இவற்றைப் புலப்படுத்தினர்.

" துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்;
கண்ணினால் ஐயோ! பிறவுயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்;
எண்ணியென் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவருள் அறியும் "

என்ற அடிகளார் மனநிலையினெடு சுவைட்சர் நிலை ஒப்புநோக்கத் தக்கது.

" வாழவேண்டும் என்று கருதும் உயிர் நான். நானே வாழவேண்டுமென்று கருதும் பிற உயிர் களின் இடையில் வாழ்கிறேன் " என்பது அவருடைய சித்தாந்தம் ஆயிற்று. நம் உயிர் நமக்கு எவ்வளவு சிறப்புடையதோ, இனிமை யுடையதோ அவ்வளவு சிறப்பும் இனிமையும் உடையன அவரவர்க்கும் அவையவற்றிற்கும் அவ ரவரின் உயிர்களும் அவ்வவற்றின் உயிர்களும் என்று அவர் கருதினர்; தம் உயிர்க்கு இன்னுதது என்று கருதும் ஒரு செயலை வேறு உயிர்க்குச் செய்தல் ஆகாது என்ற விழுமிய குறிக்கோள் உடையவர் ஆயினர். தமக்கு இன்னுதது என்று அறிந்த ஒன்றினைப் பிறவுயிர்களுக்கு ஒருவர்

செய்ய எவ்வாறு முற்படுகிறார் என்பது விளங்க வில்லையே என்னும் கருத்தமைந்த

" தன்னுயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் ?"

என்ற திருக்குறள் அவரிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கி இருத்தல்வேண்டும்.

எனினும், முதலில் அவசியம் இருந்தாலன்றிப் பிற உயிர்களைக் கொல்லக்கூடாது என்ற எண்ணம் மாத்திரம் உடையவராக அவர் இருந்தார். தக்க காரணம் இல்லாமற் பிறிதுயிரைப் போக்குதல் கூடாது என்று அவர் கருதிய காலம் உண்டு. ஒரு நாள், ஆப்பிரிக்கர் சிலர் ஒரு பருந்திற்குப் பெருந் துயர் தந்தார்கள். சுவைட்சர் அதனை அவர்களிடமிருந்து மீட்டுக் காப்பாற்றி வளர்த்தார். அந்தப் பருந்தோ இயற்கையில் மீனைத் தின்று வாழும் பருந்து. பருந்தினைப் பட்டினியாற் சாக விட்டு விடுவதா, அன்றி அதன் உணவிற்கு வேண்டிய சிறு மீன்களைக் கொண்டு தருவதா என்று ஆராய்ந்து, பின்னதே தம்மாற் செய்யத் தக்கது என்ற முடிவிற்கு வந்தார். அப்பொழுது, ஒவ்வொரு வேளையிலும் மனிதன் செய்யத் தக்க கொலை யாது, தகாத கொலை யாது என்ற முடிவிற்கு வருதல் வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தார். அவர் நடந்துசெல்லும் வழிகளில் எல்லாம் எறும்போ புழுவோ மிதிக்கக்கூடிய இடத்தில் ஊர்ந்துகொண்டிருந்தால், அதனை உயிருடன் அப்புறப்படுத்திக் காப்பாற்றிவிட்டுச் செல்லும் வழக்கம் உடையவர் ஆயினர்.

போன பொழுதும், உயிரினங்களை அகப்படுத்து தற்கு வலைகளைப் பிறர் வீசிய பொழுதும், பறவை களைச் சிக்க வைப்பதற்குக் கண்ணிகளைப் பிறர் வைத்த பொழுதும் அஞ்சியஞ்சி நெஞ்சு புண்ணுயி ஞர். இறைவனை நோக்கிப் பாடப்பட்ட பாட்டு ஒன்றனுள் இவற்றைப் புலப்படுத்திஞர்.

" துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்;
கண்ணிஞல் ஐயோ! பிறவுயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்;
எண்ணியென் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவருள் அறியும் "

என்ற அடிகளார் மனநிலையிெ டு சுவைட்சர் நிலை ஒப்புநோக்கத் தக்கது.

" வாழவேண்டும் என்று கருதும் உயிர் நான். நாஞே வாழவேண்டுமென்று கருதும் பிற உயிர் களின் இடையில் வாழ்கிறேன் " என்பது அவருடைய சித்தாந்தம் ஆயிற்று. நம் உயிர் நமக்கு எவ்வளவு சிறப்புடையதோ, இனிமை யுடையதோ அவ்வளவு சிறப்பும் இனிமையும் உடையன அவரவர்க்கும் அவையவற்றிற்கும் அவ ரவரின் உயிர்களும் அவ்வவற்றின் உயிர்களும் என்று அவர் கருதிஞர்; தம் உயிர்க்கு இன்ஞதது என்று கருதும் ஒரு செயலை வேறு உயிர்க்குச் செய்தல் ஆகாது என்ற விழுமிய குறிக்கோள் உடையவர் ஆயிஞர். தமக்கு இன்ஞதது என்று அறிந்த ஒன்றினைப் பிறவுயிர்களுக்கு ஒருவர்

செய்ய எவ்வாறு முற்படுகிருர் என்பது விளங்க வில்லையே என்னும் கருத்தமைந்த

> "தன்னுயிர்க்கு இன்னுமை தான்அறிவான் என்கொலோ
> மன்னுயிர்க்கு இன்னு செயல்?"

என்ற திருக்குறள் அவரிடையே ஒரு விழிப்புணர்ச் சியை உண்டாக்கி இருத்தல்வேண்டும்.

எனினும், முதலில் அவசியம் இருந்தாலன்றிப் பிற உயிர்களைக் கொல்லக்கூடாது என்ற எண்ணம் மாத்திரம் உடையவராக அவர் இருந்தார். தக்க காரணம் இல்லாமற் பிறிதுயிரைப் போக்குதல் கூடாது என்று அவர் கருதிய காலம் உண்டு. ஒரு நாள், ஆப்பிரிக்கர் சிலர் ஒரு பருந்திற்குப் பெருந் துயர் தந்தார்கள். சுவைட்சர் அதனை அவர்களிட மிருந்து மீட்டுக் காப்பாற்றி வளர்த்தார். அந்தப் பருந்தோ இயற்கையில் மீனைத் தின்று வாழும் பருந்து. பருந்தினைப் பட்டினியாற் சாக விட்டு விடுவதா, அன்றி அதன் உணவிற்கு வேண்டிய சிறு மீன்களைக் கொண்டு தருவதா என்று ஆராய்ந்து, பின்னதே தம்மாற் செய்யத் தக்கது என்ற முடிவிற்கு வந்தார். அப்பொழுது, ஒவ் வொரு வேளையிலும் மனிதன் செய்யத் தக்க கொலை யாது, தகாத கொலை யாது என்ற முடி விற்கு வருதல் வேண்டுமென்று எண்ணிக்கொண் டிருந்தார். அவர் நடந்துசெல்லும் வழிகளில் எல் லாம் எறும்போ புழுவோ மிதிக்கக்கூடிய இடத்தில் ஊர்ந்துகொண்டிருந்தால், அதனை உயிருடன் அப் புறப்படுத்திக் காப்பாற்றிவிட்டுச் செல்லும் வழக்கம் உடையவர் ஆயினர்.

போர்க்காலம் ஆகிய 1914, 15, 16 ஆகிய ஆண்டுகளிற் பல துயரங்களை அவர் பொறுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தார். அவ்வாண்டுகளிற் கிறிஸ்துமஸ் நாளிலும் ஏற்றி வைப்பதற்குக்கூட நல்ல மெழுகுவர்த்திகள் இல்லாமல் இடர்ப்பட்டார். ஐரோப்பாவிலிருந்து வந்து கொண்டிருந்த பணம் போரினால் தடைப்பட்டது. அதனால், அவருடைய ஆப்பிரிக்கத் துணைவர் சோசப் என்பாரை அரைச் சம்பளத்தில் வேலை பார்க்குமாறு கூறினர். சோசப்பிற்கோ மர வியாபாரிகளிடம் நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்த தால், அவர் மருத்துவ மனையை விட்டுவிட்டுப் போய்விட்டார். அதனால், டாக்டர் சுவைட்சரும், அவர் மனைவியும் மருத்துவ மனையின் முழுப் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டியவர் ஆயினர். மூன்று ஆண்டுகள் சென்றன. 1917 செப்டம்பரில் மேலும் வருத்தந் தருஞ் செய்தி ஒன்று கிட்டிற்று. அஃதாவது சுவைட்சர் மனைவியொடு பிரான்சில் ஒரு பாடிவீட்டுச் சிறைக்குக் கொண்டுபோகப்பட வேண்டும் என்பது. இரண்டு மணி நேரத்திற்குள் அவர்கள் மூட்டைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டார்கள். சுவைட்சர் மருந்துகளையும், இசைக் கருவிகளையும் மற்ற சாமான்களையும் ஓர் அறையில் அங்கேயே வைத்துப் பூட்டிட்டார். புத்தகங்கள் சிலவற்றைக்கூட அவர் எடுத்துச்செல்ல முடியாத நிலையில் இருந்தார். "நாகரீகத்தின் தத்துவம்" (Philosophy of Civilisation) என்ற தலைப்பில் அவர் எழுதிக்

கொண்டிருந்த புத்தகத்தின் கையெழுத்து ஏட்டைக்கூட எடுத்துச்செல்ல அவர் அனுமதிக்கப் படாததால், அதன் சுருக்கம் ஒன்றினை விரைவில் எழுதிக்கொண்டு புறப்பட்டார். பிரான்ஸ் தேசத் திற்குப் புறப்பட்டுக் கப்பலிற் செல்லும்பொழுது, மற்ற பிரயாணிகளொடு அவர் பேசுதல் கூடாது என்றும் பணிக்கப்பட்டிருந்தார். பாக் இசைப் பாடல்கள் சில மட்டும் எழுதப்பட்டிருந்த கை யெழுத்துத் தாளினை எதிரே வைத்துக்கொண்டு, அப்பாடல்களை மனப்பாடம் செய்தற்குமட்டும் அவர்க்கு வாய்ப்பு கிட்டிற்று. அந்த இசைப்பாடல் களை நாவினால் இசைத்துக்கொண்டே, வெறும் மேசையைப் பண்ணிற்கு ஏற்பக் கைவிரல்களினால் அமைதியாகத் தட்டிக்கொண்டிருந்தார். லாம்பரீ னில் அமைந்த பியானோவைக் காலால் அமுக்கிக் கொண்டிருந்ததை எண்ணிக்கொண்டு, கப்பலிலும் அவ்விசைப் பாடல்களைப் பாடும்பொழுது தரை யைத் தடவிக்கொண்டிருந்தார். கரை ஏறிய பிற் பாடுகூட, அவர் மூன்று மாதம் காவலில் வைக்கப் பட்டிருந்தார். அவ்விடத்தில் அவரோடு காவலில் வைக்கப்பட்டிருந்த தம்மை ஒத்த பிறருடைய உள நிலைகளைப் பற்றி ஆராய்ந்து அறிந்துகொள்ளு தற்கு அச்சிறையகம் அவருக்குப் பயன்படுவ தாயிற்று. சிற்பிகள் சிலரையும், உழவர்கள் சிலரையும் அச்சிறையகத்துக் கண்டு, அவர் நிலை பற்றி உன்னுதற்கு இப்பொழுது அவர்க்கு வாய்ப்பு கிட்டிற்று. தத்தம் கருத்தில் தோன்றும் அரிய உருவங்களைக் கல்லிற் செதுக்கும்போது, மெய்த்

தளர்வும் அகத்தளர்வும் பாராது, கைவருந்திக் கண்வருந்திக் கவினுறச் சிற்பங்களை அமைப் போரை அறிந்துகொள்ள நல்ல வாய்ப்புப் பெற்ருர் சுவைட்சர். அறுசுவை உணவிற்கு உரிய பொருள்களை உழைத்து உழைத்து ஆக்குவது உழவர் தொழிலாகவும், அவற்றை நன்றியின்றி விழுங்குவது பிறர் தொழிலாகவும் உள்ளனவே என எண்ணி ஏங்கினுர். அச்சிறையக வாழ்க்கையினுல் சுவைட்சருடைய உடல்நிலை ஓரளவு கெட்டு விட்டது. 1918 ஜூலையில், போரினர் சிறையர்களை இரு திறத்திலும் பரிமாறிக்கொண்டனர். அதனுல், சுவைட்சரும் அவர் மனைவியும் தங்கள் சொந்த ஊர் திரும்ப வசதி ஏற்பட்டது. கால்மர் என்னும் ஊர்வரை இரயில் சென்றது. அங்கிருந்து பல கல் தொலை நடந்து டாக்டர் சுவைட்சர் சொந்த ஊர் சேர்ந்தார். அவர் மனைவி தம்முடைய பெற்ருேரைப் பார்க்கச் சென்ருர். ஐந்து ஆண்டுகளுக்கு முன், அவர்கள் லாம்பரீனுக்குச் சென்ற பொழுது இருந்ததுபோன்ற நிலையில் இப்பொழுது ஊர் இல்லை. எங்குப் பார்த்தாலும் போர் அரவம் கேட்டவண்ணம் இருந்தது. டாக்டர் சுவைட்சர் ஓர் இரண சிகிச்சை செய்துகொள்ளவேண்டிய நிலையில் இருந்தார். திரும்பவும் நலமுற்றவுடன், ஏதாவது ஓர் அலுவல் பார்த்துப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்தார். ஸ்டிராஸ்பர்கு நகர்மன்றத் தலைவர் நகர மருத்துவ மனையில் மருத்துவர் வேலை ஒன்றினை அவர்க்கு அளித்தார். அன்றியும், ஸ்டிராஸ்பர்கு

நிக்கலஸ் கோயிலிற் போதகராகக் குறைநேர வேலை பார்ப்பதற்குச் சுவைட்சர் நினைத்தபடி ஏற்பாடு ஆயிற்று. ஆனால், லாம்பரீனிலிருந்து செய்தி ஒன்றும் கிட்டவே இல்லை. அந்நாட்டில் உள்ள நீக்ரோ மக்களைக் குறித்து அடிக்கடி சுவைட்சர் கவலை கொண்டார். கடைசியில், 1918 நவம்பர் 11-ஆம் தேதி அன்று போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. எனவே, போர் நின்றது. சுவைட்சர் பிறந்த நாடாகிய அல்சாஸ் இப்பொழுது பிரெஞ்சுக்காரர்களுக்கு உரியதாகிவிட்டது. எனவே, சுவைட்சரும் அவர் மனைவியும் இனிச் செர்மானிய குடிமக்கள் அல்லர்; பிரெஞ்சு குடிமக்கள் ஆயினர்.

1918 முதல் 1924 வரை ஆறு ஆண்டுகள் சுவைட்சர் தத்துவ விற்பன்னராகவும், இசையறிஞராகவும், விரிவுரையாளராகவும் இருந்தார். மருத்துவத் தொழிலை ஒதுக்கி வைத்திருந்தார் என்றே சொல்லுதல் வேண்டும். சுவைட்சரின் மனைவி ஹெலன் 1919-இல் ஒரு பெண் மகவு ஈன்றார். அதே ஆண்டில் ஸ்வீடன் பல்கலைக் கழகத்தில் வந்து சில சொற்பொழிவுகள் ஆற்றுமாறு சுவைட்சர் அழைக்கப்பட்டார். “மரப் பெட்டியின் உள்ளே அகப்பட்டு மறைந்து கிடந்த காசுபோன்ற என்னை மக்கள் மறக்கவில்லை” என்று சுவைட்சர் சொல்லிக்கொண்டார். ஸ்வீடனில் அவர் தங்கியிருந்தபொழுது அவர் மீண்டும் நல்ல உடனலம் பெறுதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே சில இசையரங்குகள் நிகழ்த்தினார். அவற்றின் வாயி

லாக. நல்ல ஊதியம் கிடைத்தது. அந்தப் பணத்தைக் கொண்டு லாம்பரீனில் தொடர்ந்து மீண்டும் மருத்துவ வேலை செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவர்க்கு உண்டாயிற்று. சூரிச் (Zurich) பல்கலைக் கழகம் அவருக்குக் கௌரவப் பேரறிஞர் பட்டம் வழங்கிற்று. "பழைய காட்டோரத்தில்" (On the Edge of the Primeval Forest) என்ற அவருடைய புத்தகம் இப்பொழுது முடிவடைந்து வெளியாயிற்று. அதனைப் பல மொழிகளிலும் அறிஞர்கள் மொழிபெயர்த்தார்கள். அப்புத்தகத்தில் மருத்துவ மனையைப் பற்றிய விவரங்கள் உண்டு. தாழ்ந்த மக்களுக்கு நாகரீகம் உடையவர் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றி விரிவாக அப்புத்தகத்தில் அவர் எழுதியிருந்தார். 1922 ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், லண்டன் முதலிய ஊர்களுக்குச் சென்று சமயச் செய்திகள் பற்றி விரிவுரைகள் ஆற்றினர். 1923-இல் "நாகரீகமும் அறமும்" (Civilisation and Ethics) என்ற அவருடைய புத்தகம் வெளியாயிற்று. முதலிற் செர்மானிய மொழியிலும் பிறகு ஆங்கில மொழியிலும் அது வெளிப்படுத்தப் பட்டது. நாகரீகம் பாழாகிக் கொண்டிருப்பதைத் தடுக்கவேண்டும் என்றால், "உயிர்களின் தொழுதகைமை" என்ற அற உள்ளத்தால்தான் இயலும் என்பதை விளக்கமாக அப் புத்தகத்தில் அவர் எடுத்துக் காட்டினர். அப் புத்தகத்தை உருவாக்கிக் கொண்டிருந்த பொழுதே மீண்டும் லாம்பரீன் செல்லவேண்டும் என்ற எண்ணம் அவரை உந்திக்கொண்டிருந்தது.

அங்குள்ள மக்கள் மருத்துவர் விரைவில் வர வேண்டும் என அழைத்தவண்ணம் இருந்தனர். எடுத்துச் செல்லுதற்காக மருந்துப் பெட்டிகள் செப்பம் செய்யப்பட்டன. அவர் மனைவி தக்க உடல்நலத்தொடு அவ்வேளையில் இன்மையின், இம்முறை அவர் உடன் செல்லவில்லை. ஆக்ஸ்-போர்டு மருத்துவ மாணவர் ஒருவர் மாத்திரம் சுவைட்சரொடு செல்ல முன்வந்தார். பெரிய தத்துவ ஞானி, பேரிசை அறிஞர், பேருரையாளர் என்ற சிறப்புக்களை எய்தியுள்ள சுவைட்சர் ஐரோப்பா தமக்கு அளிக்கவிருக்கும் சிறப்புக்களை யும் இன்பங்களையும் விட்டுவிட்டுக் கடும் வேலை செய்வதற்காக, பிறர்க்காக உழைப்பதற்காக, மீண்டும் காட்டோரம் மலையோரம் செல்லலுற்றார். சுவைட்சர் பட்டிருந்த கடன்கள் சிலவற்றை அடைப்பதற்கு உரிய பணம் அவருடைய இசை யரங்குகளாலும் விரிவுரைகளாலும் கிடைத்தது. மேலும், தம் மனைவியையும் அருங் குழந்தை ரீனாவையும் (Rena) விட்டுவிட்டுப் போவதனால், அவர்களுடைய வாழ்க்கைக்கு உரிய அளவு பணத் தையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் போதற்கு உகந்த வகையிற் பணம் சம்பாதித்துவிட்டார். சுவிட்சர் லாந்து, ஸ்வீடன், டென்மார்க்கு, செக்கோஸ்லோ வாகியா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் உள்ள மக்கள் அவர் கேட்ட வண்ணம் பணம் அளிக்க முன்வந்தமை போற்றுதற்கு உரியது. 1924 பிப்ரவரி மாதத்தில் அவர் சொந்த ஊரை விட்டு, மறுபடியும் ஆப்பிரிக்காவிற்குப் புறப்படுதற்கு

முன்னால், கோயிலுக்குச் சென்று அங்குள்ள பழைய இசைக்கருவியினை இசைக்கலுற்றார். அவர்க்குப் பழைய பியானோக்களைச் செப்பனிட்டுப் பயன்படுத்துவதிற் பேரார்வம் உண்டு. நெடுங் காலமாக மண் ஏறிப் புழுதி படிந்து பாழ்பட்டுக் கிடந்த பியானோவை அவர் துடைத்துச் செப்பனிட்டு வாசித்து மகிழ்ந்தார். கோவிலில் அவ் விசைக் கருவியினை வைத்திருந்த மாடிக்கு ஏறுதற்கு அமைந்த ஏணியின் படிகள் பழுதுபட்டிருந்தன. அதனால், படிகளில் ஏறாமல், நேரே சுவர் ஏறிப் பியானோவை இயக்கிவிட்டுக் கீழே இறங்கியதும், அவ்வூர் நகர மன்றத் தலைவரை நோக்கி, "இசைக் கருவிகளை இயக்குதற்கு ஆட்கள் கிடைக்கலாம்; ஆனால் ஏணியின்றி ஏறுதற்கு என்னைப் போல் ஆட்கள் கிடைக்கமாட்டார்கள்" என்று வேடிக்கையாகக் கூறினார் என்பது தெரியவருகிறது. புதுப்புது இசைக் கருவிகள் உண்டாக்குவதைக் காட்டிலும், பழைய இசைக்கருவிகளைச் செப்பனிட்டுப் புதியன ஆக்குவது நல்லது என்று சுவைட்சர் நம்பினார். அதனால், அவரைப்பற்றி வேடிக்கையாகச் சிலர் பேசத் தலைப்பட்டார்கள். "இவர் ஆப்பிரிக்காவில் பழைய நோயாளர்களைக் காப்பாற்றுகிறார்; ஐரோப்பாவிலே பழைய இசைக்கருவிகளைக் காப்பாற்றுகின்றார்" என்று பலர் பேசிக்கொண்டனர்.

# 6. மன்னுயிர்க்கு அன்பு

1913-இல் முதல்முறையாக டாக்டர் சுவைட்சர் லாம்பரீனிற்குப் போய் ஆப்பிரிக்க மக்கட்குப் பணி செய்தார். 1924-இல் மீண்டும் அங்குச்சென்று டாக்டர் சுவைட்சர் மூன்று ஆண்டுகள் தங்கிச் சிறந்த பணியாற்றலுற்ருர். திரும்பச் சென்றதும், பழைய மருத்துவ மனை ஓரளவு பாழடைந்து இருந்ததைக் கண்டு பதறினர். வழிநெடுகப் புல்லும் பூண்டும் முளைத்திருந்தன. மருத்துவ மனையின் கூரைகளெல்லாம் விழுந்து கிடந்தன; சுவர்களோ இடையே விழுந்தறுவாயில் இருந்தன. எனினும், மருத்துவர் வந்தாரே என மகிழ்ந்து, வரவேற்கும் வெள்ளையர் கூட்டமும் நீக்ரோவர் கூட்டமும் வெள்ளம்போல் இருப்பதைக்கண்டு சுவைட்சர் மகிழ்ந்தார். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இரண்டு உலகப்பொருட்காட்சிகள் நிகழும் காரணத்தால், மரம் அறுப்பதற்காக ஆப்பிரிக்க நீக்ரோவர்கள் வணிகரிடம் வேலைக்குச் சென்றுவிட்டபடியால், கூரை வேய்வோர் கிடைத்தல் அரிதாக இருந்தமையைச் சுவைட்சர் அறிந்தார்; சில நாழிகை நேரத்திற்குள்ளாகப் பக்கத்து ஊர் ஒன்றிற்குப் படகிற் சென்று, அறுபத்து நான்கு ஓலைக் கற்கள் கூரைக்காக வாங்கிக் கொண்டு திரும்பினர். திரும்பி வரும்பொழுதோ கனத்த மழை பெய்தது. மருத்துவ மனைக் கூரையை வேய்தற்கு மூவாயிரம் ஓலைக் கற்கள்

வேண்டும். அவற்றில் நூற்றுக்கு இரண்டு பங்கு தான் கிடைத்தது. மீண்டும் மீண்டும் உணர்ச்சி குன்றாமல், அவர் வெவ்வேறு இடங்களுக்குப்போய் ஓலைக் கற்களைக் கொண்டுவந்து சேர்த்தார். சில நேரங்களில் நோயாளர்களிடம் ஓலைக் கற்கள் கொண்டு வந்தால் அன்றி, மருத்துவம் செய்ய மாட்டேன் என்றுகூடக் கூறினார். அவர் அன்பு நிறைந்தவர் என்பதை அவர்கள் அறிந்தவர்கள் ஆனதால், டாக்டர் சொல்லை மெய்யென்று நம்பி ஓடுகளைக் கொண்டு வந்து அவர்கள் தந்தார்கள் அல்லர். டாக்டர் சுவைட்சரும், அவருடன் ஆக்ஸ்போர்டிலிருந்து வந்திருந்த மருத்துவ மாணவர் நோவல் (Noel) என்பாரும் தங்கள் கையாலேயே கொத்தர் வேலையையும் மருத்துவர் வேலையையும் ஒருங்கு பார்த்தனர். நோயாளிகள் சிலர் நோயினின்று நீங்கியவுடன் செல்லுதற்கு இடம் இல்லாமல், டாக்டரிடமே வேலையில் அமர்ந்து விட்டனர். அவ்வாறு தச்சர்கள் சிலரும் கொல்லர்கள் சிலரும் கிடைத்தார்கள். ஜூலை 18-ஆம் தேதி ஸ்டிராஸ்பர்கிலிருந்து கோட்மன் (Kottmann) என்ற தாதி ஒருவர் வந்து சேர்ந்தார். பழைய சோசப் திரும்பவும் இப்பொழுது வேலைக்கு வந்தார். எனினும், நோவல் ஆக்ஸ்போர்டுக்குத் திரும்பவேண்டிய காலம் விரைவில் வந்துவிட்டது. அக்டோபர் மாதத்தில் டாக்டர் நெஸ்மன் (Dr. Nessmann) என்ற மருத்துவர் சுவைட்சருக்கு உதவியாக வந்து சேர்ந்தார். சுவைட்சரைப் பெரிய டாக்டர் என்றும், நெஸ்மனைச்

சிறிய டாக்டர் என்றும் ஆப்பிரிக்கர்கள் சொல்லத் தலைப்பட்டார்கள். டாக்டர் சுவைட்சர் மருத்துவ மனையைப் புதிதாகக் கட்டுதற்கும் செப்பனிடு தற்கும் இப்பொழுது நேரம் பெற்ருர். விரைவில் நாற்பது நோயாளர்கள் படுப்பதற்கு உரிய இடங்கள் செவ்வையாயின. 1925-இல் இன்ெருரு டாக்டர் வந்தார்; மறுபடி இன்ெருரு தாதி வந்தார். நாளடைவில் வெள்ளையர் நோயாளர்கள் தங்குதற்கு உரிய இடங்கூட அமைக்கப்பட்டு விட்டது. சுவைட்சர் மருத்துவ மனையை முதலில் நீக்ரோவர்க்கே என்று கட்டினர். எனினும், மருத்துவ மனை நல்ல வளர்ச்சியுற்றுவிட்டதாலும், வெள்ளையர் நோயாளர்கள் பலர் வந்து சேர்ந்த தாலும், அவர்கட்கும் இடம் அமைத்துத் தர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மருத்துவ மனை யின் வளர்ச்சிக்கு உரியவகையிற் பொருள் கிடைத்துவிட்டது. அந்த ஊரிற் கூரைக்குப் போடப்படும் ஓலைக் கற்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குத்தான் நிற்கும். அல்லா மலும், பெருமழை பெய்தலை அக்கற்கள் தாங்க மாட்டா. எனவே, ஐரோப்பாவிலிருந்து இருப்புத் தகடு பெற்றுக் கூரை போடவேண்டுமென்று டாக்டர் சுவைட்சர் கருதினர். ஒரு புது இடத்திற் புதுக் கட்டிடத்தை மருத்துவ மனைக்காக எழுப்ப வேண்டுமென்று சுவைட்சர் நினைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. மருத்துவ மனையில் நாற்பது கட்டிடங்கள் நாளடைவிற் கட்டப்பட்டுவிட்டன. அது ஒரு மருத்துவ மனைபோன்று காட்சியளிக்க

வில்லை; முழுக்கிராமம் போலவே காணப்பட்டது. மருத்துவ மனைக்கு நாடொறும் வந்து திரும்பும் நோயாளிகளின் ஆலோசனை அறை டாக்டருடைய வீட்டைக் காட்டிலும் உயரமுடையதாய் இருந்தது. இருநூற்றைம்பது நோயாளர்கள் படுத்திருந்து சிகிச்சை பெறுதற்கு வசதிகள் செய்து தரப் பட்டன. அந்த நோயாளர்களிற் பலர் வயிற்றுக் கடுப்பு நோயினால் வருந்தினார்கள். விரைவில் அந் நோயினைப் போக்கினார் சுவைட்சர். மேன்மேலும் வரக்கூடிய நோயாளர்கள் தங்குதற்குத் தக்க ஏற் பாடுகள் செய்துவிட்டும், தக்க மருத்துவர்கள் தாதி யர்கள் ஆகியோரை லாம்பரீனில் நிலைபெறுமாறு செய்துவிட்டும், டாக்டர் சுவைட்சர் 1927 சூலையில் தமது ஊர்நோக்கிப் புறப்பட்டார்.

ஊருக்குத் திரும்பும்பொழுது மன வருத்தத் துடனேயே சுவைட்சர் புறப்பட்டார். அவர் பிறந்த பொன்னாட்டைப் போல லாம்பரீன் அவர்க்கு இனிய நாடாகிவிட்டது. அதனின்று புறப்படுதல் என்றாலே அவர்க்கு வருத்தம் நிரம்பிற்று; அதற்கு மேல் ஆப்பிரிக்க நோயாளர்களை விட்டுப் பிரிதல் வேண்டுமே என்று கலங்கினார். ஐரோப்பாவிற் குத் திரும்பியவுடன் மனைவியையும் குழந்தையை யும் கண்டு மகிழ்ந்தார். நண்பர்கள் பலர் வந்து இன்னுரை கூறி வரவேற்றார்கள். எனினும், அவர் ஊர்திரும்பி வருவதற்குள் தந்தையார் இறந்து பட்டனரே என்றும், அவரை மீண்டும் உயிருடன் காணவியலாதுபோயிற்றே என்றும் சுவைட்சர் கவன்றார். உள்ளமும் எண்ணமும் லாம்பரீன்

மருத்துவ மனையில் இருந்தாலும், விரிவுரை ஆற்றுதலிலும், இசையரங்குகள் நடத்துதலிலும், புத்தகங்கள் எழுதுதலிலும் சுவைட்சர் ஈடுபடுவா ராயினர்; ஸ்வீடன், டென்மார்க்கு முதலிய தேசங் களுக்குச் சென்றார். பல தேசங்களிலிருந்தும் லாம்பரீன் மருத்துவ மனைக்கு வந்துகொண்டிருந்த நன்கொடைகளை ஏற்றுக்கொண்டு லாம்பரீனுக்கு அனுப்புவதற்கு உரிய தலைமையிடமாக ஒன்றினை ஸ்டிராஸ்பர்க்கில் அமைத்துக்கொண்டார். எம்மி மார்டின் (Emmy Martin) என்ற அம்மையார் இந்த வேலையை நன்றாகக் கவனித்து அவர்க்கு உதவினர். சுவைட்சரின் மேசைக் கால்கள் இரு மருங்கிலும் இரண்டு சாக்குகள் கட்டப்பட்டிருந் தன. ஒரு பக்கத்துச் சாக்கில் பதில் எழுதப்பட்ட கடிதங்களும், மற்றொரு பக்கத்துச் சாக்கில் பதில் எழுதப்படாது கிடக்கும் கடிதங்களும் இருக்கும். உலகம் எங்கணும் இருந்து அவர்க்குக் கடிதங்கள் வந்தவண்ணம் இருந்தன. கீதே (Goethe) என் பவரைப்பற்றி அவர் செய்த அரிய சொற்பொழிவு களுக்காக அவருக்குக் கிடைத்த பரிசுத் தொகை யிலிருந்து கன்ஸ்பாக்கில் ஒரு வீடு கட்டினர். அந்த வீடு அவர்க்குரிய வீடாக மாத்திரம் இருந்த தில்லை. லாம்பரீனுக்குச் செல்லும் மருத்துவ உதவி யாளர்களும், அங்கிருந்து திரும்பும் உதவியாளர் களும் வழியில் தங்கிப்போகும் ஓர் அற நிலையமாக வும் அவ்வீடு இருந்தது. அந்த வீட்டினைக் கட்டு தற்காக கீதே சொற்பொழிவுப் பரிசுத் தொகையை அவர் பயன்படுத்துதற்கு முன்னல், அதனை ஒத்த

தொகையைத் தம்முடைய பிற சொற்பொழிவுகளி லிருந்தும் இசையரங்குகளிலிருந்தும் சேகரித்துச் செர்மானிய அற நிலையங்களுக்காகத் தந்துவிட் டார். அதன் பிறகுதான், கீதே பரிசுத் தொகை யைப் பயன்படுத்திக் கீதே என்பவரின் பெயரால் வீட்டினைக் கட்டி அமைத்துக் கொண்டார். கீதே என்னும் செர்மானிய கவிஞரைப்பற்றி ஆற்றிய விரிவுரைகள் காரணமாகக் கிடைக்கப்பெற்ற பணத் தினுல் அவ்விடு கட்டியமையின், அதனைக் "கீதே வீடு" என்று சொல்வது அவர் வழக்கம். செகோஸ்லோவாகியா, செர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய தேசங்களில் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கப்பட்டன. அந்தத் தேசங்களி லுள்ள நண்பர்கள் பலர் மருத்துவ மனையின் வளர்ச்சிக்காகப் பெருங்கொடைகள் அளித்தனர். செல்வியார் ஒருவர் தமது விலையுயர்ந்த பதக் கத்தை விற்று ஒரு கட்டிடத்திற்காகத் தந்தார். அந்தக் கட்டிடம் பதக்கக் கட்டிடம் என்ற பெயரிற் கட்டப்பட்டது. லண்டனில் மகளிர் மூவர் "ஆற்று வீடு" என்ற ஒரு வீட்டை லாம்பரீன் மருத்துவ மனையின் உறுப்புக்களில் ஒன்ருகக் கட்டி அமைப் பதற்காக நிதியம் தந்தனர். பைத்தியம் பிடித்த நோயாளர்களைத் தனியே வைத்துப் பாதுகாப்ப தற்கென ஒரு கட்டிடம் கட்ட ஒரு நிதி வசூல் செய்யப்பட்டு அளிக்கப்பட்டது. குடிப்பதற்குரிய இனிய நீர்க்கேணி ஒன்று வேறு சிலருடைய பண உதவியால் தோண்டப்பட்டது. சிலர் நல்லொளி விளக்குகள் வைப்பதற்குப் பணம் உதவினர்.

1929-இல் மறுபடியும் சுவைட்சர் தமது மனைவியோடு ஆப்பிரிக்கா சென்றார். லாம்பரீனில் மன்னுயிர்ப் பணியில் இரண்டு ஆண்டுகள் கழித்தார். முன்னர்ச் செய்த வேலையைக் காட்டிலும் இருமடங்கு வேலைகள் இப்பொழுது செய்யப்பட்டன. தம்முடைய வாழ்க்கை வரலாற்றை அவரே எழுதினார். அது செர்மன் மொழியிலும் ஆங்கில மொழியிலும் 1931-இல் வெளியிடப்பட்டது. பிராங்குபர்டு (Frankfurt) என்ற இடத்தில் 1932 மார்ச்சு 22-ஆம் தேதி கவிஞர் கீதேயைப்பற்றி அவர் அரிய விரிவுரையாற்றினார். கேட்க வந்திருந்த கூட்டத்தினரை நோக்கி, ஒவ்வொருவரும் தத்தமது ஆன்மாவைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு மகளும் சிந்தித்து ஆய்தல் வேண்டுமென்றும், அதே நேரத்தில் அறிவினைச் செயற்படுத்துபவராக இருக்கவேண்டுமென்றும் நன்றாக எடுத்துக்காட்டினார். மனம் சென்ற சென்ற இடங்களில் அதனை விட்டுவிடுதல் ஆகாது எனவும், தீயதினின்று நீக்கி நல்லதன்கண் அதனைக் கொண்டு செலுத்துதல் வேண்டும் எனவும் வற்புறுத்தினார்.

“ சென்ற இடத்தாற் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு ”

என்ற பொய்யாமொழி எல்லா நாடுகளுக்கும் ஒத்தது அன்றோ? மனம் போன இடத்தில் அதனை விட்டிடாமல், தீதினின்று நீக்கி, நல்லதன்கண் அதனைச் செலுத்துதல் அறிவிற்கு அழகு என்ற

திருவள்ளுவர் கருத்து எக்காலத்திற்கும் பொருந்துவது ஒன்றன்றோ?

கீதே மக்கள் பிறரையும் தம்மைப்போல ஒவ்வொருவரும் கருதவேண்டும் என்று எண்ணியவர் ஆனதாலும், மக்களினத்தார்க்குச் சிறந்த தொண்டு ஆற்றியவர்க்கு அப்பரிசு வழங்கப்படுவது என்பது விதி ஆனதாலும், சுவைட்சர் அவ்வாறு பேசியது மிக்க பொருத்தம் உடையதாகும். 1932-இல் இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து முதலிய தேசங்களுக்கு விரிவுரை ஆற்ற அவர் சென்றார். உலகச் சமயங்களை ஒப்பு நோக்கி, சிறப்பாக இந்தியக் கொள்கைகளையும் ஆசியக் கொள்கைகளையும் ஆராய்ந்து ஒரு புத்தகம் எழுத அவர் முடிவு செய்துகொண்டார். 1933-இல் மறுபடியும் லாம்பரீனுக்குப் போய் ஒன்பது மாதங்கள் அங்குப் பணியாற்றிவிட்டுத் திரும்பவும் ஐரோப்பாவிற் சொற்பொழிவுகளுக்காக வந்தார்; ஆப்பிரிக்காவில் இப்பொழுது போனபொழுது புதுப்புதுக் குடிசைகள் கட்டினார்; மருத்துவத்திற் புதுவதாக ஏற்பட்டிருந்த வளர்ச்சிகளையொட்டி லாம்பரீன் மருத்துவ மனையிலும் சிற்சில சீர்திருத்தங்கள் செய்தார்.

1934-இல் எடின்பரோ பல்கலைக் கழகம் அவருக்குப் பேரறிஞர் பட்டம் தந்தது. 1935-வது ஆண்டில், அவருடைய அறுபதாவது ஆண்டு நிறைவு நிகழ்ந்தபொழுது, நூற்றுக் கணக்கான நண்பர்கள் நேரில் வந்து அவருக்கு வாழ்த்துக்கள் கூறினார்கள்; ஆயிரக் கணக்கான கடிதங்களும்

தந்திகளும் உலகத்தின் பல திசைகளிலிருந்து வந்து குவிந்தன. கொலம்பியா ஒலிப் பதிவுக் கழகத்தினர் பாக் பாடல்கள் சிலவற்றைச் சுவைட்சரைக் கொண்டு பாடுவித்து ஒலிப்பதிவு செய்து கொண்டனர். அவ்யாண்டில், சுவைட்சர் மறுபடியும் லாம்பரீன் சென்று, ஆறு மாதத்தில் மீண்டும் திரும்பினார். அவர் 1937-இல் ஆறாவது முறையாக லாம்பரீனுக்குச் சென்றார். முகத்திற் புன்னகையுடன் நண்பர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றார் ஆயினும், அவர் உள்ளத்திற் பெருந்துயரம் இருந்தது என்பது அவரை அறிந்த நண்பர்களுக்குத் தெரியும். உலகப் போருக்குரிய அறிகுறிகள் தென்படத் தொடங்கிய காலத்தில்தான் அவர் லாம்பரீன் சென்றுகொண்டிருந்தார். 1939-முதல் 45 வரை நடந்த உலகப்போர் நடப்பதற்குரிய அறிகுறிகள் காணுந் தறுவாயில் அவர் ஆப்பிரிக்கா சென்றுகொண்டிருந்தார் ஆதலால், உலக நாடுகள் ஒன்றோடொன்று போர் தொடுக்கின்றனவே என்ற எண்ணத்தினால் நைந்து உருகினார். 1937-இல் லாம்பரீன் சென்றவர் 39-இல் ஐரோப்பாவிற்குத் திரும்பினார்.

> “ உலகிற் பெரும்போர், உலகைப் பெறும்போர்
> உலகின் உரிமை உறிஞ்சும் கொடும்போர்
> மூண்டது மூண்டது மூண்டது”

என்று பாரதிதாசன் பாடியதுபோல அப்போர் மூண்டது, மூண்டது. ஆதலால், வந்த கப்பலில்-தானே ஆப்பிரிக்காவிற்கு உடன் திரும்பிவிட்டார் சுவைட்சர். ஐரோப்பாவிற் பெரும்போர் காரண

மாக எந்தத் தீமை விளைந்தாலும், நோயினால் ஆப்பிரிக்காவில் உழந்துகொண்டிருக்கும் மக்கள் எவ்வாற்றாலும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தால் துடுமென மீண்டும் சென்று விட்டார். சென்றவர் ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் மன்பதைத் தொண்டு ஆண்டே செய்து மகிழ்ந்தார். ஆப்பிரிக்கா தேசங்கூட போருக்குரிய பகுதியாகக் கருதப்பட்டது. எனினும், இருதிறத்தாரும் லாம்பரீன் மருத்துவ நிலையத்தை மாத்திரம் தொடாது விட்டுவிட்டார்கள். சுவைட்சரின் மனைவியார் போரின் இடைக்காலத்தில் லாம்பரீன் மறுபடியும் வந்து சேர்ந்தார். வரும்பொழுது அவர்தம் மகள் ரீனாவும் உடன் வந்ததுபற்றிச் சுவைட்சருக்குப் பெருமகிழ்வு உண்டாயிற்று. அமெரிக்க தேசத்திலிருந்து மருத்துவ நிலையத்திற்குக் கிடைத்த பொருளுதவியால் மருத்துவ நிலையம் தளராது முழுத் தொண்டு ஆற்றுதல் இயலுவதாயிற்று. 1945 சனவரியில், அவருடைய எழுபதாவது ஆண்டு நிறைவு லாம்பரீனிற் கொண்டாடப்பட்டது.

1945 மே 7-ஆம் தேதி ஐரோப்பாவிற் போர் நிறுத்தப்பட்டது என்ற செய்தி அவர் காதில் விழுந்தது. போர் நின்றுவிட்டது என்ற செய்தி வானொலி வழியாகக் கேள்வியுற்ற வெள்ளையர் நோயாளர் ஒருவரால் அவர்க்கு அறிவிக்கப்பட்டதாயினும், அதனைப்பற்றி அவர் உடனே சிந்திக்கவில்லை. காரணம், அன்று அஞ்சற் கட்டிற்கு உடனே செல்லவேண்டிய கடிதங்களை அவர்

ாழுதிக் கொண்டு இருந்தமையும், இருதய நோயா ளர்களை உடனே கவனிக்கவேண்டி இருந்தமையும் ஆம். முடங்கல்களை வரைந்து அனுப்பிவிட்டு, உடன் கவனிக்கவேண்டிய நோயாளர்களைக் கவனித்துவிட்டுப் போர் நிறுத்தத்தைப் பற்றி அமைதியாகச் சிந்திக்கத் தலைப்பட்டார் அக்கரும வீரர். போர் நின்றது என்ருல், எத்துணை இலட்சக்கணக்கான மக்கள் நன்ருக உறங்குதல் இயலும் என்று அப்பொழுதுதான் கருதிஞர். போர் நடந்துகொண்டிருந்த ஆண்டுகளிற் பிறந்த குழந்தைகளும் பெற்ருேர்களும் என்று குண்டு விழுமோ, எங்குக் குண்டு விழுமோ என்று அஞ்சியஞ்சி, உறக்கம் இல்லாமல் இரவு பகல் தவித்தவர்கள் இப்பொழுது நன்ருக உறங்குதல் கூடும் என்று நினைத்து அப்பேரறிஞர் மகிழ்ந்தார். லா-தசே (Lao-Tse) என்ற சீன அறிஞர் ஒருவருடைய புத்தகம் ஒன்றினை எடுத்து உடன் புரட்டிஞர். கி. மு. ஆருவது நூற்ருண்டில் வாழ்ந்த அச்சீன அறிஞர் போரைப்பற்றிக் கூறி யிருந்த இடம் அவரது நினைவிற்கு வந்தது. அந் தப் பக்கத்தை எடுத்தார். "போரில் வெற்றி கண்டவர்கள் வெற்றி காரணமாக மகிழ்வார்கள் எனின், மக்கள் கூட்டத்தினரை வதைத்தோமே என்று நினைத்து மகிழ்வார் ஆதல் வேண்டும். போரில் வெற்றி என ஒன்று கொண்டாடப்படு கிறது என்ருல், வென்றவன் சுடுகாட்டு விழா ஒன்ற னில் இருப்பதுபோலத் தன்னை எண்ணிக்கொள்ளு தல் வேண்டும். போரிற் பல மனிதர்கள் கொல்லப்

பட்டுள்ளார்கள் ஆதலால், அவர்களுக்காக ஒவ் வொருவரும் அழுதல் வேண்டும்; அவர்களிடம் இரக்கங்கொண்டு ஒவ்வொருவரும் கண்ணீர் விடு தல் வேண்டும். இதற்கு மாருக வெற்றிமுரசு முழங்குதல் ஒவ்வாது'' என லா-தசே எழுதி யிருந்த அறவுரைகளைச் சுவைட்சர் நினைவுபடுத் திக் கொண்டார். இவை இன்றும் நினைவுபடுத்திக் கொள்ளத் தக்கனவே.

போர் நின்றது என்ருலும், மருத்துவ மனைக்கு வேண்டிய மருந்துகள் எல்லாம் வந்து சேரவில்லை. அமெரிக்கா தேசத்திலுள்ள அந்தணர்கள் சிலரது செந்தண்மையினுல்-நாளடைவில் நல்லுதவி கிட்டு வதாயிற்று. டாக்டர் ஜாய் என்பாரும், ஆர்னேல்டு என்பாரும் ஆகிய அந்தணர்கள் அமெரிக்காவி லிருந்து லாம்பரீனுக்கு நேரே வந்து பார்த்து, சுவைட்சருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய லுற்ருர்கள். புதுப்புது மருத்துவர்களும் தாதிமார் களும் வந்து சேர்ந்தனர். மருத்துவ மனை புதுப் புதுக் கருவிகள் கிடைக்கப் பெறுவதாயிற்று. ஆதலால், 1948-இல் சுவைட்சர் ஆப்பிரிக்காவை விட்டு நீங்கி, மீண்டும் ஐரோப்பா செல்வாரா யினர்.

1953-இல் சுவைட்சருடைய பெருந் தொண் டினைப் பாராட்டி வெல்கம் (Welcome Medal) பதக்கம் என்ற பெரும்பரிசு ஒன்று அவர்க்கு அளிக்கப்பட்டது. அப்பரிசோடு பணத்தொகை யும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அதனைக் கொண்டு, பெருநோயினுல் வருந்தும் ஆடவர்

மகளிர் சிறுவர்களுக்கு எனப் புதுவதாக ஒரு தனிக் கிராமம் அமைத்து, அவ்விடத்தில் அந் நோயாளர்களை வைத்துச் சிகிச்சை செய்ய அவர் ஏற்பாடு செய்தார். அங்கம் குறைந்து அழுகு தொழுநோயர் பலர் அவருடைய பெருநோய் மருத் துவ மனையில் வந்து சேர்ந்தனர். 1950-இல் ஐம் பது பேராக இருந்த நோயாளர்களின் எண் ணிக்கை 54-இல் நானூறு வரை எட்டிப் பார்த்தது. பெருநோயைத் தீர்ப்பதற்கு மருந்து இல்லை யென்று சிலர் கருதினார்கள் என்றாலும், புது மருந்துகள் சில சல்போன் (Sulphone) போன் றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன ஆதலால், அவற் றைக் கொண்டு நான்கு அல்லது ஐந்து ஆண்டு கள் முதலிலேயே சிகிச்சை செய்தால், அந்நோ யினை அகற்றிவிடுதல் கூடும் என்பதில் சுவைட்சர் நம்பினார். எனவே, குட்ட நோயினருக்கெனத் தனியாக மருத்துவ மனை அமைத்து அவர்களுக்கு உதவிசெய்யத் தலைப்பட்டார். பெருநோயினரைக் காணக்கூடக் கண்கூசி, மக்கள் ஒதுக்கித் தள்ளி விடுவது வழக்கம். அவ்வாறு கதியற்ற எத் துணையோ பேர் சுவைட்சர் மருத்துவ இல்லத்தில் நன்றாகக் கவனிக்கப்பட்டனர். அத் தனி மருத் துவ இல்லத்தின் அங்கங்களாகச் செயற்கூடம், கட்டுக்கூடம், இரண சிகிச்சை செய்யும் இடம் முதலியனவும், ஏழு அல்லது எட்டுப் பெரும் வீடு களும் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் சிறிய சிறிய அறைகள் பல உண்டு. ஒவ்வோர் அறையிலும் இரண்டு அல்லது மூன்று நோயாளர்

களுக்குமேல் இருக்க விடப்படுதல் இல்லை. ஒவ்வொரு வீட்டின் முன்புறத்திலும் காற்ரேட்டமான இடைவெளி உண்டு. ஒவ்வொரு அறையின் பின் புறத்திலும் நோயாளர்கள் தத்தமக்கு வேண்டிய உணவினைச் சமைத்துக் கொள்ளுதற்கு உரிய சமையல் அறை உண்டு. ஆப்பிரிக்கர்கள் தாமே சமைத்து உண்ண விரும்புவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தமையின், மருத்துவ மனை அவர்களுடைய சொந்த வீடுகள்போல இருக்கும் படி அவர் ஏற்பாடு செய்துதந்தார். அல்லாது போனல், பின்னர் விரைவில் வீட்டு எண்ணம் உண்டாகி, நோயாளர்கள் வீட்டிற்கு ஓடிவிடுவார் கள் என்று கருதினர். இவ்வாறு மன்னுயிர்ப் பணி தொடர்ந்து செய்யப்படுவதாயிற்று.

உலகிற் சாதிகள் இரண்டு என்றும், ஒரு சாதி யினர் மன்பதைகட்கு உழைப்பவர் என்றும், மற் ருெரு சாதியினர் தமக்காகவே வாழ்ந்து திரிபவர் என்றும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கருதி னர். அதனல்,

"மன்னுயிர்க் காக முயல்பவரே—இந்த
மாநிலத்து ஓங்கும் குலத்தினராம்;
தன்னுயிர் போற்றித் திரிபவரே—என்றும்
தாழ்ந்த குலத்திற் பிறந்தோர் அம்மா!"

என்று பாடினர். தமக்காக அன்றி மன்னுயிர்க் காக உழைத்த சுவைட்சர் ஓங்கிய பெருங்குலத் திற்கு உரியவர் என்பது தேற்றம்.

# 7. வயது முதிர்ந்த நிலையில்

வயது முதிர்ந்த நிலையிலும் சுவைட்சர் மக்களுக்குப் பணி செய்யவேண்டும் என்ற ஆர்வம் உடையவராகவே இருந்து வருகிறார். 1958 சனவரி 14-ஆம் தேதி அவருடைய எண்பத்து மூன்றாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அப்பொழுதும் அவர் ஆற்றலொடும், பேரன்பொடும், இரக்க உள்ளத்தொடும், செயலாற்றும் திறமையொடும் காணப்பட்டார். அவர் வாழ்நாளிற் பெரும்பான்மையான பாகம் அற்றார்க்கு ஒன்று ஆற்றுவதிலேயே கழிந்துள்ளது. 1955 அக்டோபரில் அவரை இங்கிலாந்து தேசத்திற்கு வரவழைத்து எலிசபெத் பேரரசி சிறந்ததொரு பட்டம் (Order of Merit) அளித்தார். அவருடைய பருத்த தோளும், முனைந்த மூக்கும், செழித்த மீசையும், வளையாத தலைமயிரும், அமர்த்த கண்களும் அவருடைய செயற்றிறமையினையும் அஞ்சா நெஞ்சினையும் இளகிய உள்ளத்தினையும் புலப்படுத்துகின்றன. அவருடைய கைகள் பெரிய கைகள்; அவை வலிமையையும் நுட்பத்திறனையும் காட்டுகின்றன. பேனாவாய் இருந்தாலும், கத்தியாய் இருந்தாலும், அக்கையில் எடுத்தவை கட்டாயம் வெற்றியுறும் என்பதை அக்கைகள் காட்டிக் கொண்டிருக்கின்றன என்று நேரே கண்டறிந்தவர்கள் சொல்லுகின்

றனர். கத்தி அறுத்துச் சுடுதற்கு உதவிய கத்தி; ஆளைக் குத்தி அழித்தற்கு உதவுங் கத்தி அன்று. அவர் கைகள் வாளும் சம்மட்டியும் எடுத்து எடுத்துக் காழ்த்துப் போனவை. அந்த வாள் போருக்கு உரிய வாள் அன்று; மக்களிடம் வைத்த நாருக்குரிய வாள். அக்கைகள்தாமே இசைக் கருவிகளையும் இனிமையில் இயக்கிய கைகள் என்பதை அறிந்து உலகம் மகிழ்கிறது. கையெழுத்து இலக்கணம் அறிந்த ஒருவர், அவர் இன்னர் என்று அறியாமலே அவருடைய கையெழுத்தைப்பற்றி "சர்வாதிகாரி ஒருவருடைய கையெழுத்து இது" என்று ஒரு நாள் கூறினர். அவரை ஒருவிதத்திற் சர்வாதிகாரி என்று கொள்வது பொருந்துவது தானே? அவர் முன்னியதைச் செய்துமுடிக்கும் முழு வீரர் ஆதலால், அவரைச் சர்வாதிகாரி என்று சொல்வது பொருத்தமுடைத்து என்று அவருடைய நண்பர்கள் சொல்லுகிருர்கள்.

சுவைட்சர் கையை வீசித் தெருவில் நடந்து செல்லும்போது பார்த்தவர்கள் ஓர் அரசர்போல நடப்பதாக அவரைப்பற்றிச் சொல்லுதல் உண்டு. தம் வாழ்நாள் முழுதும் ஏழை எளிய மக்களொடு வாழ்ந்து, அவர்களுக்காகவே உழைத்தவர் உலகப் பெருந் தலைவர்க்கு ஒத்த பீடு நடைகொள்வதில் என்ன வியப்பு! ஆயினும், நோயாளிமுன் அவர் குனிந்துநின்று, அவர்க்கு ஒன்று உதவும் நேரத்தில் அவரைப் பார்த்தால், அவர் கண்ணின் பார்வையிலேயே அவருடைய கவலை தோன்றுதல் உறுதி.

லாம்பரீன் மருத்துவ மனையில் நாடொறும் கடன்கள் எவ்வாறு ஆற்றப்படுகின்றன என்பதை அறிந்துகொள்ளுதல் நல்லது. காலை 6-30 மணிக்கு நோயாளர்களும் பிறரும் தோன்றுவார்கள். நோயாளர்கள் அவரவர்க்கு உரிய நோய் தீரும்பொருட்டுக் கவனிக்கப்படுவர். மருத்துவ இல்லங்களிற் சிறப்பு வேலை பார்ப்பவர்கள் டாக்டர் சுவைட்சருடைய ஆணைகளை எதிர்பார்த்து நாடொறும் 6-30 மணிக்கு ஓர் இடத்திற் சந்திப்பர். டாக்டர் சுவைட்சர் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய பணி யாது என அவர்களுக்குத் தெரிவிப்பார். மருத்துவ மனை வேலைகள் முடிந்த பிற்பாடு, நண்பகலில் யாவரும் உணவிற்குச் செல்வர். ஆப்பிரிக்க மக்கள் தம் உணவைத் தாமே ஆக்கிக்கொண்டு உண்பர். பிற நாடுகளிலிருந்து வந்திருக்கக்கூடிய பார்வையாளர்கள் டாக்டர் சுவைட்சரொடு உடன் உண்பர். நண்பகல் உணவிற்குப் பிறகு, யாவரும் ஒரு மணி நேரம் ஓய்வு அல்லது உறக்கம் கொள்வது உண்டு. மிக்க வெப்பம் வாய்ந்த நாடு ஆதலால், ஆப்பிரிக்காவிற் பகலில் ஓய்வுகொள்ளுதல் என்பது யாவர்க்கும் ஒத்த ஒரு பழக்கம். பிற்பகல் இரண்டு மணிமுதல் மாலை ஆறு மணி வரையில் மறுபடியும் யாவரும் வேலைசெய்வர். ஆறு மணிக்குப் பிறகுதான், சுவைட்சர் புதியவராக வந்துள்ள பார்வையாளர்களைக் கண்டு பேசுதல் உண்டு. இரவு உணவிற்குப் பிறகு இன்னிசைக் கருவியைக்கொண்டு இனிய துதிப் பாடல்களை அவர் இயக்குவார். பின்னர், பார்வையாளர்கள்

விரும்புவார்களானால், தம்முடைய உறைவிடத்திற்கு அவர்களைச் சுவைட்சர் அழைத்துப் போவார். அங்கே அவர் படிப்பதற்கும் உறங்குவதற்கும் ஆக அமைந்த ஓர் அறை உண்டு. கொசுவலையொடு கூடிய ஒரு படுக்கை அங்கே காணப்படும். திண்டு போட்டுக் கொள்ளாமலே அவர் மரப் பலகைமீது எழுபது வயதுவரையில் உட்கார்ந்து வேலைபார்த்தவர் என அறிகின்றோம். பிறகு ஒரு பஞ்சுமெத்தையை மரப்பலகையிற் சேர்த்துக் கொண்டுள்ளார். அவ்வறையில், தோட்ட வேலைகளுக்கு உரிய கருவிகளும், பிற கருவிகளும் ஒரு மூலையில் வைக்கப்பட்டு இருத்தலை ஒருவர் காணுதல்கூடும். பக்கத்து அறையில், அவர்க்கு இனிய அருங்கலமாக அமைந்த பியானோ இசைக்கருவி உண்டு. சில நேரம் அவர் இள மான் குட்டிகளொடு விளையாடுதல் உண்டு.

இரவு எட்டரை மணியளவில் ஒரு மணி அடிக்கப்படும். அது ஊர் அடங்க வேண்டும் என்பதை அறிவிப்பது. அம்மணியோசையைக் கேட்டவுடன் யாவரும் விளக்குகளை அணைத்துவிட்டு உறங்கச் சென்றுவிடுவர். ஆனால், எட்டரை மணிக்குமேல் தான் சுவைட்சர் ஏதாவது வேலையைக் கவனிப்பார். நோயாளர்களுக்குக் கடுமையாக நோய் இருப்பின், அந்நாளில் அவர் ஒன்றும் எழுதுதல் இல்லை. அவர் பெரும்பான்மையான நாட்களில் இரவிற் பன்னிரண்டுமணி வரையில் வேலைபார்த்து வருதல் வழக்கம். அவர் படுத்துக்கொள்ளச் செல்லுதற்கு முன்னால், ஒவ்வொரு நோயாளியும்

படுத்திருக்கும் இடத்திற்குப் போய் அவர்க்கு ஒரு நல்லுரை பகர்ந்துவிட்டுத்தான் செல்லுவார். அவர் இரவில் வந்து தம்மிடத்தில் விடைபெறுவார் என ஒவ்வொரு நோயாளியும் அவரை எதிர்நோக்கி இருத்தல் உண்டு. இவ்வாறு நாடோறும் மருத்துவ மனை நிகழ்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன.

ஆப்பிரிக்க மக்களிடைத் தோன்றிய குட்ட நோயினைப் போக்குதற்கு வழிகாணச் சுவைட்சர் முயன்றார். அவருடைய அமெரிக்க நண்பர்கள் பலர் அவருக்கு உதவி செய்தனர். 1949 அக்டோபர் மாதம் மீண்டும் அவர் லாம்பரீன் சென்றார். இரண்டு ஆண்டு கழித்து, அவர் பிரான்சிற்குத் திரும்பியபொழுது, அவரை வரவேற்பதற்குக் கூடிய மக்களின் பெருங்கூட்டம் அவரைத் திகைக்க வைத்துவிட்டது. அவருடைய இசை திசையெல்லாம் பரவி, நாட்டில் அடங்காதாகிவிட்டது என்றுகூடச் சொல்லுதல் இயலும். அவருடைய புத்தகங்கள் இருபது மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன. ஒருவராலும் கவனிக்கப்படாதவராகப் பலமுறை பிரஞ்சுதேச எல்லையிலிருந்து இரயிலில் ஏறியும் இறங்கியும் முன்னர்ச் சென்றுகொண்டிருந்த சுவைட்சர் இப்பொழுது பத்திரிகையாளர்களுடைய பெருங்கூட்டத்தினரால் வரவேற்கப்பட்டு வினாக்கள் எழுப்பப்படும் நிலை அடைவாராயினார். அவர் வரும் கப்பலை எதிர் நோக்கி, கடலினுள் வழிகாட்டும் படகுகளில் முன் கூட்டியே போய் அவரைக் கண்டு மகிழ்பவர்களும், நிழற்படம் எடுத்து விளம்பரம்படுத்துபவர்களும்

நிரம்ப உள்ளார்கள். இவற்றையெல்லாம் கண்ட டாக்டர் சுவைட்சருக்குச் சில நேரங்களிற் கோபம் வந்தாலும், அவருடைய நல்லியல்பு அதனை அடக்கிக் கொள்ளும்படி செய்துவிட்டது. இறுதியில், கப்பலிலிருந்து இறங்கிய பிறகு, வரவேற்புக் குழுவினர்கள் எல்லாம் வீட்டிற்குத் திரும்பிய பிற்பாடு, கும்பலிலிருந்து விலகிப்போய்த் தம்முடைய ஊருக்கு மூன்றுவது வகுப்புப் பிரயாணி வண்டியிலே அவர் போய் ஏறுவார். தம்முடைய பெட்டிகளைத் தாமே தூக்கிக்கொண்டு அந்தப் புகை வண்டியில் அவர் ஏறும் காட்சி பலராலும் வியக்கப்படுவதாயிற்று.

அவர் மீண்டும் 1952-இல், ஐந்து மாதங்களுக்குள் லாம்பரீன் திரும்ப முடிவு செய்துவிட்டார். இப்பொழுது பிரஞ்சு கல்விச் சங்கத்தின் (French Academy) உறுப்பினராக அவரைச் சேர்த்துக் கொண்டிருப்பதாக ஒரு செய்தி அவருக்குக் கிடைத்தது. பிரஞ்சு கல்விக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்த்துச் கொள்ளப்படுவதென்பது மாப்பெருமைகளில் ஒன்று. உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுபவர் சங்கத்தில் ஒரு பெருஞ் சொற்பொழிவு ஆற்றுதல் வேண்டும் என்பது விதி. அவ்வாறு 1952-இல் அவராற் கல்விச் சங்கத்தார் முன் இயற்றப்பட்ட சொற்பொழிவு வெளியாகியுள்ளது. அதனுள் “ அற வழி ” என்பது ஒவ்வொருவரும் தம்தமக்கும் பிறர்க்கும் செயலாற்றிக்கொள்ளும் வழி என்பதை அவர் விளக்கியுள்ளார். தம்மைப்பற்றி நினைக்கும் மக்கள் நாளடைவில் பிறர்

மாட்டுத் தாம் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதைச் சிந்திக்கத் தொடங்குவார் ஆகையால், நாளடைவில் அவர்கள் வேற்றுநாட்டு மக்களொடு ஒத்த இனத்தவராகவும் தோழராகவும் ஆகிவிடுதல் கூடும் என்ற முடிவிற்கு அவர் வந்தார். அவ்வழியினுல் மக்கள் கூட்டத்திற்குச் செய்யவேண்டிய தொண்டின் பொறுப்புவளர்ந்துவிடுதலை அச்சொற்பொழிவிற் சுட்டிக் காட்டினுர். சீன தேசத்து லா-தசே, கான்பூசியஸ் (Confucius) முதலியவர்கள் இம்முறையில் முன்னர்ச் சென்றிருத்தலை எடுத்துக் காட்டினுர். ஏசுநாதரும், அருட்டிரு. பாலும் நாம் பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளவாற்றையும் எடுத்துக் காட்டினுர். இந்தியாவில் மக்கள் எல்லாம் உடன்பிறந்தவர்கள் என்று ஒருபுறம் சொல்லி, மறுபுறம் சாதிப் பிரிவுகளை வைத்து, மனிதனுக்கு மனிதன் எதிரே சுவர்கள் எழுப்பப்படும் பொல்லாத வழக்கத்தைப்பற்றிப் புண்பட்ட நெஞ்சம் உடையவராய்ப் பேசினுர். இந்தியாவிற் பிறந்த யாவரும், பார்ப்பனரும், பறையரும், செல்வரும் வறியரும், அரசனும், ஆண்டியும் ஓரினம் என்ற எண்ணம் வலுக்கவேண்டும் என்று சுவாமி விவேகாநந்தர் கூறியது சுவைட்சர் அறியாததன்று. கி. மு. ஏழாவது நூற்ருண்டில் சொராஸ்டர் (Zoraster) என்பார் மக்கள் எல்லாரும் உடன்பிறந்தவர்கள் என்பதை வற்புறுத்தியிருப்பதையும் விளக்கினுர். கிரேக்க தேசத்திற் பெருங்குடி மக்கள் என்று கூறப்படுபவர்கள் பணி ஒன்றும் ஆற்றுதல்

வேண்டாம்; பணியாற்றப் பிறந்தவர்கள் இழிகுடி மக்களே ஆவர் என்று பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள் கூறியது ஒவ்வாது என்று உரைத்தார். உலகம் மாயையே என்றும், உலகத்தைத் துறப்பது பொருத்தமுடைத்து என்றும் செயல் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்றும் நம்புபவர்கள் உலக மன்பதைக்கு ஒன்றும் செய்யாது செல்கிறார்களே என்று கருதி உருகினார். செயலாற்றாதிருத்தல் ஓரளவிற்கு நல்லது என்றார்; செயலாற்றாதவர் பிறர்க்குத் தீது இழைக்கமாட்டார் ஆதலினாலே, அந்த அளவிற்கு அவர் நல்லவரே என்று கருதினார். புத்தர் போன்றவர் பிற உயிர்களுக்கு இன்னா செய்யாததைப்பற்றிப் பாராட்டி உரைத்திருப்பதைக் குறிப்பிட்டு அந்த அளவிலே நிற்றல்கூடாது என்றார். பிற உயிர்களைப்பற்றிக் கவலை கொள்ளாமல் தம்மைப்பற்றி மாத்திரம், தம் ஆன்மாவைப்பற்றி மாத்திரம் எண்ணிக்கொண்டு இருப்பவர்கள் எவ்வாறாயினும் தந்நலம் உடையவரே ஆவர் என்றும், பிற உயிர்களுக்கு ஒன்று உதவுவோரே சீரியோர் ஆவர் என்றும் எண்ணினார்.

> "அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின்நோய்
> தந்நோய்போல் போற்றாக் கடை!"

என்ற திருக்குறளின் அருமைக் கருத்து அவரால் வற்புறுத்தப்படுவதாயிற்று. பிறருடைய உயிரைத் தம்முடைய உயிரைப்போல மதித்துத் தீமை எண்ணாமல் இருப்பது அறிவுடைமை என்ற அளவில்

நில்லாது, பிற உயிர்கள் யாவற்றினுடைய தீமையையும் போக்க வழி தேடுவதுதான் அறிவுடைமை என்று திருவள்ளுவர் வற்புறுத்தி இருப்பதைப் போலச் சுவைட்சரும் வற்புறுத்தினர்.

" தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் ?"

என்ற திருவள்ளுவர் வாக்கினை மொழிபெயர்ப்பில் அறிந்துள்ளார் சுவைட்சர். அவரது விரிவுரையில்

" எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே "

என்ற தாயுமானவர் கருத்தின் தொனி இருந்தது. மனிதன் தன் அளவில் நல்ல மனிதனாக, முழு மனிதனாக, குற்றமற்ற மனிதனாக ஆதல் வேண்டுமென்று ஏசுநாதர் வற்புறுத்தியதையும், மக்களுக்கு ஆன்ம வகையிலும் பொருள் வகையிலும் புதிய இனிய நல்ல மேலான நிலைமைகளை உண்டாக்கித் தர வேண்டுமென்று பதினாறும் நூற்றாண்டு மறுமலர்ச்சியாளர்கள் கூறியதையும் ஒன்றாகப் பிணைத்து ஓர் அறவழி அமைக்கவேண்டுமென்று சுவைட்சர் வற்புறுத்தினர். கி. மு. 16, 17-வது நூற்றாண்டுகளில் இத்தகைய எண்ணத்தால் மக்களை வதைத்தலும், மாய மந்திரங்களினால் தீமை செய்தலும் ஆகிய பொருத்தமற்ற செய்திகள் தடைப்படுத்தப்பட்டதை எடுத்துக் காட்டினர். ஒருவருக்கு இயல்வதைச் செய்வதோடு அறம் நின்றுவிட்டது என்று, கருதாமல், ஒருவரால்

இயலாததைச் செய்து முடிப்பதற்கு அறம் இடம் தரவேண்டும் என்று மொழிந்தார். தம்மை விட்டுப் பிறருக்காக உழைத்துப் பாடுபடுபவரால்தான் உலகம் உய்யும் என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு உண்டு.

"தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே—உலகம் உண்டு"

என்ற சங்க காலத் தமிழகத்துக் கருத்து இந்நூற்றுண்டில் சுவைட்சரின் கருத்தாக வெளிவந்தது. தாம் அறிவதைப் பொய்க்காமல் மனச்சாட்சியினை வேரறுத்துவிட எண்ணுமல், ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பை உணர்ந்து, மன்பதைக்கு அன்பு செய்ய முற்படுவாராஞல், இவ்வையகம் வானகம் போன்றதாகும் என்று அவர் நம்பினர். "ஏழையும் எங்கள் அண்ணனடி— செல்வப் பேழையும் எங்கள் தம்பியடி" எனக் கருதும் மனப்பான்மை வலுத்து நிலைபேறுடையதாக வேண்டும் என விரும்பினர். பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறபொழுது, தேர்ந்தெடுக்கும் குழுவினர் ஒருவரை மிக்க தகுதியுடையவர் என்ற கருத்தால் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும், அவருக்கு இந்தப் பதவி மிகவும் தேவைப்படுகிறது என்பதை உள்ளத்திற் கொண்டு தேர்ந்தெடுப்பார் ஆயின், உலகம் எவ்வளவு நன்ருய் இருக்கும் என்று சுவைட்சர் கருதியதுண்டு. இவ்வாறு, இரக்கத்திஞல் ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது பொருந்தாது என்று சொல்லும் மக்கள்பால்

சுவைட்சருக்கு மதிப்புக் குறைவு என்பது அச் சொற்பொழிவினால் வெளியாகியுள்ளது.

நம்மைப் போலவே உயிர்கள் அனைத்தும் இன்பத்தை நாடுகின்றன; துன்பத்தால் வாடுகின்றன; வாழ்வதை விரும்புகின்றன; சாவதை வெறுக்கின்றன. ஆதலால், மன்பதைகளிடத்துச் சிறந்த அன்பினைக் காட்டவேண்டிய கடமை படித்த அறிஞர்களுக்கு உண்டு என்று அவர் கருதினார். உயிர்களைக் காப்பதற்காகப் பிற பல உயிர்களைக் கொல்லுதல் ஆகாது என்று சுவைட்சர் எண்ணினார். முன் ஒரு காலத்தில் ஓர் உயிரைப் பாதுகாக்கச் சில உயிர்களைக் கொல்லலாம் என்று நம்பிக்கொண்டிருந்தவர் அவ்வெண்ணத்தை வயது முதிர்ந்த காலத்தில் மாற்றிக் கொண்டார். ஒருவர் தம் மனம் போனவாறு ஒன்றைக் கொல்வதும் விடுவதும் அறம் என்று சொல்லுதல் பொருந்தாது என்று கூறத் தலைப்பட்டுவிட்டார். எப்பொழுதாவது எவ்வுயிரையாவது கொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்றால், அவ்வாறு செய்கிறேனே என்று நினைத்து ஒருவரது உள்ளம் பதற வேண்டும் என்று சொல்லியுள்ளார். செய்த தவறுக்காக உள்ளம் நைந்துருகி அழவேண்டுமென்று கூறியுள்ளார். அழுகிற அதே நேரத்திற் பிற உயிர்களுக்கு ஏதாவது ஒரு நன்மை செய்யக்கூடிய வாய்ப்பு கிட்டுமெனின், அதனை விட்டுவிடாது பற்றிக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார். அவ்வழியில்தான் செய்த தவறுக்காக ஒருவர் மன்னிக்கப்படுதல் கூடும் என்று அவர்

அழுத்தமாக நம்பினார். " நான் உயிர் வாழ விரும்பு கின்ற உயிர்; என்னைச் சுற்றிலும் உயிர் வாழ விரும்புகின்ற உயிர்களைக் காண்கிறேன். வாழ விரும்பும் எல்லா உயிர்களையும் மதிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவன் நான். என்னுடைய உயிரிடத்தில் எனக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அவ்வளவு மதிப்பு பிற உயிர்களிடத்தில் நான் வைக்க விரும்புகிறேன். பிற உயிர்களைப் பாது காப்பதும், அவற்றை வாழ விடுவதும், எட்டும் அளவு அவற்றை உயரமாக வளர வகைசெய்வதும் புண்ணியமாகும். உயிர்களை அழிப்பதும், அவற் றிற்குத் துயர் தருவதும், அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதும் எல்லாம் பாபம்" என்று அவர் அப்பேருரையில் எடுத்துக் காட்டினார்.

அன்பு என்பதைவிட "உயிர்களின் தொழு தகைமை" என்பது மிக்க ஆற்றல் உடைத்து எனச் சுவைட்சர் கருதினார். அன்பு என்பது பிறர் மாட்டு நாம் காட்ட வேண்டியதொன்று என்ற அளவில் உள்ளது; நமக்கு நாமே செய்துகொள்ள வேண்டிய கடமையை அஃது உட்படுத்துவதில்லை. அதனால், "அன்பு" என்ற சொல்லிலிருந்து ஒருவர் உண்மை சொல்ல வேண்டிய அவசியத்தை உணர்ந்துகொள்ளுதல் அரிது. ஆயினும், உண்மை யும் இரக்கமுமே முழு அறம் ஆகும். உயிர்கள் யாவும் தொழத்தக்கவை என்ற விழுமிய கருத்தால் ஒருவர் நெஞ்சு பொய்க்காமல், உயர்ந்த நேரிய நல்ல வகையில் பிற உயிர்களைப் பேணுதல் இயலும். உயிரின் தொழுதகைமையால் உலகத்து உயிர்

ாழும் பிராணிகள் அனைத்திற்கும் உதவி செய்யும் ாய்ப்புப் பெறுதல் இயலும். மூச்சு விடும் ஒவ் வான்றினிடத்திலும் நாம் வைக்கும் மதிப்பு _லக அமைதிக்கு அடிகோலுவதாக உள்ளது. ' உயிரின் தொழுதகைமை'' என்பதால், எளிய னிய முறையில் நாம் கடவுளை வழிபடத் தொடங்கி பிடுவோம் என்று அவர் கருதினுர்.

சுவைட்சர் வாழும் நாள் எல்லாம் நல்ல கடன் ளையே ஆற்றியுள்ளார். அவர் பெயரைச் சொன் றலே, உலகப் பேரறிஞர்களிடை ஒரு பெரு மதிப்பு உண்டாகும். அவர் பிறந்த அல்சாஸ் என்ற ஊர் முதலிற் செர்மானியருக்கு உரியதாக இருந்து, பிறகு பிரஞ்சுக்காரருக்கு உரியதாகி விட்டது. எனவே, அவர் செர்மானிய குடிமகனுரும் பிரஞ்சுக் குடிமகனுரும் ஆயினுர். நாளடைவில், அவர் ஓர் உலகக் குடிமகார் ஆகிவிட்டார். அவர் பேசும் பேச்சுக்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுகின்ற பேச்சுக்கள். அவர் இன்னர், இனையர், தமர் பிறர் என்று பார்ப்பதில்லை. துயருறுவோர் யாவராயினும், அவருக்கு உதவுதல் வேண்டும் என்ற வகையில் தம்முடைய வாழ்க்கையை உரிமை யாக்கிக் கொண்டுவிட்டார். அவரை நோக்கி, அவர் மனைவி ஒரு நாள் "இவ்வாறு எவ்வளவு காலம் வரையில் உழைக்கப் போகின்றீர்கள்?'' என்று கேட்டதற்குப் பதிலாக உரத்த இனிய குரலில், "நான் மூச்சுவிடுகிற வரையில்'' என்று அவர் பதில் அளித்தார். இம்மாபெருந் தொண்டர் எந்த ஊரும் தமது ஊர் என்று கருதியவர்; எந்நாட்ட

வரும் தம் நாட்டவர் எனப் பேணினவர்; துன்பம் உள்ள இடத்தில் எல்லாம் இன்பம் புகவேண்டும் என்று இடுக்கண்களைப் பொடியாக்கி உழைத்தவர். "உடலூரத்தொடு நீடூழி வாழ்க" எனப் பலர் வாழ்த்தக்கூடிய வகையில் அவர் வாழ்ந்து வருகின்றார்.

# 8. அறிஞரின் அருங்கருத்துக்கள்

1952-இல் அவருக்கு நோபெல் சமாதானப் பரிசு (Nobel Peace Prize) கொடுக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் உலக சமாதானத்திற்காக உழைத்த பெரியவர்களில் ஒருவர்க்கு அப்பரிசுநிதி வழங்குவது உண்டு. அப்பரிசு வழங்கப்பட்டதை யொட்டி இரண்டு ஆண்டுகள் கழித்து நார்வே (Norway) தேசத்திலுள்ள ஆஸ்லோ (Oslo) என்னும் ஊரில் அவர் ஓர் அருஞ்சொற்பொழிவு ஆற்றினுர். உலகத்தில் உள்ள நாடுகள் எல்லாம் எவ்வாறு அமைதியாக உழைக்கவேண்டும் என்பதைப்பற்றி அவ்வுரையில் எடுத்து விளக்கினுர். தத்தம் நாட்டினர்க்கு மட்டும் அன்பு காட்டுவது என்ற அளவோடு நில்லாமல், உலக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்களிடத்தும் உயிருள்ள எல்லாப் பிராணிகளிடத்தும் பேரன்பு காட்ட வேண்டும் என்பதை வற்புறுத்திஞர். "தொல் லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளந் தனிலன்ருே இன்பம்" என்ற கவிஞர் வாக்கு இங்குச் சிந்திக்கத்தக்கது.

"அன்பு என்பது நாம் அறிய முடியாத தொலையான ஓர் இடத்திலிருந்து காற்றுப்போல நம்மிடத்தில் வந்து விளங்குவது. பிறருக்கு இனி மையும் நன்மையும் செய்து வாழும் ஒருவன் கடவுளில் வாழ்கிருன்; கடவுளொடு வாழ்கிருன் என்று சொல்லுதல்கூடும்" என்று ஓரிடத்தில்

அவர் செப்பியுள்ளார். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?" என்ற திருக்குறட் பகுதியோடு இதனை ஒப்பிடலாம். பிற நாடுகளிற் போய் மக்கள் குடியேறுகிறார்கள் என்றால், அந்தந்த நாட்டினில் உள்ள மக்களுக்குத் தொண்டாற்றவேண்டும் என்ற எண்ணத்தோடு குடியேறுதல்வேண்டும் என்று சுவைட்சர் கருதினார். அதனால், "நம்முடைய கைத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளை உண்டாக்குவதற்கு மாத்திரமா இந்த ஊருக்கு நாம் தலைவராய் உள்ளோம்? இந்த மக்கள் மேன்மேல் இனிய வாழ்க்கை நடத்துதற்குரிய வகையிற் புதிய சமுதாய வாழ்க்கைமுறையைப் படைத்துவிடுதல் நம்முடைய பொறுப்பன்றோ?" என்று ஒரு முறை அவர் பேசினார். புத்தகங்களிலும் இத்தகைய கருத்துக்களை அவர் நிரம்ப வழங்கியுள்ளார்.

உலகத்தில் உள்ள நாடுகளிற் பல கிறித்துவ சமயத்தைச் சேர்ந்த நாடுகளாக இருந்தும், ஒரு நாடு மற்றொரு நாட்டோடு போட்டியிட்டுக் கொண்டு போரில் ஈடுபடுவது சுவைட்சருக்குப் பிடிக்கவில்லை. கிறித்துவ சமயம் அன்பின் அடிப்படையில் எழுப்பப்பட்டது என்பது உண்மையானால், பகைவர்களிடத்தும் அன்பு காட்டவேண்டும் என்றும், தீமை செய்தவர்க்கும் நன்மையையே செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்துஞ் சமயம் அது என்பது உண்மையானால், உலகத்தில் உள்ள நாடுகளிற் பல முன்னரே போரினின்று விடுபட வேண்டும் என்றும், போருக்குச் செல்லுதல் கூடாது என்றும் எண்ணி இருக்கமாட்டாவா

என்று கருதினர். இன்னுதன செய்தவர்க்கும் இனியன செய்யவில்லை என்ருல், இனியன செய்யா தவரைச் சால்புடையார் என்பது எப்படிப் பொருந்தும்? தீமைகள் செய்தவரைத் தண்டித்தல் என்பது அவர் “இந்நன்மையை இவரிடமிருந்து பெறுதற்குத் தகுதியுடையேன் அல்லேனே” என்று கருதி நாணித் தலைகுனியும் அளவிற்கு நன்மை செய்துவிடுதல் என்று கூறிக்கொண்டு இருந்தால் மட்டும் போதாது; செயலிற் காட்ட வேண்டும் என்ருர்.

பிறர் செய்த குற்றத்தைப்பொறுத்தல் பேரறம். ஒருவர் மற்ருெருவர் செய்த குற்றம் ஒன்றைப் பொறுத்தல் எளிது. ஒருவர் சிலர் செய்த சில குற்றங்களைப் பொறுத்தல் அதனின் அரிது. ஒருவரே பலர் பன்முறை செய்த பல குற்றங்களைப் பொறுப்பது என்பது மிகவும் கடினம். கடினமான செயலைச் செய்வதில்தான் பெருமை உளது. எல்லோர்க்கும் எளிய செயலைச் செய்வதைவிடப் பலருக்கு அரிய செயலைச் செய்தலே சிறப் புடைத்து. ஆதலால், ஒருவர் மற்ருெருவரை எத் தனை முறை மன்னிக்கலாம் என்று கணக்குப் பார்த்து மன்னிப்பது போதாது என்பது சுவைட் சர் கருத்து. கடவுளிடத்து நம் குறைகளுக்காகவும் குற்றங்களுக்காகவும் எத்தனை முறை மன்னிப்புக் கேட்கவேண்டிய நிலையில் நாம் உள்ளோம் என் பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண் டும் என்பது அவர் விருப்பம். கடவுள் நம்மை ஒரு முறையா மன்னிக்கிருர்!. பல முறைகள் மன்

னிப்பதில்லையா? அவரைப்போல நாமும் பிறர் குற்றங்களைப் பலமுறை மன்னிக்கப் பழக்கப் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஒருவருடைய வாழ்க்கையிற் சலிக்கும் அளவு இன்னல்தரும் நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தாலும், அவற்றைத் தாங்கிக் கொள்ளக்கூடிய வலிமை மனிதனுக்கு வேண்டும் என்று ஒரு நாள் ஆப்பிரிக்க மக்களுக்கு அவர் எடுத்து உரைத்தார். ஒரே நாளில் ஒருவரை இகழ்ந்து அவர் முன்னிலையில் வேறொருவர் பல அவதூறுகள் சொன்னாலும், ஒருவருடைய பொருள் வருவாயைத் தடைப்பண்ணி விட்டாலும், ஒருவருடைய செயற்கருவிகளை எடுத்து மறைத்து வைத்துவிட்டாலும் அவற்றை எல்லாம் பொறுத்துக்கொண்டு, அத்தீமைகள் செய்தவர்க்குத் தீமை செய்ய எண்ணாமல் இருந்தால்தான் அறத்தை ஒருவர் நன்கு கடைப்பிடிப்பவர் என்று சொல்லப் படுவர் எனக் கூறி, சுவைட்சர் பல எடுத்துக் காட்டுக்களினால் எளிய இனிய நடையில் தம் கருத்துக்களை விளக்கினார் என்று அறிகிறோம்.

சுவைட்சர் மக்கள் முதலில் தம்மைத் தாமே விரும்பவேண்டும் என்றும், இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிவிடக்கூடாது என்றும் விரும்பினார். இவ்வுலகத்தை மாயை என்று சொல்லி, மாயையுலகில் வாழும் எல்லா உயிர்களும் மாயையே என்று கருதி, தமக்கும் நன்மை ஒன்று செய்து கொள்ளாது பிற உயிர்கட்கும் நன்மை ஒன்றும் செய்யாது வாழும் மக்கள் இரங்கத் தக்கவர்கள் என்று கருதினார். இவ்வுலகம் உண்டு என்றும்,

உலகத்தில் வாழும் மக்களும் பிற உயிர்களும் உண்டு என்றும் நம்பவேண்டுமென விரும்பினர். உலகத்திற் பல உயிர்கள் தாமாக அழிவதையும், பிறரால் அழிக்கப்படுவதையும் கண்டு, மனத்தில் வருத்தங் கொள்ளுதல் பேதமை என நினைப்பவருடைய கருத்து அவருக்குப் பொருந்தவில்லை. சிலந்தியின் வலையில் எத்துணையோ ஈக்கள் கணந்தோறும் அகப்பட்டு அகப்பட்டுச் சாகின்றன; அவற்றைப் போல இந்த உலகமாகிய வலையில் எத்துணையோ மனிதர்கள் நோய்வாய்ப்பட்டும், போரில் அகப்பட்டும் மாள்கிருர்கள்; அதற்காக நாம் வருந்துதல் ஏனே என்று கேட்கக்கூடியவர்களுடைய மனப்பான்மை சுவைட்சருக்குப் பிடிப்பதில்லை. சிலந்தியின் வலையிலே ஈக்கள் பல சிக்குண்டு மாள்கின்றன என்ருலும், அந்த ஈக்களைப் பிடித்து இழுத்துத் தள்ளிக் கொண்டுபோய்த் தாய்ச்சிலந்தி தன் குஞ்சுகளுக்கு உணவாக அளிக்கவில்லையா எனக் கருதுதல் வேண்டும் என்ற மனப்பான்மை உடையவர் சுவைட்சர். தன் குஞ்சுகளுக்காக உழைக்கவேண்டும் என்ற எண்ணம் சிலந்திக்கு இருப்பதுபோல, தன் மனைவி மக்கள் சுற்றத்தார் முதலியவர்களுக்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்கு முதலில் உண்டாக வேண்டும் என விரும்புபவர் அவர். தன் மனைவி மக்களிடம் அன்புகாட்டவும், அவர்களுக்காக உழைக்கவும் ஒருவன் முதலில் தலைப்பட்டால், பிறகு ஊரார்க்கும் உலகத்தினர்க்கும் பிற உயிர்கட்கும் உழைக்கவேண்டும் என்ற எண்

ணம் உண்டாகப் பெறுவான் என்று நம்புபவர் அவர்.

அதனால், திருவள்ளுவர் கருத்துக்களை அவர் போற்றுபவர் ஆயினர். தன்னிடத்திற் பழி வாராமல் ஒருவன் நடந்து கொள்ளுதல் வேண்டும் எனத் திருவள்ளுவர் சொல்லியுள்ளார். தன் உடம்பிற்கும் தனது உயிருக்கும் ஏதாவது ஒன்று தீயது என்றும், ஆகாதது என்றும் அறியும் மனிதன் மன்பதைகளின் உடம்பிற்கும் உயிருக்கும் தீயனவற்றையும் பொருந்தாவற்றையும் ஏன் செய்கிறன் என்று திருவள்ளுவர் கேட்டுள்ளார். அக்கருத்தினைப் பொன்னே போலப் போற்றவேண்டும் என்றுர் சுவைட்சர். ஒருவன் தன்னை விரும்புவான் ஆனல், யாதொன்றும் தீமை செய்வது ஆகாது என்றும், தன்னிடத்திற் கோபம் உண்டாகாமற் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் திருவள்ளுவர் சொல்லி இருப்பதை அவர் அறிந்தவர். பிறருக்குத் தீமை செய்தல் ஒவ்வாது. ஒருவன் கோபத்தினல் அளவு கடந்து, முறையற்ற வகையிற் செயல்கள் ஆற்றிவிடுதல்கூடும். பிறகு, தன் கோபத்தின் விளைவிற்குத் தானே இரங்குதல் வேண்டி வரும். ஆதலால், கோபம் ஒருவன்மாட்டு வராமல் தடுத்துக் கொள்வதே தக்கது என்ற கருத்துப்படத் திருவள்ளுவர் கூறிய குறட்பாவினைச் சுவைட்சர் துய்த்தவர்.

“ தன்னைத்தான் காக்கின், சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் ”

என்ற திருக்குறளை அவர் அடிக்கடி ஓதுவது உண்டு.

ஒருவர் தம்மைவிட வல்லவரிடத்தில் வம்புக்குப் போகாமல், மெலிந்தவர்களிடத்தில் அடங்காச் செயல்களைச் செய்வது உண்டு. திருவள்ளுவர்க்கு இது பெருங் கொடுமையாகத் தோன்றிற்று; அவ்வாறே சுவைட்சருக்கும் தோற்றுகிறது. வலியவர் முன் ஒருவர் நிற்கமாட்டாது ஓடுவதை உன்னுவாரானால், மெலியார்க்குத் தீமை செய்ய முற்படார் என்று திருவள்ளுவர் கருதியதால்,

> "வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
> மெலியார்மேற் செல்லும் இடத்து"

என்று கூறினார். இதைப்போன்ற பல இடங்களில் திருவள்ளுவர் மக்கள் வாழும் உலகத்தில் தம்மைப் பற்றி எண்ணி, அவ்வெண்ணத்தின் அடிப்படையில் பிற உயிர்களைப்பற்றி எண்ணி இரங்கி, நல்லது செய்ய முற்படவேண்டும் எனத் தமது நூலில் விளக்கியுள்ளார். இவற்றையெல்லாம் போற்றுபவர் சுவைட்சர்.

பிறர் நன்றாக உடுத்திக்கொள்வதையும், உண்பதையும் பார்த்துக் கயவர் பொறாமை கொள்வர். அன்றியும், அவர் நல்ல உடை வாங்குவதற்கும், நன்றாக உண்பதற்கும் எத்துணையோ தீமை செய்துள்ளார்கள் என்று பொய்யாகக்கூட அவரைப் பற்றி இகழ்ந்துரைக்கும் கயவர்கள் உண்டு. அக்கயவர்கள்போல ஒருவர் இருத்தல் ஆகாது என்பதைத் திருவள்ளுவர் வற்புறுத்தியுள்ளார். இக்கருத்தினையும் ஓம்புபவர் சுவைட்சர்.

ஒருவர் முதலில் தம்முடைய குற்றத்தை நீக்கிக் கொள்ள வேண்டும் என்றும், பிறகு பிறருடைய குற்றத்தை அவரிடத்தில் நேரே சொல்லி நீக்குதற்கு முயலுதல் வேண்டும் என்றும் திருவள்ளுவர் கூறினர். அவ்வாறு பிறரைத் திருத்த முயலுபவர்கள் தத்தம் தீமை நீக்கப்பெற்ற பெரியவர்களாக இருத்தல் வேண்டும் என்பது அவரது நம்பிக்கை. பிறர் குற்றங்களை, அவர் இல்லாத இடங்களில் எடுத்து விரித்துரைப்பது பெருந்தன்மை ஆகாது. பிறருடைய தீமைகளை அவர் இல்லாத இடத்தில் எடுத்துச் சொன்னல், அவர்கள் சொல்வது தப்பு என்ருே ஒப்பு என்ருே பேசிப் பதிலுரைக்க முடியாத நிலையில் அவர் இருப்பர் அல்லரோ? அதனுல், பிறர் தீமையை எடுத்துச் சொல்லாதவர்களே நல்லவர்கள் என்றும், குணம் நிரம்பியவர்கள் என்றும் சொல்லத் தக்கவர் எனத் திருவள்ளுவர் கருதினர். தவம் செய்பவர்கள் உண்டி கொள்ளாமல்கூட நோற்பவர்கள்; ஆதலால், பெரியவர் எனத் தக்கவர்கள் என்ருலும், அவர்கள் பிறர் சொல்லும் கொடிய சொற்களைப் பொறுத்துக்கொள்ளும் பண்பு உடையவர்கள் அளவு பெரியவர்கள் அல்லர். பிறர் ஏதாவது கடுஞ்சொல் சொன்னல், ஒருவர்க்குக் கோபம் உண்டாவது இயல்பு. அந்தக் கோபத்தைத் தடுத்துக்கொள்ளும் அளவிற்கு ஒருவர் பழக்கம் செய்து கொண்டு விடுவாரேயானல், அவர் மாபெரும் மனிதர் என மதிக்கத்தக்க சிறப்புடையவர் ஆகிவிடுவார். இவ்வாறு திருவள்ளுவர்

சொல்லிய குறட்பாக்களில் மக்கள் பிறரோடு எவ்வாறு பழகவேண்டும் என்பது நன்ருக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனைப் போற்றுபவர் சுவைட்சர்.

பிறரைப் பற்றிய எண்ணம் மனிதனுக்கு அதிகமாக உண்டாதல் வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் பற்பல இடங்களில் மொழிந்துள்ளார். ஒருவர் பிறர்க்கு ஏதாவது ஒன்றினைச் சொல்வதாய் இருந்தால், அவர் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் எளிதாகச் சொல்லவேண்டும் என்றும், பிறர் கூறும் நுண்ணிய கருத்துக்கள் அரியனவாக இருந்தாலும் அவற்றை ஒருவர் அறிந்துகொள்ளப் பாடுபட வேண்டும் என்றும் திருவள்ளுவர் சொல்லிய அறம் பேணத் தக்கது. பிறருடைய பொருள்களைக் கவர்ந்துகொள்ள ஒருவர் விரும்புதல் கூடாது என்றும், பிறருடைய பொருள்களைக் களவாடுவோம் என்று எவரும் மனத்தால்கூட நினைக்கக்கூடாது என்றும் திருவள்ளுவர் சொல்லியுள்ளார். ஒருவர் பிறருக்கு முற்பகலில் தீமை செய்தால், பிற்பகலில் அத்தீமை தமக்கே பெருந்தீமையாக வந்துசேரும் ஆதலால், பிறர் பொருளைக் கவருதற்கு வழிவகுக்கலாகாது எனச் செந்நாப்போதார் செப்பியுள்ளார். ஒருவர் தமக்கு இன்னுதனவாக இருக்கின்றவற்றைப் பிறர்க்கு எஞ்ஞான்றும் எவ்விடத்தும் எவ்வாறும் செய்யாதிருப்பது மேன்மையானது என்று திருவள்ளுவர் நம்பினர் ஆதலால்,

"இன்றா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்"

என்று கூறினர். இதைப் போன்ற கருத்துக்கள் பலவற்றைக் கேட்ட அளவில் விடுதல் பயன் இல்லை என்றும், கேட்டபடியும் கற்றுள்ளபடியும் ஒருவர் ஒழுகுதல் வேண்டும் என்றும் திருவள்ளுவர் வற்புறுத்தினர். "கற்றபின் அதற்குத் தக நிற்க" என்றார். நல்ல நூல்களை ஒருவர் படித்து அறிந்து கொண்டால் மாத்திரம் போதாது; பிறருக்கு எடுத்து உரைத்தால் மாத்திரம் போதாது. அறிந்த வாறும், எடுத்து உரைத்தவாறும் தாமே செயலாற்ற வேண்டும் என்று திருவள்ளுவர் வற்புறுத்தினர்; ஓதி உணர்ந்தாலும், பிறர்க்கு எடுத்து உரைத்தாலும், தாமே அதற்குத் தக நடக்கவில்லை எனின், பயனில்லை என்று வற்புறுத்தினர். இக்கொள்கைகளைச் சுவைட்சர் முற்றிலும் தாங்குபவர்.

மக்கள் தத்தம் ஆன்ம நலத்திற்கு மட்டும் முயன்றுகொண்டு, உலகத்தையும் உலகப் பொருள்களையும் வெறுத்து ஒதுக்கிவிடுதல் ஆகாது என்று பேரறிஞர் சுவைட்சர் எண்ணுபவர். மக்கள் பிறரும், உயிர்கள் பிறவும் நன்றாக வாழவேண்டும் என்று மனத்தால் எண்ணி, வாயால் துதித்தல் மாத்திரம் காணாது என்று கருதினவர் சுவைட்சர். மக்கள் பிறரும் உயிர்கள் பிறவும் நன்றாக வாழ்வதற்காக ஒவ்வொருவரும் தத்தம்மால் ஆவன செய்தல் வேண்டும் என்று விரும்புபவர் அவர். மன்பதைகளுக்குக் கேடு செய்யக்கூடாது என்ற அளவில் நம்பிக்கொண்டு, ஒதுங்கி வாழ்வது

ஒவ்வாது எனக் கருதுபவர் அப்பேரறிஞர். துன்பம் கண்ட இடங்களில் எல்லாம், அத்துன்பத்தைப் போக்குவதற்கு ஏதாவது ஒரு வழியில் ஒவ்வொருவரும் முயன்று செயலாற்ற வேண்டும் என்று விரும்புபவர் அப்பேரருளாளர். இக் கருத்துக்களைத் தம் வாழ்க்கையிற் செயற்படுத்திக் காட்டிய வீரர் சுவைட்சர். அவர் புகழ் நிலைத்துப் பரவுக.

# 9. இருளில் ஒளி

ஐரோப்பிய அறிஞர்கள் சிலர் விலங்கினங்களை வெறும் இயந்திரங்கள் என மதித்தார்கள். வேறு சிலர் மிருகங்கள் மகிழ்வதைக் காணுதல் இயலாது என்று தவறுதலாகக் கருதினார்கள். ஆயினும், விலங்குகள் நீர்வேட்கை உடையனவாக உள்ளவை குடித்தபின் மகிழ்ச்சியுறுவதை அவர் கண்டிலர் போலும் என்று சுவைட்சர் கூறினார். விலங்குகளை இனிய வகையில் மனிதர் நடத்தவேண்டும் என்று கருதுவதன் நோக்கம், மக்கள் பிறரிடம் தாம் இரங்கிய உள்ளத்தொடு பழகுதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற அளவில் நம்பிய தத்துவ ஞானிகளும் உண்டு. இவை போன்றவற்றை எடுத்துக் காட்டி, மனிதர் ஒவ்வொருவரும் பிறரிடமும் சமூகத்தினிடமும் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதை மாத்திரம் ஐரோப்பிய அற நூல்கள் எடுத்து விளக்குகின்றன என்றும், பிற உயிர்கள் எல்லாவற்றினிடமும் மனிதர் பழக வேண்டுவதைப்பற்றி அந்நூல்கள் அத்துணை வற்புறுத்தவில்லை என்றும் சுவைட்சர் விளக்கினார்.

ஐரோப்பியர்கள் இவ்வாறு எண்ணியிருப்பவும், பற்பல நூற்றுண்டுகட்கு முன்னரே, இந்தியரும் சீனரும் எவ்வுயிரினிடத்திலும் இரக்க உள்ளம் படைக்கவேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளவாற்றை விளங்க எடுத்துரைத்தார் சுவைட்சர். உலகத்தில் உள்ள உயிர்ப்பொருள்கள்

எல்லாவற்றின்கண்ணும் இறைப்பொருள் காணப் படுகிறது என்ற நம்பிக்கை வேண்டும் என்பதை அவர் அடிக்கடி வற்புறுத்தினர். இறைவனிடத்தில் ஒருவர் அன்புடையவராக இருக்கிறுர் என்பது இறைவனுற் படைக்கப்பட்டுள்ள பல்வேறு உயிர்ப் பொருள்களிடத்திலும் ஒருவர் அன்புடையவராக இருக்கின்றுர் என்பதனுல் விளங்கவேண்டும் என விளம்பினுர். "உயிர்களின் தொழுதகைமை" என்பதிலிருந்து உயிர்ப்பொருள்கள் எல்லாவற்றின் கண்ணும் பேரன்புடைமை தோற்றுதல் கூடும் என்றும், தோற்றுதல் வேண்டும் என்றும் அடிக்கடி அவர் கூறி வற்புறுத்துவது உண்டு.

ஒருவர் அற வழியில் நடக்க முற்படுகிறுர் என்ருல், அவர் உண்மையாகச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறுர் என்பது கருத்து. அச்சிந் தனையினுல் உலகத்தில் எல்லாப் பொருள்களும் வாழ விரும்புகின்றன என்பதை ஒருவர் காணுதல் கூடும் என்று சுவைட்சர் எடுத்துக் காட்டினுர். உலகத்தில் உள்ள பல்வேறு பொருள்களைப்பற்றி ஆழமாகவும் அகலமாகவும் அறிந்துகொள்ளுதற்கு விஞ்ஞான அறிவு பயன்படலாம். உலகத்தில் உள்ள பல்வேறு பொருள்கள் எவ்வாறு தோன்று கின்றன, எவ்வாறு வாழ்கின்றன, எவ்வாறு மடி கின்றன என்பதற்குப் பல விளக்கங்கள் விஞ்ஞான வளர்ச்சி அளித்தல்கூடும். முன்னர் இப்பொரு ளிலே உயிர் உண்டு என்று எதிர்பார்க்கப்படாத இடத்தில் கூட உயிருண்டு என்பதைக் கண்டு பிடித்து விஞ்ஞானம் கூறலாம். பூக்கின்ற ஒரு

மரத்தைப் பார்த்து, கற்றிலாத ஒரு மனிதன் கொள்ளும் பேருவகை சிறுபெருங் கண்ணுடி துணை யாக ஆராய்ச்சி செய்யும் நுணங்கியல் அறிவாளி கட்குச் சில வேளைகளில் உண்டாதல் இல்லை. பூக் களின் வாழ்க்கை முறையை அறிந்துவிட்டதாக ஒருவன் வீண் ஆடம்பரம் செய்துகொள்ளலாம். ஆனால், உண்மையில் உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் வாழ விரும்புகின்றன என்ற உண் மையைத் தாவர நூல் ஆராய்ச்சியாளன் நன்றாக உணர்ந்துகொள்கின்றானா என்பது ஐயப்பாடு எனச் சுவைட்சர் கூறினார்.

ஒருவர் நன்றாகச் சிந்திக்கச் சிந்திக்க, உலகப் பொருள்களைத் துய்க்கத் துய்க்கத் தலைப்பட, உயிர்ப்பொருள்கள் அனைத்தும் வணங்கத்தக்கன என்ற உயரிய முடிவிற்கு வருவர்; தத்துவநூற் பேராசிரியர்கள் சிலர் "நான் நினைக்கிறேன், நான் சிந்திக்கிறேன்; ஆகையால் வாழ்கிறேன்" என்று கூறியுள்ளார்கள். ஆனால், சுவைட்சரோ "உயிர் வாழ விரும்புகின்ற உயிர்ப்பொருள்களி டையே வாழவிரும்பும் உயிராகிய நான் உள்ளேன்" என்பதைக் கூறிப் பலமுறை விளக்கியுள்ளார். நான் வாழவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப் படையில், நான் மேன்மேலும் வளர்ச்சியுற வேண் டும் என்ற எண்ணமும், இன்பங்கள் பெறவேண் டும் என்ற எண்ணமும் எழுகின்றன. நான் வாழ வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், நான் அழிக்கப்படலாகாது எனக் கருதுகிற கருத் தும், துன்பம் அடையக் கூடாது எனக் கருதுகிற

கருத்தும் உண்டு என்பது அறியப்படும். இவ்வாறே என்னைச் சுற்றி உள்ள எல்லாப் பொருள்களும் இன்பத்தை நாடுகின்றன, துன்பத்தை வெறுக்கின்றன என்பதை நான் அறிந்துகொள்வேன் ஆனால், உண்மையை உணர்ந்தவன் ஆவேன் என்று சுவைட்சர் கருதினார். இவ்வெண்ணங்களை வெளிப்படையாகச் சொல்லக் கூடிய உயிர்ப்பொருள்கள் சில இருக்கலாம்; இவற்றை வெளிப்படையாகச் சொல்ல மாட்டாத வாயில்லாப் பூச்சிகளாகப் பல இருக்கலாம். 'நான் வாழ வேண்டும் என்ற எண்ணத்திற்காக என்னைப் பொறுத்தவரையில் எவ்வளவு மதிப்புத் தருகிறேனோ, அவ்வளவு மதிப்பு தாமும் வாழவேண்டும் என்று நினைக்கின்ற பிற உயிர்களிடத்து நான் வைக்கவேண்டும்' என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இதனால் விளங்குவது என்ன எனின், ஒருவர் உயிர்ப்பொருள்களைக் காப்பது நல்லது என்பதும், உயிர்ப்பொருள்களை அழிப்பது கெட்டது என்பதும் ஆம். ஒருவர் உண்மையில் அறவாளராக இருக்கின்றார் என்றால், அவர் உயிர்ப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் உதவி செய்ய வேண்டும் என்பதை உணர்ந்தவராய் இருப்பார்; வாழும் உயிர் எதற்கும் துயர்தருதலைக் கூசுபவராக இருப்பார். அவர் எந்த அளவு இவ்வுயிர் நம் இரக்கத்தைப் பெறத்தக்கது என்று கேட்டல் பொருந்தாது. எந்த உயிரும் சிறந்த உயிர் என்பது அவர் உள்ளத்தில் அமைதல் வேண்டும். மரத்திலிருந்து இலையைக் கிள்ளவோ, பூவைப் பறிக்

கவோ அவர் கூசவேண்டும்; எந்தக் கிருமியையும் மிதிப்பதற்குக் கூசவேண்டும்; மழைக்குப் பின் வெளியில் ஏதாவது ஒரு மண்பூச்சி திரிந்து கிடப் பதைக் கண்டால், அதனைக் கட்டாந் தரையி லிருந்து எடுத்துப் புல்லின்கண் சேர்த்தல் வேண் டும்; ஏதாவது ஒரு புழு இலையிலிருந்து கீழே விழுந்துவிட்டால், அதனை மீண்டும் இலையின்கண் எடுத்துச் சேர்த்து அது உயிர்வாழ உதவ வேண்டும்.

நல்ல அறவாளர் என்பவர் இவ்வாறெல்லாம் செய்தால் பிறர் கண்டு நகைப்பார்கள் என அஞ் சுதல் கூடாது. நல்லதைச் செய்பவர்கள் பலர் உலகத்தினரால் நகைக்கப்படுவது கண்கூடு தானே? ஒரு காலத்தில், கறுப்பு மனிதரை மனிதர் என்று எண்ணுவதும், அதற்கேற்ப நடத்துவதும் அறியாமையே என்று மக்கள் கருதினார்கள். இப் பொழுதோ அவ்வறியாமை உலகத்தினரால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகிவிட்டது.

உலகத்தில் அழிந்துபோகும் பல உயிர் களிடையே வாழும் ஒருவர் சில உயிர்களைப் பாது காப்பதால் என்ன பயன் விளையும் என்று கருதிச் சோம்பி இருத்தல் ஆகாது. ஒவ்வொருவரும் தம் மைத் தம்மைச் சுற்றியுள்ள உயிர்ப்பொருள்கள் எல்லாம் வாழ விரும்புகின்றன என்பதை நன்குக நினைவில் வைத்துக்கொண்டு, தம்மால் தம்மால் இயன்ற அளவு அழிவினைக் குறைத்தல் வேண்டும். 'நான் வாழவேண்டும்' என்ற ஒருவருடைய எண் ணம், வாழவேண்டுமென்று நினைக்கும் பிற உயிர்ப்

பொருள்களோடு ஒன்றுகிக் கலந்து வாழவேண்டும் என்ற எண்ணத்தைப் பிறப்பிக்கும். இவ்வெண்ணத்தின் அடிப்படையில் உலக ஒற்றுமை தோற்றும். இதனைத்தான் "இருளில் ஒளி" என்று சொல்லுதல் கூடும்.

உலகத்தில் துயர்ப்பட்டு இருக்கும் உயிர்களைக் காண்பதால், சுவைட்சர் பல வேளைகளில் அமைதியற்றவராய் இருந்துள்ளார். எனினும், உயிர்களினிடத்து அவர் வைத்துள்ள பெருமதிப்பினுல் மனத்தின்கண் ஒரு பேரின்பம் பெற்றுள்ளார். ஒருவரையொருவர் அறிந்துகொண்டு, ஒருவர் குற்றங்களை ஒருவர் பொறுத்துக்கொள்வதால், உலகத்தில் எவ்வளவோ நன்மைகள் நிகழுதல் கூடும். ஒரு புழுவை அழிவினின்று ஒருவர் பாதுகாக்கின்ருர் என்ருல், ஓர் உயிர் வேருேர் உயிருக்காக உழைக்கிறது என்பது பொருள். அவ்வாறு பலர் பலர் உழைப்பாராளுல், வாழும் உயிர்வகைகள் ஒன்றற்கு ஒன்று பகையாக வேறுபிரிந்து நிற்பது முடிவடைந்துவிடும். ஒருவர் மற்ருேர் உயிரைப் பாதுகாக்க முயலும் முயற்சியில் கடவுளைக் காண்டல் கூடும். ஏனெனில், கடவுள் எல்லா உயிர்களிலும் இருக்கின்ருர் ஆதலால், ஓர் உயிருக்கு மற்ருேர் உயிர் உதவும்பொழுது, ஒன்று மற்ருென்ருேடு இயைகின்ற இணக்கம் உண்டாவது தெளிவு. அதனுல், உயிர்ப்பொருள்கள் இத்தகைய கூட்டுறவால் கடவுளொடு ஒன்றுபட்டுவிடுதல் உண்டு என்பதை அறிதல் வேண்டும் எனச் சுவைட்சர் விளம்பினுர். இதனை "இருளின்கண் ஒளி" எனலாம்.

ஒருவர் தம்முடைய உயிரின்கண் பற்று வைத்து, அது மதிக்கத் தக்கது அல்லது வணங்கத் தக்கது என்று கருதுவாராயின், ஒருவர் நெஞ்சில் உண்மை உடையவராக இருக்கவேண்டும் என எண்ணத் தலைப்பட்டுவிட்டார் என்பது கருத்து. மனச்சான்றிற்கு மாறுபாடு இல்லாமல் எந்தப் பொருளையும் அடையவேண்டும் என்ற எண்ணம் ஒருவர்க்குப் பிறக்கும். ஒருவர் நெஞ்சிற் பொய்க் கின்றார் எனில், அவர் தம்முடைய உயிரையே நஞ்சு பூசிய ஈட்டியினால் குத்திக்கொள்கிறார் என்பது கருத்து. ஒருவர் தமக்கு உண்மை உடையவராக இருக்கவேண்டும் என்ற அடிப்படை யிலிருந்து, அவரை அறியாமலே பிறரிடத்தில் ஈடு பாடு உடையவராக மாறிவிடுவார்.

மனிதருடைய இன்பங்கள் பிற மனிதர்க்குத் துயர்தரும் அடிப்படையிலும், பிற உயிர்ப் பொருள்களுக்கு இடர் விளைக்கும் அடிப்படை யிலும் சில வேளைகளில் உண்டாகின்றன. ஒருவர் நடந்து செல்லும்பொழுது, நிலத்திற் கிடக்கும் உயிர்ப் பொருள்கள் எத்தனையோ துயருற்று அழிக் கப்படுகின்றன. வீட்டில் உள்ள எலிகளையும் தேள் களையும் ஒருவர் கொல்ல வேண்டிய அவசியம் உடையவராகி விடுகிறார். சிலந்திக் கூடுகளையும் குளவிக் கூடுகளையும் கறையான் புற்றுக்களையும் அழிக்கவேண்டிய நிலையில் உள்ளவர்கள் எத்தனை எத்தனை பேர்? ஒருவருடைய உயிரைப் பாதுகாப் பதற்காக ஆயிரக்கணக்கான விஷக் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு ஒருவர் வாழப்

பல பொருள்கள் சாக வேண்டியுள்ளன. சிலர் சிலர் போலிச் சமாதானங்களைச் சொல்லிக் கொள்ளுவர். ஆனால், உண்மையறம், உயிர்களின் தொழுதகைமையில் நம்பும் அறம், பல சமாதானங்கள் கூற முன்வராது. உயிர்களைப் பாதுகாப்பதும் உயிர்களை வளர்ப்பதுந்தான் நல்லது என்றும், உயிர்களுக்கு ஊறு செய்வதும் உயிர்களை அழிப்பதுந் தீது என்றும் இந்த உண்மையறம் சொல்லும். உயிர்களின் மதிப்புடைமையைப்பற்றி மக்கள் எந்த அளவு எண்ணத் தொடங்குகிறார்களோ அந்த அளவிற்கு நாளடைவில் உலகத்தில் அழிவு குறையும்; வளர்ச்சி மிகும். எந்த எந்த அளவு அழிக்கலாம் என்று பொதுவாக வரையறை செய்து கூறுதல் இயலாது. ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியொடு தாமே தாமே அவ்வப் பொழுது எண்ணிப்பார்த்து முடிவு செய்துகொள்ள வேண்டும்.

மக்கட்கும் மாக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? ஏதாவது ஒன்றினுடைய உயிரை ஒருவர் போக்குவதாய் இருந்தால், அவ்வாறு செய்வது இன்றியமையாததுதானா என்பதைத் தெளிவாக ஆராய்தல் வேண்டும். மிகவும் தாழ்ந்தது அல்லது இழிவானது என்ற காரணத்தினால், எந்த உயிரினையும் எளிதில் அழித்துவிடுதல் கூடாது. பிற உயிர்களை அழிப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும் எல்லையளவு ஒருவர் செய்யலாம்; அதற்குமேல் செய்தல் கூடாது என்று சுவைட்சர் பல முறைகள் கூறினார். எடுத்துக்காட்டாக, தம்முடைய பசு

தின்பதற்காகத் தம்முடைய வயல்மருங்கு உள்ள நூற்றுக் கணக்கான பூக்களைப் பறித்துப் போடும் ஒருவர், வழியில் தெருமருங்கே உள்ள மரங்களி லிருந்து வேடிக்கைக்காகக்கூட ஒரு பூவினைப் பறித்துவிடுதல் ஆகாது என்று அவர் கூறினர்; பசுக்களுக்கு உணவுதரும் கட்டாயத்தால் புல்லினை யும் பூண்டினையும் ஒருவர் பறித்துத் தந்தாலும் தரலாம்; அவசியம் இல்லாதபொழுது பிற உயிர் களை அழிக்க முற்படுதல் பாபம் என்றார். மனிதர் உயிர் வாழ்வதற்காக, மனிதர் நோயினின்று விடு படுவதற்காக மாக்களுக்கு நச்சு மருந்துகளைக் கொடுத்துச் சோதித்துப் பார்ப்பதும், மாக்களுக்கு ஊசிபோட்டு நோயினை உண்டாக்குவதும் ஆகிய செய்திகள் தம்மளவில் நல்லனவல்ல என்றார். மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காக, விலங்குகளுடைய உயிர்களையும் பிற பொருள்களி னுடைய உயிர்களையும் துயர்ப்படுத்துவது கட் டாயமா என்று ஒவ்வொரு வேளையும் சிந்தித்துப் பார்த்த பின்னரே அச்செயலில் இறங்கவேண்டும் என்றார். பிற உயிர்ப் பொருள்களுக்குத் துயர்தர வேண்டுவது கட்டாயமாக ஏற்படும்பொழுதுகூட, கூடிய வரையில் அந்தத் துயரினைக் குறைவாக்க முற்பட வேண்டும் என்றார். மருத்துவ மாணவர் முன்னரே அறிந்துள்ள சில செய்திகளைக்கூட விளக்கிக் காட்டுதற்கு மருத்துவ நிலையங்களிற் பல உயிர்ப் பொருள்கள் அழித்துக் காட்டப்படுவது குறித்து அவர் மனம் இரங்கினர். நாம் உயிர்வாழ வேண்டி, நாம் நோய் தீரும்பொருட்டு, நமக்காக

எத்தனையோ விலங்குகள் உயிர் இழந்து விட்டன என்ற எண்ணத்தின் அடிப்படையில் நமக்கும் அவற்றிற்கும் இடை ஓர் அன்புத் தொடர்பு ஏற்படுதல் வேண்டும். இவ்வெண்ணத்தின் அடிப்படையில் விலங்கினங்கட்கு நம்மால் இயன்ற நன்மையை நாம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் பிறக்கும்.

துயருற்றுத் தவிக்கும் ஒரு புழுவோ பூச்சியோ உயிர் தாங்குமாறு ஒருவர் உதவுவார் ஆனால், மாக்களுக்கு மக்கள் முன்னரே கடன்பட்டிருந்ததை ஓரளவு போக்குதற்கு ஒருவர் முயலுகிறார் என்பது கருத்து. மனிதன் நன்மைக்காக ஏதாவது ஒரு விலங்கு துயருற்றுப் பணியாற்றுகின்றது என்றால், மக்கள் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அவ் விலங்கு துயருறுவதைப்பற்றி எண்ணிப்பார்க்க முன்வரவேண்டும். மாக்கள் துயர்ப்படுத்தப்படுவதை ஒருவர் வாளா பார்த்துக்கொண்டு செல்லாமல், நமக்கென்ன என்று இருந்துவிடாமல், அவ்வுயிர்களைக் காப்பதற்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்ய முன்வரவேண்டும். ஒருவர் கண்ணை மூடிக் கொண்டுபோய்விட்டால், எதிரே உள்ள துயரங்கள் நிகழவில்லை என்பது கருத்தாக மாட்டாது. மாக்கள் உலகம் மக்களாற் கொடுமைப்படுத்தப்படுகிறபொழுது, தாகம் உள்ள விலங்கினங்கள் தவித்துக் குரல் எழுப்புவதைக் கேட்பார் இல்லாத பொழுது, கசாப்புக்கடைக் கொடுமைகள் நிறைய உள்ளபொழுது, விலங்குகள் வேடிக்கைக்காகக் குழந்தைகளால் வதைபடும் பொழுது நாம் எல்லாம்

அக்குற்றங்களிற் பங்குபெறுவோம் என்ற கருத்து மக்களுக்கு உண்டாகவேண்டும் என்று பேரறிஞர் விளம்பினர். அழிக்கப்படும் பிற உயிரினங்களுக்கு நம்மால் ஓர் உதவியும் செய்ய முடியவில்லை எனினும், உயிர்வாழும் பிற விலங்குகட்கும் பறவைகட்கும் நம்மால் இயன்ற நன்மை ஏதாவது ஒன்றினை நாம் செய்தல்வேண்டும் என்பதை அவர் விளக்கினர்.

உயிர்களை நன்கு மதிக்கவேண்டும் என்ற காரணத்தால், ஒருவர் தாமே ஈட்டிய செல்வத்தையும், ஒருவர் தாயத்தாற் பெற்ற செல்வத்தையும் சமூக நலனிற்காக உதவ முன்வருவார். செல்வம் என்பது சமூகத்தின் சொத்தாக மதிக்கப்பட வேண்டும். அதனை உடையவர்கள் அதனை ஆண்டு அடக்கிப் பிறருக்காகப் பயன்படுத்துபவராக இருத்தல்வேண்டும். வேலையாட்கள் பலரை வைத்துத் தொழிலாற்றுபவர் ஒருவர் சமூகத்திற்கு ஒரு வகையில் உழைக்கிறார் என்று கூறுதல்கூடும். மற்றொருவர் தம்முடைய சொத்து அனைத்தையும் மக்கள் நலனிற்காக வழங்கிவிடுகின்ற வகையால் தொண்டு ஆற்றக்கூடும். இவ்விரண்டு வகையினருக்கும் இடைப்பட்ட நிலையில் பலர் தொண்டாற்ற முன்வர வேண்டும். அவரவருடைய சுற்றுப்புறங்கட்கும் சூழ்நிலைகட்கும் ஏற்ப, அவரவருடைய பொறுப்புநிலைக்கு ஏற்ப, மக்கள் எவ்வாறுவது தொண்டாற்ற முன்வருதல் வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர் யாது செய்ய வேண்டும் என்று கருதுவதைக்காட்டிலும், தாம் தாம்

தம்மால் தம்மால் இயன்றதைச் செய்ய முன் வருவது மிக்க நலம் பயக்கும். ஒருவர் பொருளினை ஈட்டிப் பெருக்குவதாற் பணியாற்ற முடியுமா, அன்றிப் பொருளினைப் பிறர்க்கென அடியோடு விட்டுவிடுவதால் தொண்டாற்ற முடியுமா என்று ஆராய்ந்துகொண்டு இருப்பதைக் காட்டிலும், எவ்வாருவது பொருளைப் பொது நலத்திற்குப் பல வழிகளிற் பயன்படுமாறு செய்தல் நல்லது. இதனால், இருளில் உழலுவோர் பலர் ஒளியுறுவர் என்பது வெளிப்படை.

உயிர்களை மதிக்கவேண்டும் என்ற காரணத்தால், ஒருவர் சில வேளைகளில் தம்முடைய உரிமைகளைக்கூட விட்டுக்கொடுத்தல் வேண்டுவதாய் இருக்கும். பிற உயிர்களை மதிக்கும் காரணத்தால், பிற உயிர்களைப்பற்றி எண்ணும் காரணத்தால் ஒருவர் கைக்கு எட்டிய பழங்களை எல்லாம் பறித்து விடுதல் கூடாது என்ற எண்ணம் பெறுவர். அதனால், சாதாரண மக்கட்கு அறியாமை என்று தோன்றக்கூடிய செயலை ஒருவர் சில வேளைகளிற் செய்ய முற்படலாம். சாதாரண மக்களால் அவ மதிக்கத் தக்கதாக "உயிரின் தொழுதகைமை" இருந்தாலும், அது சிறந்தது என்பதில் ஐயமில்லை என்று பல வேளைகளிற் சுவைட்சர் சுவைப்பட எடுத்து மொழிந்துள்ளார். பிற உயிர்களை மதிக்க வேண்டும் என்ற தத்துவத்தால், பொருள்வசதி உள்ளவர்கட்கும் இன்ப வாழ்க்கை உடையவர்கட்கும் ஒரு பெரும்பொறுப்பு உண்டாகிறது. ஒருவர் எவ்வளவிற்கு எவ்வளவு மகிழ்ச்சி உடைய

வராக உள்ளாரோ, அவ்வளவிற்கு அவ்வளவு உலகிற் பிறருக்கு அவர் கடமை உடையவர் என்ற எண்ணம் தோற்றுதல் வேண்டும். உழைப்பால், உடல் நலத்தால், மதிநலத்தால், இனிய இல்வாழ்க்கையால் சிறப்படைந்திருப்பவர்கள் பிறருக்கு ஏதாவது ஒரு நன்மை செய்யவேண்டிய கடமை உடையவர்கள் என்பதை உணர்தல் வேண்டும்; தம்மை ஒத்த வசதி பெருதவர்கட்கு உதவவேண்டிய கடமை உண்டு என்பதை அவர்கள் உணர்தல் வேண்டும். இக்கருத்தும் இருளில் உழலுவோர்க்கு ஒளியளிக்கும் என்பது தேற்றம்.

பொருள் உடையவர்கள்தாம் பிறர்க்கு உதவ வேண்டும் என்பது கருத்தன்று. பொருள் இல்லாதவர்களும் தம்முடைய நேரத்தில், அல்லது தம்முடைய ஓய்வு நேரத்தில், ஒரு பகுதியைப் பிறர் நன்மைக்காகச் செலவிட முன்வருதல் வேண்டும். ஏதாவது ஒரு வகையில் மக்களொடு மக்களாகத் தாமும் வாழவேண்டும் என்ற உணர்ச்சி உலகினரிடைப் பெருகுதல் வேண்டும். ஒருவர் சிந்தித்துப் பார்ப்பாரே ஆயின், அவர் செய்யக் கூடிய பொதுப்பணி தானே விளங்கும். பொதுமக்களுடைய நலங்கருதி ஒருவர் உழைக்கக்கூடிய வகைகள் உலகில் எத்துணையோ பல உள. துயருற்ற எளிய மக்களும், நோய்ப்பட்ட ஏழை மக்களும், தவிக்கும் சிறுவர்களும் எத்தனையோ பேர் உதவி பெறக்கூடிய நிலையில் இருக்கிருர்கள். அழுக்காய் இருக்கின்ற இடங்களைத் துப்புரவாக்கி, மக்கள்வாழ் சேரிகளை மகிழ்ச்சி நிரம்பிய ஊராக்கக்

கூடிய பணியில் ஒருவர் ஈடுபடலாம். அறியாமை தாண்டவமாடும் இடங்களில், கற்ற ஒருவர் தமது நேரத்தில் ஒரு சிறு பகுதியைத் தந்து கற்றிலா மாந்தர்க்கு வழிகாட்டுதல் கூடும். மருத்துவ இல்லங்களில் தங்கி இருக்கும் ஒருவர் ஏதாவது கதை கேட்கவோ, ஏதாவது கடிதம் எழுதவோ விரும்புவாரானல், அவர்க்கு உதவி செய்ய மாண வர் சிலர் முன்வருதல் கூடும். ஒரு மகன் அல்லது ஒரு மகள் பிறருக்கு உதவி செய்யக்கூடிய வகை கள் பற்பல, பற்பல. ஒவ்வொருவரும் தத்தமக் காக வேலைசெய்து பொருள் ஈட்டும்பொழுது, பிறரைப்பற்றியும் சிந்தித்து, பிறருக்கு ஒன்று உதவக்கூடிய வகையில் தொண்டாற்றக்கூடிய தனைப் பொழுதுபோக்கு வேலையாகவாவது அமைத்துக்கொள்ள முன்வர வேண்டும். திருவள் ளுவர் "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று கூறினர் அல்லரோ? பிறருக்காக உழைப் பதனல், ஒருவர் உயிரினை இழக்க நேரிட்டாலும், உண்மையில் உயிர் இழக்கப்பட வில்லை; உண்மை யில் உயிர் உள்ளதாகின்றது என்ற பெரியார் ஒருவரின் வாக்கு உண்மை என்பதைச் சுவைட்சர் பல இடங்களில் எடுத்து விளக்கினர். சாவு இன் னுதது. இன்னுததை இனியது என்று ஒருவர் கொள்வாரே யானல், அவரைப் பகைவரும் போற்றுவர் என்றார் திருவள்ளுவர். இத்தகையவ ருடைய வாழ்க்கை இருள்சூழ் உலகிடை ஒளியாக விளங்கும் என்பது தெளிவு.

முழு நாகரீகம் என்பது புதியனவாகக் கண்டு

பிடிக்கப்பட்டுள்ள கருவிகளால் மட்டும் அமைந்து விடுவதொன்று அன்று. முழு நாகரீகம் மக்களுடைய ஆன்ம வளர்ச்சியை ஒட்டியதாகும். ஆன்ம வளர்ச்சி இன்றிப் புதுப்பொருள்கள் கண்டுபிடிக்கும் அளவிலேயே உலகம் செல்லுமாளுல், அது முழு நாகரீகம் அடைந்துவிட்டது என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கமாட்டாது. நம்முடைய அறிவினைப் பெருக்கிக்கொள்வதாலும், நம்முடைய ஆற்றலைப் பன்மடங்கு ஆக்கிக்கொள் வதாலும் நாகரீகம் வளர்வதுபோலத் தோற்றும்; மக்களினம் வாழக்கூடிய சமுதாய அமைப்பின் வளர்ச்சியால் நாகரீகம் வளர்வதுபோலத் தோற்றும். ஆனல், ஆன்ம வளர்ச்சியின்றி, அறிவிளுலும் ஆற்றலிளுலும் சமுதாய அமைப்பிளுலும் பயன் இல்லை. எனவே, முழுமையான நாகரீகம் என்பது ஆன்ம வளர்ச்சியோடு தொடர்புடையதாய் இருக்கவேண்டும் என்று முனிவர் சுவைட்சர் முடிவுகட்டிஞர்.

சீன தேசத்துப் பேரறிஞர் ஒருவர் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன் எழுதிய கதை ஒன்றில் தோட்டக்காரன் ஒருவன் பேசப்படுகிருன். அவன் குடத்தைத் தூக்கிக்கொண்டு, மீண்டும் மீண்டும் தண்ணீர்த் துறைக்குப் போய்க்கொண்டிருந்தான். அவனை நோக்கி, மாணவன் ஒருவன் “உன்னுடைய வேலையைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா?” என்று கேட்டான். அதற்கு அந்தத் தோட்டக்காரன், “எப்படிக் குறைக்க முடியும்?” என்று கேட்க, அவன் “ஓர் ஏற்றம்

அமைத்துக்கொண்டு, முன்னும் பின்னும் அழுத்து தலினால், எளிதில் தண்ணீர் கிடைக்கப்பெறலாமே'' என்று பதில் உரைத்தான். தோட்டக்காரன், “ஓர் இயந்திரத்தை நான் பயன்படுத்துவதினால் இயந் திரத்தை ஒத்த உள்ளம் எனக்கு நாளடைவில் உண்டாகிவிடும். நான் மனிதனாக இருக்க விரும்பு கிறேன்; பொறியாக மாற விரும்பவில்லை'' என்று கூறினான். இவ்வாறு அமைந்துள்ள சீனக் கதை யில் வரும் தோட்டக்காரன் எதிர்பார்த்தவாறு, மக் கள் பலர் வெறும் பொறிகளாக மாறிவிட்டார்கள் என்று சுவைட்சர் கூறி, மக்கள் மக்களாக வாழ முற்படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.

விஞ்ஞானத் துறையிற் புதியனவாகச் செய்யப் படும் ஆராய்ச்சிகளின் பயனாலும், புதியனவாக உண்டாக்கப்படும் பொருள்களினாலும் மக்கள் உயி ருடன் இருப்பதற்கே இடையூறுகள் பல ஏற்பட்டுள என்று சுவைட்சர் இரங்குவது உண்டு. விஞ் ஞானத்தின் வளர்ச்சி ஒரு பக்கம் இவ்வாறு இருளுடையதாய் இருப்பதுபற்றி அவர் அடிக்கடி வருந்துவது உண்டு. உலகத்திற் புது நாகரிக விளைவுகள் பல தோற்றி இருப்பினும், மனிதன் மனிதனாக இருத்தல் வேண்டும் என்பதைப் பல இடங்களிற் சுவைட்சர் வற்புறுத்தியுள்ளார். மனி தன் மரமாகி விடக்கூடாது, கல்லாகி விடக்கூடாது, பொறியாகி விடக்கூடாது; உணர்ச்சியுள்ள மனித வுள்ளம் படைத்தவனாக, செயலாற்றும் திறமை உள்ளவனாக, பிறர் நலத்திற்காக உழைக்கும் வீர னாக இருக்கவேண்டும் என்று அவர் வற்புறுத்தி

யுள்ளார். தனக்கு அறிவு நிரம்பிவிட்டது என்ற செருக்கினையும், தனக்கு ஆற்றல் பெருகிவிட்டது என்ற தருக்கினையும் உடையவனாக மனிதன் இப்பொழுது திரிந்துகொண்டு இருக்கிறான். மனிதன் தன் நெஞ்சிற் பொய்க்காமல், அற மனிதனாக வாழ்தல் வேண்டும் என்றும், அவனைச் சுற்றிலும் பல்வேறு உயிர்ப்பொருள்களிடத்து இரக்கமும் நேயமும் கொள்ளுதல் வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

நாகரீகம் என்பது படித்த மக்கள் சிலருடைய தனி உரிமை என்றும், படியாத பாமர மக்கள் படித்தவர் நாகரீகம் அடைதற்கு வாயிலாக உள்ளார்கள் என்றும் கருதுஞ் சிலருடைய கருத்து சுவைட்சருக்கு அறவே பொருந்துவது இல்லை. உலகில் வாழும் ஒவ்வொருவரும் தமக்காகத் தமக்காக வாழும் உரிமை உடையவர் என்பதனையும், ஒவ்வொருவரும் தத்தம் அளவில் மேன்மை உடையவராகப் படைக்கப்பட்டுள்ளார் என்பதனையும், ஒருவர் உயரத்தில் ஏறுதற்குப் பிறர் படிகள் போலப் படைக்கப்பட்டுள்ளாரல்லர் என்பதனையும், ஒருவர் வாழ்வதற்குப் பிறர் நோகவேண்டும் அல்லது சாகவேண்டும் எனப் படைக்கப்பட்டுள்ளாரல்லர் என்பதனையும் சுவைட்சர் வற்புறுத்தியுள்ளார். இக்கருத்துக்கள் எல்லாம் "உயிரின் தொழுதகைமை" என்ற அவருடைய கொள்கையால் விளக்கம் பெறுகின்றன.

புதியனவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல்வேறு பொருள்களால் மனிதன் ஒருவன் மற்றொரு

வனை அடிமைப்படுத்திக்கொள்ளுதற்கு வழிவகை தேடியுள்ளான். ஆயிரம் இயந்திரங்களை யுடைய மனிதன் அந்த இயந்திரங்களை இயக்குகின்ற வர்கள்மீது ஆதிக்கஞ் செலுத்துகின்றான். புதுக் கண்டுபிடிப்புக்களால் மக்கள் நூறுயிரவர் ஒரு பொத்தான் அசைவினால் ஒரு கணத்தில் அழிந்து படக்கூடிய நிலைமை உண்டாகியிருப்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாவா எனச் சுவைட்சர் கேட்ப துண்டு. இக் கொடிய ஆற்றல் நமக்கு வருவதாய் இருந்தால், அதனை வேண்டாம் என விடுப்பதற் குரிய செவ்விய மனத்தை உண்டாக்கிக்கொள்ளு தல் வேண்டும் என்று அவர் பல இடங்களிற் சொல்லியுள்ளார். ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட் டினை அழிக்கக்கூடாது என்ற எண்ணத்தை வலுப் பெறச் செய்துகொள்ளக்கூடிய பொறுமை மனப் பான்மையைத்தான் வளர்த்தல்வேண்டும் என் பதை அழகுபடப் பல வேளைகளில் அவர் எடுத்து மொழிந்துள்ளார். அத்தகைய பண்பாடு "உயி ரினத்தின் தொழுதகைமை" என்ற கொள்கையால் நிலையுறும். உயிர்களிடத்து வைக்கக்கூடிய பெரு மதிப்பினால், பிற நாடுகளையும் மக்கள் பிறரையும் நம் நாடுகளாகவும், நம் மக்களாகவும் மதிக்கும் எண்ணம் உண்டாகி, உலகம் முழுதும் ஓர் இனம் என்ற கொள்கை வலியுறும் என்பது அவர் நோக்கம். எனவே, உலக மக்கள் ஒற்றுமையுற்று, வளர்ச்சியுடையவராய் வாழ்தற்குச் சுவைட்ச ருடைய வாழ்க்கை வரலாறும், அவருடைய அற வுரைகளும் பெரிதும் பயன்படும் என்பது உறுதி.